# புது முறை

# நடுமகள் வாசகம்

(திருந்திய பதிப்பு)

## முதற் புத்தகம்—சிறப்புப் பகுதி

**(முதல் பாரத்திற்கு உரியது)**


ஆசிரியர்கள் :

**வித்துவான் K. C. வன்மீகநாதன், M.A., B.O.L., L.T.,**

*தமிழ்ப் பேராசிரியர், அரசினர் கலைக் கல்லூரி,*

*சென்னை.*

ARUNUGA CHETTIAR

**வித்துவான் E. M. ஆறுமுக செட்டியார்**

*தலைமைத் தமிழாசிரியர்,*

*ஸர் பி. தியாகராய செட்டியார் உயர்நிலைப்பள்ளி,*

*சென்னை,*

பதிப்பாசிரியர் :

**K. C. முத்துராமன்**



## ஓரியண்டல் பப்ளிஷிங் ஹவுஸ்

**286, எஸ்பிளனேட் (அப்பா பில்டிங்ஸ்) சென்னை—1.**



*காபிரைட்]*



*1951*

*[விலை அணா 8.*

முதற் பதிப்பு : 1951

அரசியலார் 26–6–1951-ல் வெளியிட்ட புதிய
பாடவியலுக்கு ஏற்றவாறு திருத்தி எழுதப்பெற்றது.

Printed at the B. N. Press, Mount Road, Madras.

# முகவுரை

நம் தமிழ் நாட்டு மாணவர்கள் தமிழ்ச் சுவையை நன்கு நுகர்ந்து, இன்புறுமாறு செய்வது நம்மனோர் தலையாய கடமையாகும். இக்கருத்தினைக் கொண்ட அரசியலார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உயர்நிலைப்பள்ளி மாணவர்கட்குரிய தமிழ்ப் பாடவியலைச் (Syllabus) சீரிய முறையில் திருத்தி, முடிவு கட்டி வெளியிட்டனர். அப்பாடவியலை ஒட்டி எழுதப்பெற்ற '**புது முறை நாமகள் வாசகம்**' என்னும் நூலிலிருந்து பாடங்களைப் பொறுக்கி யெடுத்து, அண்மையில் (26-6-1951) வெளிவந்த புதிய பாடவியலுக்கு ஏற்றவாறு திருத்தி யமைத்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இதன்கண் அமைந்துள்ள சில தனிப்பட்ட இயல்புகளும், நோக்கங்களும் பின் வருவனவாம் :—

1. உரைநடைப் பகுதியின் நடை, எளியதிலிருந்து படிப்படியாகக் கடின நிலைக்குச் செல்கின்றது.

2. பொருள்களின் சுவைக்கேற்பப் பாடங்கள் நிரல்பட அமைக்கப்பட்டுள்ளன.

3. 'இலக்கணத்திற்கும் உரைநடைப் பாடத்திற்கும் நெருங்கிய தொடர்பு வேண்டும் ; நடை முறையில் பயன்படக்கூடிய இலக்கணமே (Functional Grammar) மாணவர்கட்குக் கற்பிக்கப்படவேண்டும்' என்று புதுக் கல்வி முறை கூறுகின்றது. அக்கருத்தினை உட்கொண்டு, இலக்கண வகுப்பிற்கு உதவுமாறு, ஈண்டு மொழிப் பயிற்சிகள் தரப்பட்டுள்ளன.

4. தற்காலக் கல்வி முறையில் **புது முறை வினாக்கள் (New Type Tests)** பெரிதும் வற்புறுத்தப்படுகின்றன. அத்தகைய வினாக்களே '**சிறுவிடை வினாக்கள்**' என்னும் பகுதியில் இடம் பெற்றுள்ளன.

5. ஈண்டு அமைந்துள்ள கட்டுரையாக்கப் பயிற்சிகள், மாணவர்களுடைய கட்டுரை எழுதும் ஆற்றலை வளர்ப்பதற்கு ஏற்ற முறையில் இயைந்துள்ளன.

6. **அகராதி** பார்க்கப் பயிற்சி பெறுவதற்கேற்ற வாய்ப்புகள் நம் மாணவர்கட்கு இல்லை. அக்குறையை நீக்கக் கருதியே ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் '**பொருள் காண்க**'

என்ற பகுதி அமைந்துள்ளது. அச்சொற்களுக்குப் பொருள்கள் அகராதி வரிசையில், புத்தகத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் துணைகொண்டு, மாணவர்கள் அகராதி பார்க்கப் பயிற்சி பெறலாம்.

7. ஆங்கிலக் கல்வி முறை **இளைஞர்களின் சொற்பொழிவுகளுக்கு** (Little men's Lectures) ஏற்ற வாய்ப்பு இருக்க வேண்டும் என்கிறது. அக்கருத்தினை உட்கொண்டு, ஐந்து நிமிஷப் பேச்சிற்கு உரிய பயிற்சிகள் 'கட்டுரையாக்கம்' என்ற தலைப்பில் தரப்பட்டுள்ளன.

8. உரைநடைப் பாடங்களிற் சில, சங்க நூல்களோடும், இடைக்கால நூல்களோடும் தொடர்புள்ளன. அப்பாடங்கள், அவற்றோடு தொடர்புள்ள நூல்களைப் படிக்க வேண்டும் என்னும் அவாவினை மாணவர்கட்கு எழுப்பும் விதத்தில் எழுதப்பட்டுள்ளன.

9. செய்யுட் பகுதியில் அமைந்துள்ள செய்யுட்கள் எளியவை; இனியவை; சுவை மிக்கவை; மாணவர்களுக்கு ஏற்றவை.

10. முடிவாகக் கூறுமிடத்து, மாணவர்களின் இயல்பூக்கத்திற்கும் (Instinct), உள்ளப் பண்பிற்கும் ஏற்ற பாடங்களே இயன்ற வரையில் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட நோக்கங்களுள் சிலவேனும் நிறைவேற அருள் செய்யுமாறு இறைவனை இறைஞ்சுகின்றேன். **புது முறை நாமகள் வாசகத்தைப்** படிக்கவும், நாமகளின் அருளைப்பெறவும் மாணவர்கட்கு வாய்ப்பு அளிக்குமாறு தமிழாசிரியர்களையும், தலைமையாசிரியர்களையும் வேண்டுகின்றேன்.

சென்னை,
26—11—51

**K. C. முத்துராமன்.**

# உள்ளுறை

## உரைநடைப் பகுதி


| பாடம் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | குடிமையும் கடமையும் | ... | 1 |
| 2. | கலையும் கலைச் செல்வரும் | ... | 8 |
| 3. | பசிப்பிணி மருந்து | ... | 14 |
| 4. | எங்கள் இன்பப் பயணம் | ... | 20 |
| 5. | தலைக் கொடை வள்ளல் | ... | 26 |
| 6. | வீண் செலவு செய்த மகன் | ... | 32 |


## செய்யுட் பகுதி


**I. கடவுள் வாழ்த்து :**

சகல கலாவல்லி மாலை ... 39

**II. நீதிப் பகுதி :**

1. நீதி வெண்பா ... 40
2. நான்மணிக் கடிகை ... 41

**III. வரலாற்றுப் பகுதி :**

பஞ்சதந்திரம் ... 43

**IV. வருணனைப் பகுதி** ... 45

**V. தனிப் பாடல்கள்** ... 46

**அகராதி** ... 47

"வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டெம்மைச்
சரியா சனம்வைத்த தாய்"

# புது முறை
# நாமகள் வாசகம்


---

(திருந்திய பதிப்பு)

## முதற் புத்தகம்—(சிறப்புப் பகுதி)

### 1. குடிமையும் கடமையும்

நம்முடைய பாரத நாட்டின் சரித்திரத்தில் 1947-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், 15-ஆம் நாள் மிகவும் முக்கியமான நாளாகும். அந்நாளில் தான் நமக்குச் சுதந்திரம் கிடைத்தது.



மகாத்மா காந்தி

அன்று வரையில் நம்மை ஆங்கிலர் ஆண்டு வந்தனர். அந்த நன்னுள் முதல் நமது பிரதிநிதிகளே நம்மை ஆளத் தொடங்கிவிட்டனர். 1950-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 26-ஆம் நாள் அன்று நம் இந்தியா ஒரு பூரண சுதந்திர ஜனநாயகக் குடியரசு ஆகிவிட்டது. நம் நாடு இந்நிலையை அடைவதற்கு முயன்ற பெரியார்கள் பலர். அவர்களுள் சிறப்பாக முன்னணியில் நின்றவர் நமது இந்தியாவின் தந்தையாகிய காந்திஜி என்பது உங்களுக்குத் தெரியும். அவரும், ஏனைய பெரியோர்களும் கூறியுள்ள பொருளுரைகளை நாம மறத்தல் கூடாது.

குடியரசு நிலையை அடைந்துள்ள இந்தியாவில் வாழும் நமக்கு இனிக் குறையில்லை. நாம் நல்ல குடிகளாக இருந்தால் அரசாங்கம் நமக்கு எல்லாவித நன்மைகளையும் செய்வது எளிது. ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைத் தவறாது செய்ய

வேண்டும். நம் கடமைகளை நாம் செய்யத் தவறினால் அரசாங்கத்தால் தன் காரியங்களை நன்றாகச் செய்ய முடியாது. நல்ல குடிகளின் பண்புகளையும், கடமைகளையும் சுருக்கமாக இப்பாடத்தில் படிப்போம்.

ஆதிகாலம் முதல் மக்கள் ஒருவரை ஒருவர் அண்டியே பிழைத்து வருகின்றனர். நாம் நமக்கு வேண்டிய எல்லாவற்றையும் தயாரித்துக் கொள்ள முடியாது. நாம் பல பொருள்களுக்குப் பிறரை எதிர்பார்த்தே தீரவேண்டியுள்ளது. மக்கள் கூட்டம் கூட்டமாகவும், இனம் இனமாகவும் வசிக்கத் தொடங்கியதன் காரணத்தை ஆராய்ந்து பாருங்கள். கூடி வாழ்தலினால் எவ்வளவோ நன்மைகள் உண்டாகும். அதனால் தான் குடும்பம், கிராமம், பட்டணம் முதலியவை ஏற்பட்டன. ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ள வேண்டும் என்று திருவள்ளுவர் போன்ற பெரியார்கள் வற்புறுத்தியுள்ளனர். ஆகவே ஒற்றுமையுணர்ச்சி, உதவி செய்யும் மனப்பான்மை முதலியன நம்மிடம் நன்கு அமைந்திருக்க வேண்டும்.

நாம் நமது தினசரி வாழ்வில் பிறருக்கு எவ்வளவோ நன்மைகளையும் உதவிகளையும் செய்யலாம். புகை வண்டி, மின்சார வண்டி, பஸ் முதலியவற்றில் பிரயாணம் செய்யும் பொழுது பிறர்க்கு உதவி செய்ய எவ்வளவோ வாய்ப்புகள் இருக்கின்றன. புகைவண்டியில் செல்கின்ற சிலர், தம் மூட்டை முடிச்சுகளை உட்செல்லும் பாதையிலேயே வைத்துவிடுகின்றனர். அதனால் புகை வண்டியில் ஏறுகின்றவர்களுக்கு எவ்வளவு கஷ்டம் உண்டாகிறது! வயது முதிர்ந்த சிலர் கால் தடுக்கி விழுகிறார்கள். சிலர் வண்டிக்குள் ஏற முடியாது தவிக்கிறார்கள் ; நிற்க இடமில்லாமல் துன்புறுகிறார்கள். அமர்வதற்குரிய பலகைகளில் சிலர் படுத்துக்கொண்டு விடுகிறார்கள். யாரேனும் அவர்களை எழுந்து அமருமாறு கூறினால் அவர்களுக்குக் கோபம் வருகிறது. இவ்வாறு ஒருவர் தம்முடைய சுகத்திலேயே கண்ணாக இருப்பது கூடாது. பிரயாணம் செய்யும் பொழுது வயது முதிர்ந்தவர்களுக்கும், குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும் தாய்மார்களுக்கும் நாம் அமர்ந்திருக்கும் இடத்தைக் கொடுத்து உதவிசெய்ய வேண்டும். இஃது இளைஞர்களின் தலையாய கடமையாகும்.

நீங்கள் அனைவரும் சாலை விதிகளை நன்கு அறிந்து, அவற்றின்படி நடக்க வேண்டும். பெரிய நகரங்களில், வீதிகளின் இருபுறங்களிலும் நடை பாதைகள் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றில் தான் நாம் நடந்து செல்லவேண்டும். நடைபாதையை விடுத்துக் கீழே இறங்கி நடப்பதால் மோட்டார், வண்டி முதலியவற்றால் நமக்கு ஆபத்துகள் நேரிடலாம். உங்களுடைய பொது விஞ்ஞானப் புத்தகத்தில் சாலை விதிகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சைக்கிள் போன்ற வாகனங்களில் செல்கின்றவர்கள் அவ்விதிகளின்படி தவறாது நடக்க வேண்டும்.

வீதிகளில் வாழைப்பழத் தோல்களை எறிவதால் எவ்வளவு தீங்கு ஏற்படும் என்று சிந்தித்துப் பாருங்கள். நடந்து போகின்றவர்கள் அவற்றின்மேல் கால் வைத்தால் வழுக்கிக் கீழே விழுந்துவிடுவார்கள். கண்ட இடங்களில் துப்புவது கெட்ட வழக்கமாகும். நடக்கும் இடங்களை இவ்வாறு அசுத்தம் செய்தால் நோய் எளிதில் விரைவாகப் பரவும். சிலர் தம் வீட்டுக் குப்பை கூளங்களைப் பக்கத்து வீட்டின் புறத்தே எறிகின்றனர். குப்பை கூளங்களைக் குப்பைத் தொட்டிகளிலேயே போடுவதை நீங்கள் வழக்கமாகக் கொள்ள வேண்டும். சமூகச் சுகாதார வழிகளை ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டும். தெருக்களில் உள்ள பொதுக் குழாய்களையும், பொதுக் கிணறுகளையும் அசுத்தப்படுத்தக் கூடாது. எல்லோரும் சுகாதாரப் பழக்கங்களைக் கைக்கொள்ள வேண்டும்.

நாம் அனைவரும் ஒழுங்கின்படியே நடக்க வேண்டும். சென்ற சில ஆண்டுகளாக நம் நாட்டின் சில இடங்களில், மக்கள் 'க்யூ'வில் நிற்கும் முறை வழக்கத்தில் இருந்துவருகிறது. இஃது ஒரு நல்ல ஒழுங்குப் பயிற்சி ஆகும். பின்னால் வந்தவர்கள், எல்லோருக்கும் முன்னதாகச் சென்று நிற்க முயல்வது கெட்ட வழக்கமாகும். டிக்கெட்டு வாங்கும் இடங்களிலும், சில சாமான்கள் வாங்கும் இடங்களிலும், பஸ்ஸில் ஏறும் இடங்களிலும் நீண்ட 'க்யூ' நிற்பதை நீங்கள் பார்த்திருக்கலாம், இவ்வாறு ஒழுங்காக நிற்பதால் பல நன்மைகள் உண்டாகின்றன. அதிலும் முக்கியமாக, பஸ்ஸில் ஏற நின்றுகொண்டிருப்பவர்கள் 'க்யூ' அமைப்பில் நிற்பது மிக நல்லது. இல்லை

யேல் உடல் வலியும், தந்திரமும் மிக்கவர்கள் பஸ்ஸில் ஏறி விடுவர். நெடுநேரமாகக் காத்திருப்போருக்கு இதனால் எவ்வளவு துன்பம் வரும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எல்லோரும் உண்மை பேசுவதை விரதமாகக் கொள்ள வேண்டும். "அகத்தூய்மை வாய்மையால் காணப்படும்" என்று திருவள்ளுவர் கூறுகின்றார். நமது மனத்தை உண்மையே சுத்தம் செய்யும். அந்நிய நாடுகளுள் ஒன்றில் ஒரு சிறந்த வழக்கம் இருக்கிறதாம். அது பின் வருமாறு :—நம் நாட்டில் பத்திரிகைகளைத் தெருக்களில் விற்றுச் செல்லும் வழக்கம் இருப்பதுபோல் அந்நாட்டில் இல்லை. அந்நாட்டில் மக்கள் கூடும் இடங்களில் பொது மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அன்றன்று வந்த பத்திரிகைகள் யாவும் வைக்கப் பட்டிருக்கும். ஒவ்வொரு பத்திரிகையிலும் பல பிரதிகள் இருக்கும். பத்திரிகையின் தலைப்பில் அதனது விலை போடப் பட்டிருக்கும். அவற்றின் பக்கத்தில் ஓர் உண்டியலும் இருக்கும். பத்திரிகை விற்பதற்கு அங்கு யாரும் இருக்கமாட்டார்கள். அவ்வழியே செல்கின்றவர்க்குப் பத்திரிகைகள் வேண்டியிருந்தால் அவர்கள் அம்மன்றங்களில் புகுவர் ; தமக்கு வேண்டிய பத்திரிகைகளை எடுத்துக்கொள்வர் ; அவற்றிற்குரிய பணத்தை உண்டியல்களில் போடாமல் செல்வதே இல்லையாம்.

இஃதன்றோ நல்லொழுக்கம் ! இத்தகைய பலவித முறைகள் ஒரு நாட்டில் அமைந்து, ஒழுங்காக நடைபெறுமானால் அந் நாட்டு அரசாங்கத்திற்கு எவ்வளவு நன்மைகள் உண்டாகும் ! இப்படிப்பட்ட ஒழுங்கு முறைகள் அமைந்துள்ள நாட்டில் குழப்பங்களும், கலகங்களும் நடைபெறா. எங்கும் அமைதி நிலவும்.

நாம் நமக்குரிய உரிமைகளை விடுதல் கூடாது. பஸ், டிராம் முதலியவற்றில் பிரயாணம் செய்யுங்கால், டிக்கெட்டுகளை நாமாகக் கேட்டு வாங்கிக்கொள்ள வேண்டும். பக்கத்தில் அமர்ந்திருப்பவர் டிக்கெட்டு வாங்க மறந்திருந்தால் அவருக்கு நினைவூட்ட வேண்டும். தற்காலத்துப் போக்குவரவுச் சாதனங்களில் பல, அரசாங்கத்தாலேயே நடத்தப்படுகின்றன. ஆகவே அச்சாதனங்கள் யாவும் பொதுமக்களாகிய நம்முடையனவே

ஆகும். அவற்றிற்கு வரும் நஷ்டங்கள் நம்மையே சாரும். ஆகவே நாம் இதனை நன்கு நினைவில் வைக்க வேண்டும்.

நகரங்களில் பொது மக்களின் நலத்திற்காக அரசாங்கத்தார் பல சாதனங்களை அமைத்திருக்கின்றனர். தெருக்களில் மின்சார விளக்குகள் போடப்பட்டுள்ளன. பொது மக்களுக்கென்று தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பாதுகாப்பது பொது மக்களின் கடமையாகும். தோட்டங்களில் போடப்பட்டிருக்கும் பலகைகள், சிமென்ட் மேடைகள் முதலியவற்றை யாரேனும் அசுத்தம் செய்தால், அவற்றால் விளையும் தீமைகளை அவருக்கு நயமாக எடுத்துரைக்க வேண்டும். தோட்டங்களில் உள்ள தாவரங்களைச் சிலர் விளையாட்டிற்காக நறுக்கியும், வேரோடு களைந்தும் பாழ்படுத்துவர். அவ்வாறு செய்கிறவர்களைத் தடுத்து, அவர்களது செய்கை தவறு என்பதை எடுத்துச் சொல்லுதல் மாணவர்களின் கடமை ஆகும்.

நாம் அனைவரும் நமது நாட்டுக் கொடிக்கு வணக்கம் செலுத்த வேண்டும். நமது சுதந்திர இந்தியாவின் கொடியில் காவி, வெண்மை, பச்சை ஆகிய மூன்று நிறங்கள் அமைந்துள்ளன என்பது உங்களுக்குத் தெரியும். நம் நாட்டிற்குச் சுதந்திரம் கிடைப்பதற்காக இரத்தத்தைச் சிந்திப் பாடுபட்ட தியாகிகளைக் காவி நிறம் குறிப்பிடும். அந்தக் காவி நிறத்தைக் கண்டவுடன் நம் தேசத் தலைவர்களின் தியாகச் செயல்கள் நம்முடைய நினைவுக்கு வரும். அடுத்துள்ள வெண்மை நிறம் அமைதியைக் குறிப்பிடும். நாம் கள்ளமில்லாத உள்ளத்துடன் இருக்கவேண்டும் என்பதை வெள்ளைநிறம் நமக்குக் கூறுகிறது. நாட்டில் அமைதி நிலவவேண்டும் என்பதையும் நமக்கு அந்நிறம் குறிப்பிடுகிறது. அதனிடம் அமைந்துள்ள அசோக சக்கரம் நமது நாட்டைச் சிறப்புடன் ஒரு குடைக்கீழ் அரசாண்ட அசோகரது ஆட்சியை நமக்கு நினைவூட்டும். இறுதியிலுள்ள பசுமை நிறம் நம் நாட்டுச் செழிப்பைக் குறிப்பிடும். இந்தியாவில் விவசாயத்திற்கு ஏற்ற வசதிகள் அமைந்துள்ளன; தாதுப் பொருள்கள் பல கிடைக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி, இந்தியா செல்வ நிலையில் சிறந்து விளங்குமாறு செய்வது நம் கடமை என்பதை அப்பசுமை நிறம் வெளிப்படுத்துகின்றது.

அம்மூன்று நிறங்களும், அசோக சக்கரமும் நமக்குக் குறிப்பிடும் செய்திகள் பலவுள. அவற்றை நீங்கள் உணர்ந்து பிறர்க்கும் கூறவேண்டும். நம் பாரத நாட்டை உலகத்திற் சிறந்த நாடாகச் செய்வது மாணவர்களுடைய கடமையாகும். நீங்கள் உங்களுடைய கடமைகள், உரிமைகள் முதலியவற்றை உணர்ந்து, சிறந்த குடிமக்களாக வாழ்ந்து, பிறர்க்கும் வழிகாட்ட வேண்டும். அப்பொழுது நம் நாடு உலகத்திலேயே உயர்ந்த நாடாக விளங்கும்; பொன்னுடாகத் திகழும்.

## பொருள் காண்க

**பண்பு, ஆதி, அண்டி, வாய்ப்பு, அமர்தல், புறம், தூய்மை, வாய்மை, மன்றம், நிலவும்.**

## சிறுவிடை வினாக்கள்

1. நமது நாட்டிற்குச் சுதந்திரம் என்று கிடைத்தது?

2. பஸ்ஸில் செல்லும்பொழுது நாம் பிறர்க்குச் செய்யக் கூடிய சிறு உதவிகளுள் மூன்றினை எழுதுக.

3. சாலை விதிகளுள் இரண்டினை வரைக.

4. வாழைப்பழத் தோல்களை ஏன் தெருவில் எறியக் கூடாது?

5. வீட்டில் சேரும் குப்பை கூளங்களை என்ன செய்ய வேண்டும்? ஏன்?

6. 'க்யூ' அமைப்பு என்றால் என்ன?

7. அகத்தூய்மை என்பது யாது? அகத்தைத் தூய்மை செய்வது எப்படி?

8. பஸ், டிராம் முதலியவற்றில் டிக்கெட்டு வாங்காமல் ஏன் பிரயாணம் செய்யக் கூடாது?

9. மாணவர்களின் கடமைகளுள் நான்கினை எழுதுக.

10. நமது பாரத நாட்டுக் கொடியிலுள்ள மூன்று நிறங்களும் எவற்றைக் குறிப்பிடுகின்றன?

## கட்டுரையாக்கம்

1. கூடி வாழ்தலினால் விளையும் நன்மைகளைப் பத்துவரிகளில் எழுதுக.

2. பிரயாணம் செய்யும் பொழுது நாம் பிறர்க்குச் செய்யக் கூடிய நன்மைகளைப்பற்றி, உங்கள் வகுப்பு மாணவர் சங்கத்தில், ஐந்து நிமிஷப் பேச்சொன்று நிகழ்த்துவதற்குரிய குறிப்புகளை எழுதுக.

3. 'சமூகச் சுகாதாரம்' என்பதுபற்றி இருபது வரிகளில், மூன்று பத்திகள் கொண்டதாக ஒரு கட்டுரை வரைக.

4. நம் நாட்டுக் கொடி நமக்கு நினைவூட்டும் செய்திகளை விளக்கி வரைக.

## மொழிப் பயிற்சி

1. எறி, எரி / மறம், மரம் / கறி, கரி / உறி, உரி — இச் சொற்களினுடைய உச்சரிப்புகளில் உள்ள முக்கியமான வேறுபாடு யாது? பொருள் வேறுபாட்டினை வரைந்து, ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

2. நன்னாள், நந்நாள் / நன்னாடு, நந்நாடு / முன்னூறு, மூந்நூறு — இவற்றைப் பிரித்துக் காட்டி, பொருள்களை வரைக.

3. அந்நாளில்தான் நமக்குச் சுதந்திரம் கிடைத்தது; இஃது என்ன வாக்கியம்? ஏன்?


4. **புணர்த்திக் காட்டுக** :—நாள் + ஆகும்; நம் + இடம்; இஃது + அன்றே; கடமை + ஆகும்; பொன் + நாடு; அன்று + அன்று.

## 2. கலையும் கலைச் செல்வரும்

நமது தென்னாட்டில் கோவில்கள் பல உள்ளன. கோவில்களின் கோபுரங்களைக் கவனித்துப் பாருங்கள். அவற்றின் வானையளாவிய தோற்றம் நமது மனத்தில் எவ்வளவு மகிழ்ச்சியையும், பெருமையையும் உண்டாக்குகின்றது! கோபுரங்களில் எவ்வளவு உருவங்கள் உள்ளன! கற்களில் செதுக்கப்பட்ட அவ்வுருவங்கள் உயிருள்ளவை போலவே தோன்றுகின்றன. கோவிற் சுவர்களில் தீட்டப்பெற்ற சித்திரங்கள் நம் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்கின்றனவன்றோ? நமது தமிழ் நாட்டை ஆண்ட பல்லவர், பிற்காலச் சோழர் ஆகியோர் காலங்களில் சித்திரக்கலை, சிற்பக்கலை, கட்டிடக்கலை முதலியன நன்கு வளர்ந்தன. **மகாபலிபுரம், தஞ்சை பிருகதீசுவரர் கோவில்** முதலிய இடங்களிலுள்ள சிற்ப வேலைப்பாடுகள் நமது பழந்தமிழ் அரசர்களின் கலை ஆர்வத்தை நன்கு விளக்கும்.

அக்காலத்தில் வட நாட்டரசர்களும் கலையை நன்றாய் வளர்த்து வந்தனர். காஞ்சியிலுள்ள ஸ்தூபி அழகிய சிற்ப வேலைப்பாடு அமைந்தது. அதனை எழுப்பியவர் அசோகர். **அஜந்தா, எல்லோரா** ஆகிய இடங்களில் உள்ள குகைகளில் கண்ணைக் கவரும் சித்திரங்கள் பல உள்ளன. அவை இன்று உலகத்தில் எல்லோராலும் புகழப்படுகின்றன. ஷாஜஹான் என்ற முகலாய அரசரால் ஆக்ரா நகரில் கட்டப்பட்டுள்ள **தாஜ்மஹாலைப்** பற்றி நீங்கள் எல்லோரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். அது வெள்ளைச் சலவைக் கல்லால் கட்டப்பட்டது. நம் தேசத்தைக் காண வரும் அந்நியர்கள் தாஜ்மஹாலைப் பாராமல் செல்வதில்லை. இப்படியாக நம் இந்தியா சித்திரக்கலை, சிற்பக்கலை, கட்டிடக்கலை முதலியவற்றில் நெடுங்காலமாகவே சிறப்புப் பெற்றுளது.

மேனாட்டிலும் மேற்கூறிய கலைகள் நன்கு வளர்ந்து வந்தன. பழங்காலத்துக் கிரேக்கர்களும் உரோமர்களும் சிற்பக்கலையில் சிறந்து விளங்கினர். அவர்கள் காலத்துச் சிற்பங்கள் இன்று ஐரோப்பாவில் எல்லோராலும் போற்றப்படுகின்றன. கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பிய மக்களின் மனத்தில் ஓர் புதிய உணர்ச்சி தோன்றியது. இறந்து போன கலைகள் மறு




தஞ்சை பிருகதீசுவரர் கோவில்

படியும் தழைத்து மலரத் தொடங்கின. அழகிய பொருள்களைச் செய்வதில் மக்கள் ஆர்வம் கொண்டனர். மக்களின் அறிவு பல விதங்களில் மேம்பட்டு விளங்கியது. இவ்வாறு மக்களுடைய அறிவு புத்துயிர் பெற்றதை ஐரோப்பியர் "மறு

**மலர்ச்சி**" என்று குறிப்பிட்டனர். மறு மலர்ச்சி இயக்கம் முதலில் சிறந்து விளங்கியது இதாலியில்தான். பிறகு அஃது ஐரோப்பா முழுவதிலும் பரவியது.

மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய கலைஞர்களுள் தலை சிறந்தவராக விளங்கியவர் **லியனுர்டோ டா வின்ஸி** என்பவர். அவர் பல துறைகளில் சிறந்து விளங்கினர். அவர் தீட்டிய சித்திரங்கள் உலகோரால் இன்றும் புகழப்படுகின்றன. அந்தச் சித்திரங்களுள் பெரும் புகழ் பெற்றவை இரண்டாகும். ஒன்று: இயேசு நாதரது வாழ்க்கையின் ஒரு பகுதியைக் குறிப்பிடும் '**இறுதி இராச் சாப்பாடு**' என்பது. மற்ருென்று '**மோனு லிஸா**' என்ற பெண்மணியின் சித்திரம். மோனு லிஸாவின் சித்திரம் பேரழகு வாய்ந்தது. அதனைப் படத்தில் பாருங்கள். லியனுர்டோவினுடைய சிற்பக் கலை அறிவிற்கு, மிலான் நகரத்திலுள்ள பெருங்குதிரைச் சிலையே போதிய சான்ருகும். அவருக்குத் தெரியாத கலைத் துறையே இல்லை என்று சொல்லப்படுகிறது.



மோனு லிஸாவின் படம்

லியனுர்டோ, **1452**-ஆம் ஆண்டு, **வின்ஸி** என்ற இடத்தில் ஒரு வழக்கறிஞரின் மைந்தராய்த் தோன்றினர். இயற்கையின் அழகில் அவர் மனம் இளமையிலேயே பெரிதும் ஈடுபட்டது. அழகுமிக்க பூக்களையும், பூச்சி, பறவை முதலியவற்றையும் அவர் பேராவலோடு ஒன்று சேர்ப்பார்: அவற்றைப்போன்ற உருவங்களைத் தீட்டுவார். வயது ஆக ஆக அவருக்குச் சித்திரக் கலையிலும், சிற்பக் கலையிலும் திறமை பெருகியது. பிளாரென்ஸின் புகழ்பெற்ற ஓவியர் என்று அவர் எல்லோராலும் போற்றப்பட்டார். பிளாரென்ஸின் அரசர் அவரைத் தம் அரண்மனையின் ஓவியப் புலவராக அமர்த்திக்கொண்டார்.

லியனார்டோவின் முயற்சியால் பிளாரென்ஸ் நகரம் அழகுடன் விளங்கியது.

லியனார்டோ ஒரு சித்திரத்தைத் தீட்டுவதிலோ சிற்பத்தை அமைப்பதிலோ ஈடுபட்டு விட்டால் பசி தாகத்தைக் கூட மறந்து விடுவாராம். 'இறுதி இராச் சாப்பாடு' என்ற சித்திரத்தை அவர் தீட்டுவதற்குப் பல ஆண்டுகள் ஆயின. மிலான் நகரக் கோமகன் ஒரு முறை லியனார்டோவைப் பார்த்து, "உங்களால் என்ன செய்ய முடியும்?" என்று கேட்டார். அதற்கு நமது கலைச் செல்வர் புன் சிரிப்புடன், "மண், மரம், கருங்கல், பளிங்கு முதலியவற்றுள் எதைக் கொண்டு வேண்டுமானாலும் நான் அழகிய உருவங்களை அமைப்பேன்; எவ்வுருவத்தை எவ்விடத்தில் வேண்டுமானாலும் தீட்டுவேன்; நம் முன்னோர் சிறப்புடன் போற்றி வரும் வெண்கலக் குதிரை போன்ற உருவத்தை எவ்விடத்தில் வேண்டுமானாலும் அமைப்பேன்" என்று விடையிறுத்தார். லியனார்டோ டா வின்ஸியைக் கொண்டாடாதவர்கள் உலகில் இலர் என்று கூறலாம்.

நம் இந்திய நாட்டில் சிறந்த கலைச் செல்வர்கள் பலர் வாழ்ந்திருந்தனர்; இன்றும் வாழ்கின்றனர். நம் தென்னாட்டில் வாழ்ந்து வந்த **இரவிவர்மா**வின் சித்திரங்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். கடவுளரின் திவ்விய உருவங்கள், பெரியார்களின் உருவங்கள், சிறந்த சரித்திர நிகழ்ச்சிகள், இயற்கை அழகுக் காட்சிகள் முதலிய பலவற்றை இரவிவர்மா அவர்கள் சித்திர உருவில் தீட்டியுள்ளார். வங்காளத்தில் **அபனீந்திர நாத தாகூர்** என்பவர் சித்திரக் கலையில் புகழ் பெற்றிருந்தார். நீங்கள் அழகிய சித்திரங்கள் பலவற்றைத் தீட்டப் பழக வேண்டும். 'சித்திரமும் கைப்பழக்கம்" என்று நம் முன்னோர் கூறியுள்ளனர். சித்திரம் வரைவது சிறந்த இன்பப் பொழுதுபோக்காகும். களைத்த மனத்தைத் தளிர்க்கச் செய்பவை சித்திரங்களே. நீங்கள் கோவில்களுக்கும். சரித்திரப் புகழ் பெற்ற இடங்களுக்கும் செல்ல நேரிடும் பொழுதெல்லாம், அவ்விடங்களிலுள்ள சித்திர சிற்ப வேலைப்பாடுகளைக் காணத் தவறக்கூடாது. நமது தென்னாடு கலைத்திறமையில் பெரும்புகழ் பெற்றது. அப்புகழ் மேலும் மேலும் ஓங்குமாறு செய்வது உங்களுடைய கடமையாகும்.

## பொருள் காண்க

வான், அளாவிய, ஆர்வம், போற்றுதல், புத்துயிர், தீட்டிய, சான்று, ஓவியர், கோமகன், விடை, இறந்தார்.

## சிறுவிடை வினாக்கள்

1. சிற்ப வேலைப்பாடு அமைந்த கோவில்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.

2. பழங்காலத்தின் சித்திரக்கலைச் சிறப்பை விளக்கும் இரண்டிடங்களைக் குறிப்பிடுக.

3. தாஜ்மஹால் எங்கு யாரால் கட்டப்பட்டது?

4. 'மறுமலர்ச்சி' என்றால் என்ன? அவ்வியக்கம் முதன் முதல் எவ்விடத்தில் தோன்றியது?

5. லியனார்டோ டா வின்ஸி தீட்டிய சித்திரங்களுள் சிறந்தவை யாவை?

6. லியனார்டோ டா வின்ஸியின் சிற்பக்கலை அறிவிற்கு ஒரு சான்று காட்டுக.

7. இளமைப் பருவத்தில் லியனார்டோவினிடம் அமைந்திருந்த சிறப்பியல்பு யாது?

8. லியனார்டோ மிலான் நகரத்துக் கோமகனிடம் கூறியவை யாவை?

9. தென்னாட்டில் சிறப்புடன் வாழ்ந்திருந்த ஓவியப் புலவர் யார்?

10. பின்வரும் வாக்கியங்களுள் முடிக்குஞ் சொற்கள் விடப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாக்கியத்தின் பக்கத்தில் பல விடைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஏற்ற ஒன்றைப் பொறுக்கி யமைத்து, ஒவ்வொரு வாக்கியத்தையும் முடித்துக் காட்டுக:—

(அ) தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டியவர்———(முதலாம் குலோத்துங்கன், கங்கை கொண்ட சோழன், முதலாம் இராசராசன்.)

(ஆ) மகாபலிபுரத்துச் சிற்பங்களைத் தோற்றுவித்தவர்கள் ———(சோழர், பல்லவர், சேரர், பாண்டியர்.)

(இ) ஸாஞ்சி ஸ்தூபியை எழுப்பியவர்———(அசோகர், ஹர்ஷர், சந்திரகுப்தர், அலெக்ஸாந்தர்.)

## கட்டுரையாக்கம்

1. 'தென்னாட்டுக் கோவில்கள்' என்னும் பொருள் பற்றிப் பேசுவதற்குரிய குறிப்புகள் எழுதுக.

2. 'பல்லவர்களும் சிற்பக் கலையும்' என்பது பற்றி எட்டு வரிகள் எழுதுக.

3. 'லியனார்டோ டா வின்ஸியின் கலையறிவு' என்பது பற்றிப் பதினைந்து வரிகளுள் ஒரு கட்டுரை எழுதுக.

4. உங்கள் ஊரிலுள்ள கோவிலின் அமைப்பைப் பத்து வரிகளில் வரைக.

## மொழிப் பயிற்சி

1. வலி + இல்லை — வலியில்லை
   தீ + எழுந்தது — தீயெழுந்தது
   கலை + அறிவு — கலையறிவு

மேலே காட்டப்பட்டுள்ளவை புணருங்கால் இடையில் 'ய்' என்ற எழுத்து வந்துள்ளது. அந்த மெய்யெழுத்திற்கு இலக்கணத்தில் அமைந்துள்ள பெயர் யாது? ஏன்?

2. 'கோவில்' என்ற சொல்லை 'கோயில்' என்றும் எழுதலாம்: இதற்குரிய இலக்கணம் யாது?

3. "கோபுரங்களில் எவ்வளவு உருவங்கள் உள்ளன!": இவ்வாக்கியத்தின் இறுதியில் அமைந்துள்ள குறியின் பெயர் என்ன? இத்தகைய வாக்கியங்கள் மூன்று எழுதுக.

# 3. பசிப்பிணி மருந்து

## (ஓர் உரையாடல்)

(கதை தழுவிப் பாடப் பெற்ற செய்யுள் நூலுக்குக் காப்பியம் என்பது பெயர் ஆகும். தமிழில் ஐம் பெருங் காப்பியங்கள் உள்ளன. அவை சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பனவாம். அவற்றுள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டுள்ளவை. சிலப்பதிகாரத்தைப் பாடியவர் இளங்கோவடிகள். மணிமேகலையைப் பாடியவர் மதுரைக் கூல வாணிகன் சாத்தனார்.

மணிமேகலை என்ற நூலின் கதைத் தலைவியாகிய மணிமேகலை என்பவள் கோவலனுக்கு மாதவியினிடம் பிறந்த மகளாவாள். அவளது துறவைப்பற்றியே 'மணிமேகலை' என்னும் காப்பியம் கூறுகின்றது. மணிமேகலை மணிபல்லவம் என்ற தீவுக்குச் சென்ற காலத்தில் அவளுக்கு ஓர் அட்சய பாத்திரம் கிடைத்தது. அதற்கு 'அமுத சுரபி' என்பது பெயர். அதிலிருந்து எடுக்க எடுக்கக் குறையாமல் உணவு வந்து கொண்டிருக்கும். மணிமேகலை அதிலிருந்து கிடைத்த உணவை மக்களுக்குக் கொடுத்து மக்களின் பசிப்பிணியைப் போக்கினாள்.

'அமுத சுரபி' என்னும் அட்சய பாத்திரம் ஆபுத்திரன் என்பவனுக்குச் சிந்தாதேவி என்ற தெய்வத்தால் கொடுக்கப் பட்டது. அக்காலத்தில் நாட்டில் மழையில்லாமையால் பஞ்சம் ஏற்பட்டிருந்தது. அது காரணமாக மக்கள் பசியால் வாடினர். ஆபுத்திரன் தனது கையில் அமுத சுரபியை ஏந்தி அதன் உதவியால் மக்களின் பசியைப் போக்கிக் கொண்டிருந்தான். அதனை உணர்ந்த இந்திரன் அவனைக் கண்டு வரங் கொடுப்பதற்கும், உலகத்துப் பஞ்சத்தை ஒழிப்பதற்கும் எண்ணினான். எனவே அவன் முதிய அந்தண உருவங் கொண்டு ஆபுத்திரனை அடைந்தான். உரு மாறிவந்த இந்திரனுக்கும் ஆபுத்திரனுக்கும் உரையாடல் தொடங்குகிறது.)

### உரையாடல்

**அந்தணர் :—** அப்பா ! உன் கையில் இருப்பது யாது ?

**ஆபுத்திரன்** :—[வணக்கத்துடன்] ஐய, இஃது அமுத சுரபி. இதில் உணவு இருக்கிறது. எடுக்க எடுக்க அவ்வுணவு குறையாது.

**அந்த** :—அப்படியா! வியப்பாக இருக்கிறதே. உனக்கு இஃது எப்படிக் கிடைத்தது ?

**ஆபுத்** :—பெரியவரே! நான் நாள்தோறும் பிச்சை எடுத்து வந்து பலர்க்கும் அதனை அளித்து, எஞ்சியதை நானும் உண்டு வந்தேன். சிந்தாதேவியினது கோயிலின் முன்புற முள்ள அம்பலத்தில்தான் நான் தூங்குவது வழக்கம். ஒரு நாள் இரவு சிலர் என்னை வந்து எழுப்பினர். நான் அவர் களுக்கு வேண்டுவது யாதென வினவினேன். அந்தோ! அவர்கள் முகத்தைப் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது. அவர்களுடைய வாடிய முகங்களும், உட்குழிந்த கண்களும், ஒட்டிய வயிறுகளும் என் மனத்தை உருக்கின. பசி நோயினால் தாங்கள் வருந்துவதாக அவர்கள் கூறினர். ஐயோ! அப்போது என் மனம் என்ன பாடுபட்டது! நடு இரவில் நான் உணவுக்கு எவ்விடம் செல்வேன்? நானோ பிச்சை எடுத்து வாழ்கின்றவன். எவ்விடத்தில் போய்ப் பிச்சை கேட்பேன்? நான் என்ன செய்வதென்று தெரியாது தவித்தேன். அப்பொழுது சிந்தாதேவி என்ற தெய்வம் என் முன் தோன்றி, என்னிடம் இந்த அமுத சுரபியை ஈந்தது; நாடு வறுமையுற்றாலும் இவ்வோடு வறுமை உறாது என்றுங் கூறியது. இதி லிருந்து உணவை எடுத்துப் பசித்து வந்தோர்க்கு அளித்தேன். ஆஹா! அப்பொழுது அவர்கள் முகம் எவ்வளவு மலர்ந்தது! ஆ! அது கண்ட என் மனம் எவ்வளவு மகிழ்ந்தது!

**அந்த** :—அன்பனே! உணர்ந்தேன் உணர்ந்தேன். இப்பொழுது ஏன் கையில் அமுத சுரபியுடன் நிற்கிறாய்?

**ஆபுத்** :—முதியவரே! இப்பொழுது இந்நாட்டில் பஞ்சம் வந்திருப்பது உங்களுக்குத் தெரியாதா? மழை பெய்து பன்னிரண்டாண்டுகள் ஆயினவே. பசும் புல்லும் பூமியில் தோன்றவில்லையே. உண்ண உணவில்லாமல் மக்கள்

படுந் துயரத்தை என்னல் பொறுக்க முடியவில்லை. பசித்து வந்தவர்க்கு உணவு கொடுக்கலாம் என்ற எண்ணத்துடனேயே நான் இப்பாத்திரத்துடன் இங்கு நிற்கின்றேன்.

**அந்த** :—நன்று நன்று. குழந்தாய், மெச்சினேன் உன் குணத்தை. நான் இந்திரன். உனது அமுத சுரபியின் புகழையும், உனது அன்னதானச் சிறப்பையும் கேள்வியுற்று உன்னைக் காணவே நான் இங்கு வந்தேன். உனது மனப்பான்மையை உணரவே உன்னைப்பற்றி யான் வினவினேன்.

**ஆபு** :—(வியப்புற்று வணங்கி) அமரர்க்கரசே! உங்களைக் கண்டு நான் மிக மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் விண்ணுலகில் பசித்து வருபவர்கள் உளரோ?

**இந்திரன்** :—பசியா? எனது நாட்டிலா? நன்று கூறினாய்! மகனே, எங்கள் நாட்டில் பசியும் பிணியும் இல்லை. பிச்சை எடுப்போரும், தானம் அளிப்போரும் இலர்.

**ஆபு** :—பசித்து வருபவர் இல்லையா? பசித்து வந்தவர் பசியைப் போக்கி, அவர்களது இன் முகத்தைக் காணும் பேறு உங்களுக்குக் கிட்டாதா? அறம் புரிகின்றவர்கள் உங்கள் நாட்டில் இல்லையா?

**இந்** :—சரி. உனக்கு வரங் கொடுப்பதற்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன். உனது அறத்தினைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைந்தேன். உனக்கு வேண்டிய வரம் கேள், தருகிறேன்.

**ஆபு** :—(பெரு நகையுடன்) வரமா? எனக்கா? எனக்கு என்ன வேண்டும்? பசித்தவர்க்கு உணவு கொடுத்து அவர்களுடைய இன்முகங் கண்டு களிப்பதைக் காட்டிலும் சிறந்த இன்பம் என்ன இருக்கிறது? அத்தகைய இன்பத்தை இந்தத் தெய்வக் கடிஞை எனக்குக் கொடுக்கின்றது. இதனிலும் சிறந்த பொருள்களும் உளவோ? அறம் செய்ய வழியே இல்லாத நாட்டின் தலைவராகிய நீங்கள் எனக்குக் கொடுக்கக் கூடியது யாது?

**இந்** :—உனக்கு நான் தேவ பதவியை அளிப்பேன்.

**ஆபு** :—ஐயையோ! எனக்கா தேவ பதவி! வேண்டவே வேண்டாம். உங்கள் உலகத்தில் நான் எப்படி வாழ் வேன்! பசி நீங்கினோரின் இன்முகம் காண இயலாத உமது நாட்டிற்கு நான் வரமாட்டேன். எனக்கு இந்த அமுத சுரபி ஒன்றே போதுமானது. (அமுத சுரபியை அணைத்துக்கொண்டு) **பசிப்பிணி மருந்தை** இடைவிடாது அளித்துக் கொண்டிருக்கும் பாத்திரம் ஒன்றே எனக்குப் போதுமானது.

**இந்** :—என்ன? நான் சொல்வதைக் கேட்கமாட்டாயா? வரம் வேண்டாமா? இப்பொழுதே நான் இந்நாட்டில் மழை மிகுதியாகப் பெய்யும்படி செய்கின்றேன். அப்பொழுது நாட்டில் பசியே இராது. உன்னைத் தேடி யாரும் வர மாட்டார்கள். அப்பொழுது உனது செருக்கு அடங்கி விடும்.

**ஆபு** :—ஐய, தங்கள் சினத்திற்கு யான் அஞ்சவில்லை. இந் நாட்டில் மழை பொழிந்து விளைவு பெருகினால் யான் ஊரூராகச் செல்வேன்; பசி நோயால் வருந்துபவர் உளரோ என்று வினவி உணவு கொடுப்பேன்; அவர் களுடைய இன்முகம் கண்டு களிப்பேன்; **பசிப்பிணி மருத்துவனாக** இருப்பேன். தங்களுக்கு வணக்கம்.

(செல்கிறான்).

(உரையாடல் முடிகிறது)

(ஆபுத்திரன்மீது சினங்கொண்ட இந்திரன் நாடு முழு வதும் மழை பெய்யுமாறு செய்கிறான். நாட்டில் பஞ்சம் நீங்கியது. ஆபுத்திரனது அமுத சுரபிக்கு வேலையே இல்லை. அவன் ஊரூராகச் சென்றும் பசித்தோரைக் கண்டானல்லன். அப்பொழுது சாவக நாட்டில் மழையின்மையால் பஞ்சம் வந் துள்ளது என்று சிலர் அவனுக்குக் கூறினர். உடனே அவன் சாவக நாட்டிற்கு மரக்கலத்தில் செல்லத் தொடங்கினான். அம் மரக்கலம் ஒரு நாள் மணிபல்லவம் என்ற தீவில் தங்கியது. அத் தீவினைக் காண விரும்பிய ஆபுத்திரன் மரக்கலத்திலிருந்து இறங்கினான். மரக்கலம் கிளம்புவதற்குள்ளாகத் திரும்பி விடலாம் என்று எண்ணியே அவன் அத்தீவினுட் சென்றான்.

இறங்கியவன் ஏறிவிட்டானென்று கப்பலின் தலைவன் எண்ணி, அம்மரக்கலத்தை வேறிடத்திற்கு ஓட்டிச் சென்று விட்டான். ஆபுத்திரன், மக்களே இல்லாத அத்தீவில் தனித்து விடப்பட்டான். எவருமில்லாத தீவில் அமுத சுரபியுடன் இருக்க விரும்பாத ஆபுத்திரன் உயிர் துறக்கத் துணிந்தான். எனவே அவன் அங்குள்ள ஒரு குளத்தில் அப்பாத்திரத்தை விடுத்தான். அவ்வாறு விடுப்பவன், 'பசிப்பிணி தீர்க்கும் பாத்திரமே! நீ ஆண்டிற்கு ஒருமுறை வெளியில் தோன்றுவாயாக. அருள் மிகுந்த உள்ளம் படைத்தவர் வந்தால் அவர் கையில் புகுவாயாக' என்று கூறினான். பிறகு அவன் உண்ணா நோன்பு இருந்து உயிர் துறந்தான். அப்பாத்திரமே பிறகு மணிமேகலைக்குக் கிடைத்தது. மணிமேகலை என்ற நூலுள் இத்தகைய சிறந்த பல நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன.

## பொருள் காண்க

**தொடர்பு, அம்பலம், வறுமை, உருது, அமரர், விண், புரிதல், கடிகை, இயலாத, செருக்கு, மருத்துவன்.**

## சிறுவிடை வினாக்கள்

1. ஐம்பெருங் காப்பியங்கள் யாவை?
2. 'மணிமேகலை' என்னும் நூலை இயற்றியவர் யார்?
3. மணிமேகலை என்பவள் யார்?
4. அமுத சுரபியின் தன்மை யாது?
5. ஆபுத்திரனுக்கு அமுத சுரபி எவ்வாறு கிடைத்தது?
6. ஆபுத்திரனிடம் இந்திரன் ஏன் வந்தான்?
7. ஆபுத்திரன் தேவபதவி தனக்கு வேண்டாமென்று கூறியது ஏன்?
8. பசிப்பிணி மருந்து எது?
9. ஆபுத்திரன் எங்கு இறந்தான்? ஏன்?
10. அமுத சுரபி மணிமேகலைக்கு எவ்வாறு கிடைத்தது?
11. கீழ்க்கண்ட வாக்கியங்களைப் **பொருத்தமாக** அமைத்துக் காட்டுக. **பல விடைகள்** கொடுக்கப்பட்டுள்ளன. ஏற்ற சொல்லைப் பொறுக்கி அமைக்கவும்:—

(அ) அமுத சுரபியை ஆபுத்திரனுக்கு—என்னும் தெய்வம் அளித்தது. (மணிமேகலை, இந்திரன், சிந்தாதேவி, இலக்குமி)

(ஆ) மணிமேகலைக்கு——என்ற இடத்தில் அமுத சுரபி கிடைத்தது. (காவிரிப்பூம்பட்டினம், சாவகநாடு, மணி பல்லவம், காஞ்சிபுரம், வஞ்சி)

(இ) 'மணிமேகலை' என்ற நூலுடன் தொடர்புகொண்ட மற்றொரு நூல்——(சிந்தாமணி, திருக்குறள், சிலப் பதிகாரம், திருவிளையாடற் புராணம், நளவெண்பா.)

## கட்டுரையாக்கம்

1. ஆபுத்திரனுக்கு அமுத சுரபி கிடைத்த வரலாற்றைப் பத்து வரிகளில் எழுதுக.

2. ஆபுத்திரன் உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்த காரணத்தைப் பத்து வாக்கியங்களுக்குள் எழுதுக.

3. 'பசியினால் வரும் தீங்கு,' 'அன்னதானத்தின் சிறப்பு' என்னும் பொருள்கள் பற்றிப் பேசுவதற்கேற்ற குறிப்புகள் தருக.

## மொழிப் பயிற்சி

1. **புணர்த்திக் காட்டுக**:—அ+காலம்; இ+ஊர்; எ+இடம்; வேறு+இடம்; வியப்பு+உற்று; எனக்கு+கொடு; நன்கு+பார்.

2. **பிரித்துக் காட்டுக**:—வரங்கொடுத்தல், சினங்கொண்டான்: மனமகிழ்ந்தான், இத்தகைய, அப்பாத்திரம், அத்தீவு.

3. இப்பாடத்திலிருந்து உணர்ச்சி வாக்கியம், வினா வாக்கியம் ஆகிய இரண்டு வாக்கியங்களுக்கும் மும்மூன்று எடுத்துக் காட்டுகள் தருக.

4. மெச்சினேன் உன் குணத்தை: இவ் வாக்கியத்தின் உறுப்புகளைக் குறிப்பிடுக.

5. சிந்தாதேவி ஆபுத்திரனுக்கு அமுத சுரபியை அளித்தது: இவ் வாக்கியத்தில் செயப்படுபொருள் எது? செயப்படுபொருளை முதலில் வைத்து இவ் வாக்கியத்தை மாற்றி எழுதிக் காட்டுக.

## 4. எங்கள் இன்பப் பயணம்

### (மேட்டூர் அணையைக் கண்டது)


1940-ஆம் ஆண்டு, சென்னை திருவல்லிக்கேணியிலுள்ள இந்து உயர்நிலைப்பள்ளியில் நான் தமிழாசிரியராக இருந்தேன். அந்த ஆண்டு நாங்கள் மாணவர்களுடன் மேட்டூர் அணையையும், வேறு சில இடங்களையும் கண்டு திரும்புவது என்று முடிவு செய்தோம். எங்களுக்கு மைக்கேல்மஸ் விடுமுறை நெருங்கியது. அவ்விடுமுறையில் நான்கு நாட்களுள் எங்கள் இன்பப் பயணத்தை முடித்துவிட வேண்டும் என்று எங்கள் தலைமையாசிரியர் கூறினார். நாங்கள் அதற்கு ஒப்புக்கொண்டோம். அவர் தென்னிந்தியப் புகைவண்டிக் கம்பெனியின் அதிகாரிகளுக்கு எங்கள் பயணத்தைப் பற்றி எழுதினார். கம்பெனி அதிகாரிகள் மனமுவந்து, எங்களுக்கென்று தனி வண்டியை ஓட்டுவதாகச் செய்தி அனுப்பினர். நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. எங்களுக்கே மகிழ்ச்சி மிகுதியாக இருந்ததென்றால், மாணவர்களின் மகிழ்ச்சி இத்துணையதென்று கூற முடியுமோ?

செப்டெம்பர் மாதம் 22-ஆம் நாள், இரவு 9-மணி இருக்கும். சென்னை எழும்பூர் புகைவண்டி நிலையத்தில் நின்ற புகைவண்டியில் நாங்கள் அமர்ந்திருந்தோம். புகைவண்டித் தொடரின் இருபுறங்களும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தன. மாணவர்களின் பேச்சொலியும், ஆர்ப்பொலியும் எழும்பூர் நிலையம் முழுவதும் நிரம்பியிருந்தன. சிலர் பாடினர். சிலர் ஆர்த்தனர். சிலர் கைகொட்டினர். புகைவண்டியின் ஓர் அறைக்கு எட்டு மாணவர்கள் விதம் அமர்த்தப்பட்டிருந்தனர். எட்டு மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட்டிருந்தார். 225 மாணவர்களும், முப்பது ஆசிரியர்களும், ஒரு மருத்துவரும், இரண்டு சேவகர்களும் அவ்வண்டியில் இருந்தனர். சரியாக 9-30 மணிக்கு எங்கள் வண்டி எழும்பூரை விடுத்துக் கிளம்பியது.

வண்டி செங்கற்பட்டை அடையும் வரை, மாணவர்கள் பேசிக்கொண்டும், பாடிக்கொண்டும் மகிழ்ந்திருந்தனர். அதன் பிறகு ஒவ்வொருவராகத் தூங்கத் தொடங்கினர். எனக்கென்று பிரிக்கப்பட்டிருந்த மாணவர்கள் தூங்கத் தொடங்கியவுடன்,

நானும் சிறிது கண்ணயர்ந்தேன். இடையிடையே கண் விழித்துப் பார்த்து, என் எட்டு மாணவர்களும் சரியாக இருக்கின்றனரா என்று பார்த்துக் கொண்டேன்.

காலை மணி 5½ இருக்கும். எங்கள் வண்டி விருத்தாசலத்தில் நின்றது. மாணவர்களும் எழுந்துவிட்டனர். எல்லோரும் வண்டியை விடுத்துக் கீழே இறங்கினோம். நான் என் எட்டு மாணவர்களையும் வரிசையாக நிற்கச் சொன்னேன். அப்படியே



எல்லா மாணவர்களும், அணிவகுத்து நிற்பதுபோல், நின்றனர். எங்கள் பள்ளிக்கூட உடற்பயிற்சி ஆசிரியர், எங்கள் எல்லோருக்கும் சிறிது உடற் பயிற்சி அளித்தார். 'வலது புறம் திரும்பு,' 'இடதுபுறம் திரும்பு,' 'குனி,' 'நிமிர்,' 'மூச்சை உள்ளே இழு,' 'மூச்சை வெளியே விடு' என்பனவே அப்பயிற்சிகள். அவை எனக்குச் சிறிது கஷ்டமாகத்தான் இருந்தன. என்றாலும் என் செய்வது? ஊருடன் ஒத்துழைக்க வேண்டாமா? பிறகு எல்லோரும் சேர்ந்து ஒரே குரலில் தேசீயப் பாட்டினைப் பாடினோம்; அதன்பின் காலைக்கடன்களை முடித்தோம்.பின்னர் எங்களுக்குச் சுடச்சுட இட்டலி, பொங்கல், காப்பி ஆகியவை கிடைத்தன. சிற்றுண்டி முடிந்ததும் எங்கள் வண்டியில் திரும்ப ஏறினோம். உடற் பயிற்சி ஆசிரியர், ஒவ்வொரு வண்டிக்கும் வந்து, 'எல்லோரும் சரியாக இருக்கின்றீர்களா?' என்று கேட்டுவிட்டுச் சென்றார். சுமார் 6-30 மணிக்கு வண்டி நகர்ந்தது.

நாங்கள் 8-30 மணிக்குச் சேலத்தைத் தாண்டி விட்டோம். சுமார் 9-30 மணிக்கு நாங்கள் மேட்டூரை அடைந்தோம்,

முன்னதாகவே எங்களை ஏற்றிச் செல்வதற்காக மோட்டார்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அரைமணி நேரத்தில் நாங்கள் மேட்டூர் அணையை அடைந்தோம்.

மேட்டூர் அணையின் நீளம் ஒரு மைல் இருக்கும். அத் தேக்கத்தின் பரப்பு அறுபது சதுர மைலாம். அணை அடிப்புறம் பெருத்தும், மேலே செல்லச் செல்லச் சிறுத்தும் காணப்படுகின்றது. அடிப்புறத்தில் அதன் அகலம் நூற்றெழுபது அடி. மேற்பாகத்தில் அதன் அகலம் இருபது அடி. தேக்கத்தில் நீர் நிரம்பி வழியும்பொழுது பக்கத்தில் ஓடும் நீர் செல்வதற்கு வடிமடை ஒன்றும், அதிக நீரை வெளிவிடும் மதகுகள் பலவும் இருக்கின்றன. தேக்கத்து நீரில் படகுகள் பல மிதந்தன. இவற்றை நாங்கள் கண்டு ஓரிடத்தில் ஒன்றுகூடி வட்டமாக அமர்ந்தோம். அப்பொழுது எங்கள் பள்ளிக்கூடத்தின் பூகோள ஆசிரியர் ஒரு சிறு சொற்பொழிவு நிகழ்த்தினர். அவர் பேசியதன் சுருக்கம் வருமாறு :—

"மாணவர்களே, ஆசிரியர்களே, நீங்கள் எல்லோரும் இவ் வணைக்கட்டின் பகுதிகளைப் பார்த்தீர்கள். நமது புகழ் மிக்க சோழநாட்டை வளப்படுத்துவது காவிரியாறே என்பது உங்களுக்குத் தெரியும். அது மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள குடகு நாட்டில் **மெர்க்காரா** என்னுமிடத்தில் தோன்றுகிறது. குடகு நாட்டில் கோடை காலத்தில் மழை மிகுதியாகப் பொழிகிறது. அதனால் காவிரியாறு பெருக்கெடுத்து ஓடுகிறது. அது நெடுந்தூரம் மலைப் பகுதியின் வழியாகவே பாய்ந்து வந்து, இடையில் மைசூர் ராஜ்யத்தைக் கடந்து, இவ்வூருக்கு அருகில் சமவெளியில் புகுகிறது. அதனால்தான் ஈண்டு அணை அமைக்கப்பட்டுள்ளது.

காவிரியாறு திருச்சி, தஞ்சை ஜில்லாக்களின் வழியாக ஓடிக் கடலில் விழுகிறது. காவிரியாற்றினால் தஞ்சை ஜில்லாவுக்கு, எதிர்பார்த்த பலன் கிடைக்காமலிருந்தது. இந்த ஆற்றின் நீர் வீணே கடலில் கலந்துகொண்டிருந்தது. இந் நீரைத் தடுத்து, அதன் ஓட்டத்தை ஒழுங்குபடுத்தி, நீர் தேவையான இடங்களுக்கு அனுப்பப்படுதல் வேண்டுமென அறிஞர் பலர் எண்ணினர். எனவே **கர்னல் எல்லிஸ்** என்பவர் பேரணை ஒன்று கட்டும் திட்டத்தை வகுத்தார். சென்னை சட்டசபையின் அங்

கத்தினராயிருந்த **ஸர் ஸி.பி. இராமசாமி ஐயரவர்கள்** இவ்வணை கட்டுவதற்கு வேண்டிய வேறொரு திட்டத்தை அமைத்தார். எனவே 1928-ஆம் ஆண்டில் இவ்வணை வேலை தொடங்கியது. பிறகு மேட்டூர் ஒரு பெரிய நகரமாக்கப்பட்டது. அணை கட்டுவதற்கு உதவும் பெரிய எந்திரங்களும், சாமான்களும் ஈண்டுக்கொண்டு வரப்பட்டன. இந்தப் பேரணை, ஆறு ஆண்டுகளில் முடிவு பெற்றது. சுமார் ஏழு கோடி ரூபாய் இதன் பொருட்டுச் செலவிடப்பட்டிருக்கின்றது. இத் தேக்கத்திலிருந்து கிடைக்கும் நீரினால், தஞ்சை ஜில்லாவில் உள்ள கணக்கில்லாத வயல்களில், சாகுபடி வேலை நன்கு நடைபெறுகிறது. இவ்வணையைப்பற்றி நீங்கள் அறிய வேண்டுவன பல. அவற்றைச் சொல்ல இப்பொழுது நேரமில்லை. இவ்வளவு நேரம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த உங்களுக்கு என் நன்றி உரித்தாகுக.''

சொற்பொழிவு முடிந்த பிறகு மற்றொரு முறை அவ்வணையின் அமைப்பையும் மதகுகளையும், நீர்த் தேக்கத்தையும் நாங்கள் கண்டோம். அணை கட்ட எண்ணிய அறிஞர்களையும், கட்டி முடிப்பதற்குப் பாடு பட்ட பெரியார்களையும் எங்கள் மனம் வாழ்த்தியது. அப்பொழுது மணி 11-30 இருக்கும். நாங்கள் எல்லோரும் அவ்வூரிலுள்ள அரசியலார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடத்திற்குச் சென்றோம். பகலுணவு அங்கு எங்களுக்குத் தயாராக இருந்தது. இரண்டு பெரிய கூடங்களில் நாங்கள் வரிசையாக அமர்ந்து உண்டோம். மாணவர்கள் பலவிதமாகப் பேசிக் கொண்டனர். ஒருவன், 'அணை எவ்வளவு உயரம் இருக்கிறது!' என்று வியந்தான். முதல் அமைப்பு மாணவன் ஒருவன், தன் நண்பனைப் பார்த்து, 'ராமு, அந்தப் படகில் ஏறிச் சுற்றுவதற்கு நம்மை ஆசிரியர்கள் அனுமதிப்பார்களா?' என்றான். ஒருவாறு எங்கள் உணவு முடிந்தது. சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டோம். பிற்பகல் சுமார் மூன்று மணிக்கு நாங்கள் மறுபடியும் அணைக்கட்டை அடைந்தோம்.

அப்பொழுது நாங்கள் பார்த்த இடங்களுள் முக்கியமானது **மின் உற்பத்திச் சாலை** ஆகும். மேட்டூரில் உண்டாக்கப்படும் மின் சக்தியைக் கொண்டு கணக்கில்லாத எந்திரங்கள் ஓட்டப்படுகின்றனவாம். அதனால் பல நகரங்களுக்கு மின்

விளக்கு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளனவாம். மாலை 5 மணிக்கு நாங்கள் ஒரு பூங்காவில் ஒன்று கூடினோம்; எல்லோருமாகச் சேர்ந்து ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டோம்; மேட்டூர் அணையின் பல காட்சிகளையும் புகைப்படம் எடுத்தோம். திருவல்லிக்கேணியிலுள்ள இந்து உயர் நிலைப் பள்ளியில், இன்றும் அந்தப் புகைப்படப் பிரதிகள் சுவரில் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

அன்று இரவு, உணவுக்குப் பின் நாங்கள் புகை வண்டியில் ஏறினோம். பிறகு நாங்கள் திருச்சி, தஞ்சை முதலிய இடங்களைப் பார்த்துவிட்டுச் சென்னைக்குத் திரும்பினோம். பயணத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் எல்லோரும் தாம் கண்ட காட்சிகளைப்பற்றிக் கட்டுரைகள் எழுதினர். அவற்றுள் சிறந்த மூன்று கட்டுரைகளுக்குப் பரிசுகள் கொடுக்கப்பட்டன. இந்தப் பயணத்தினால் ஆசிரியராகிய எனக்கே பெருமகிழ்ச்சி உண்டாயிற்றென்றால், மாணவர்களுடைய மகிழ்ச்சியின் அளவை எவ்வாறு கூறுவது?

## பொருள் காண்க

**உவந்து, இந்துணையது, அமர்ந்து, மருத்துவர், ஆர்த்தனர், ஈண்டு.**

## சிறுவிடை வினாக்கள்

1. நாங்கள் எப்பொழுது எழும்பூர் புகைவண்டி நிலையத்திலிருந்து கிளம்பினோம்?

2. விருத்தாசலம் நிலையத்தில் நாங்கள் செய்தவை யாவை?

3. மேட்டூர் அணையின் நீளம், தேக்கத்தின் உயரம் ஆகியவை எவ்வளவு மைல்கள்?

4. காவிரி எங்கு உற்பத்தியாகின்றது?

5. காவிரியில் அணை கட்டுவதற்கு மேட்டூர் ஏன் தகுந்த இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது?

6. மேட்டூர் அணையைக் கட்டி முடிக்க முயன்ற பெரியார் யார்?

7. மேட்டூர் நீர்த்தேக்கத்தினால் அதிகப் பயனை அடையும் இடம் எது?

8. மேட்டூர் அணையினால் உண்டாகும் நன்மைகளுள் மூன்றினைக் குறிப்பிடுக.

## கட்டுரையாக்கம்

1. மேட்டூர் அணைக்கட்டின் அமைப்பை ஐந்து வரிகளில் எழுதுக.

2. மேட்டூர் அணையை நாங்கள் கண்டு திரும்பிய செய்தியைப் பதினைந்து வரிகளில் ஒரு கட்டுரையாக எழுதுக.

3. இன்பப் பயணம் செய்வதனால் உண்டாகும் நன்மைகளைப்பற்றி, உங்கள் வகுப்பு மாணவர் சங்கத்தில் ஐந்து நிமிஷப் பேச்சொன்று நிகழ்த்தக் குறிப்புகள் எழுதுக.

4. உங்கள் ஊருக்கு அருகிலுள்ள ஓர் இடத்தைக் கண்டு திரும்பியதாகக் கற்பனை செய்துகொண்டு, அதைப்பற்றிப் பத்து வரிகளில் ஒரு கட்டுரை எழுதுக.

## மொழிப் பயிற்சி

1. **பிரித்துக் காட்டுக** :—உடற்பயிற்சி, பேச்சொலி, எல்லையில்லை, அளவில்லை, தலைமையாசிரியர், காவிரியாறு, வேறொரு.

2. **புணர்த்திக் காட்டுக** :—இன்ப + பயணம் ; தென் + இந்தியா ; சிறு + உண்டி ; நிற்க + இல்லை ; செல்ல + செல்ல; மேற்கு + தொடர்ச்சி ; அ + ஊர் ; புகை + படம்,

3. பின் வருவனவற்றை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக:—

ஓட்டப்படுகின்றன, அனுமதிப்பார்களா, நடைபெறுகிறது, அளவில்லை, அமைக்கப்பட்டுள்ளது, தேர்ந்தெடுக்கப்பட்டது, ஒத்துழைப்பு.

4. **எதிர் சொல்** கூறுக:—
இன்பம், நன்மை, ஏறினோம், நிமிர், மகிழ்ச்சி,

5. ஒருவன் அணை எவ்வளவு உயரம் இருக்கிறது என்று வியந்தான் முதல் அமைப்பு மாணவன் ஒருவன் தன் நண்பனைப் பார்த்து ராமு அந்தப் படகில் ஏறிச் சுற்றுவதற்கு நம்மை ஆசிரியர்கள் அனுமதிப்பார்களா என்றான் : ஏற்ற இடங்களில் **நிறுத்தக் குறிகள்** அமைத்துக் காட்டுக.

## 5. தலைக் கொடை வள்ளல்

நமது தமிழ் மிகப் பழைய மொழி. தமிழ்ப் புலவர்கள் பாக்கள் பல பாடித் தமிழ் மொழிக்கு ஆக்கம் தேடித் தந்தனர். நீதி நூல்களும், துதிப் பாடல்களும், காப்பியங்களும் கணக்கில்லாமல் தமிழில் உள்ளன. இவ்வாறு நூல்கள் பலவற்றைப் பாடிய புலவர்களை முடியரசர்களும், குறுநில மன்னர்களும், செல்வர்களும் ஆதரித்தனர். புலவர்களையும், ஏனையோரையும் ஆதரித்த புரவலர்கள் 'வள்ளல்கள்' என வழங்கப்பட்டனர்.

கடைச் சங்க காலத்தில் வள்ளன்மை பூண்டு விளங்கியவர்கள் எழுவர் எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் **பேகன், பாரி, காரி, ஆய், அதிகமான், நள்ளி, ஓரி** ஆகியோர் ஆவர். அவ்வெழுவரும் **கடையெழு வள்ளல்கள்** என்று அழைக்கப்படுகின்றனர். அவர்களுள், பேகன் என்பவன் மயிலுக்குப் போர்வை ஈந்தவன்; பாரி என்பவன் முல்லைக் கொடிக்குத் தேர் கொடுத்தவன்; அதிகமான் என்பவன் சாதலை நீக்கும் அரிய நெல்லிக்கனியை ஔவைக்கு ஈந்தவன். வள்ளல் எழுவரின் கொடைச் சிறப்புகள் யாவும் கடைச் சங்க நூல்களில் பரக்கக் கூறப்பட்டுள்ளன.

கடையெழு வள்ளல்கள் என்று சுட்டப்பெற்ற எழுவரைத் தவிர, வேறு வள்ளல்கள் சிலரும் கடைச் சங்க காலத்தில் வாழ்ந்திருந்தனர். அவர்களுள் தலையானவன் **குமணன்.** தனது தலையையே புலவர் ஒருவருக்குப் பரிசிலாகக் கொடுக்க முன் வந்த தண்ணளியோன் அவன். அக்காரணத்தினாலும், தலைசிறந்த வள்ளலாக அவன் கருதப்பட்டானுதலாலும் அவனைத் **தலைக் கொடை வள்ளல்** என்று அழைத்தல் தகும்.

முதிரம் என்பது ஒரு மலை. அதற்குத் தலைமை பூண்டவன் குமணன். அவன், இல்லையென்று உரைப்போர்க்கு இல்லையென்று இயம்பாத இதயம் பூண்டவன். புலவர்கள் அவனிடம் எந்நேரத்திலும் வருவர். தன்னிடம் வந்த புலவர்களைக் குமணன் இன்முகத்துடன் வரவேற்பான்; இன்னுரை கூறுவான்; அவர்களுடைய இனிய பாடல்களைக் கேட்பான்; வேண்டுவன அளிப்பான்; பரிசில் பெற்ற புலவர்களுடைய புன்முறுவல் பூத்த முகம் கண்டு களிப்பான். ஒருமுறை அவன்

பெருஞ் சித்திரனார் என்ற புலவருக்கு மலை போன்றதொரு யானையையே பரிசிலாகக் கொடுத்தான். அவனது கொடைத் திறம் எத்தகையது, பார்த்தீர்களா !

குமணனுக்குத் தம்பி ஒருவன் இருந்தான். அவனோ குமணனுக்கு எதிரான இயல்பினை உடையவன். புலவர்கள் தனது அண்ணனை ஏமாற்றிப் பொருள்களைப் பெற்றுச் செல்கின்றனர் என்று அவ்விளங்குமணன் கருதினான். தன் கருத்தை இளங் குமணன் அவன் அண்ணனிடம் வெளிப்படையாகவும் கூறினான். குமணனோ தம்பியின் சொற்களுக்குச் செவிசாய்த்தானல்லன் ; வேண்டியோர்க்கு வேண்டியவற்றை இடைவிடாது அளித்து வந்தான்.

வேறுபட்ட கருத்தினைக் கொண்ட உடன் பிறந்தார் இருவர் ஒற்றுமையுடன் வாழ முடியுமோ? புலவர்க்கு அளித்து, புலவருடன் வாழ்ந்து, புலவரின் பொன் மொழிகளைக் கேட்டுக் கொண்டே இருத்தல் வேண்டுமென்று முன்னோன் கருதினான். பின்னோன் அவற்றை அறவே வெறுத்தான். இம்மன வேறுபாடு காரணமாக உடன் பிறந்தார்க்குள் அடிக்கடி பிணக்கு ஏற்பட்டது. இளங்குமணன் இடைவிடாது தனது தமையனை ஏசியவாறு இருந்தான். குமணனால் அதனைப் பொறுக்க முடியவில்லை. இந்நிலையில் இளங்குமணன் தன் தமையனைக் காட்டுக்கு ஓட்டி, நாட்டைக் கைப்பற்றுவதே தக்கது என்று முடிவு செய்தான் ; அதற்கு வேண்டிய சூழ்ச்சிகளையும் செய்யத் தொடங்கினான். முடிவில் அவனது சூழ்ச்சி வெற்றியே பெற்றது. குமணனும் காட்டிற்கு ஓட்டப்பட்டான்.

காட்டகத்தே குமணனை ஓட்டிய இளங்குமணன், தனது தமையன் இறந்து பட்டாலொழியத் தான் புகழுடைய முடியாது என்று கருதினான். எனவே, அவன், குமணனது தலையை வெட்டிக் கொணர்வோர்க்குப் பெரும் பொருள் பரிசில் அளிப்பதாகப் பலரும் அறியக் கூறினான். வள்ளலைக் கொல்ல யாரேனும் மனம் துணிவரோ !

இந்நிலையில், பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர், பரிசில் பெற விரும்பிக் குமணனை அடைந்தார். புலவரைக் கண்ட குமணன் முதலில் துணுக்குற்றான். அவரது வறிய தோற்றம் அவனது மனத்தை உருக்கிவிட்டது. அவ்வளவில்

புலவர், 'வள்ளால், உன்னைக் காணவே யான் ஈண்டு வந்தேன். இனி என் கவலை ஒழிந்தது. எனது வீட்டின் வறுமை நிலையை என்னால் விளக்க முடியாது. பசி மிகுந்த எனது பச்சிளங் குழந்தை பாலின்மையால் தனது தாயின் முகத்தைப் பார்த்தது. என்ன செய்வது என்பதை உணராத அவள் எனது முகத்தைப் பார்த்தாள். யான் உனது முகத்தைப் பார்க்கிறேன். இனி நின் விருப்பம்போல் செய்க' என்றார். புலவரின் வறுமையைக் கேட்ட புரவலனின் மனம் என்ன பாடுபடும்!

அவ்வளவில் குமணன் சிந்திக்கலானான். அவன் மனம், 'இப்புலவர் குடும்பமோ மிகவும் வறிய நிலையில் உள்ளது. நம்மிடம் ஏதேனும் பொருள் பெறலாம் என்ற கருத்துடன் இவர் இங்கே வந்துள்ளார். இல்லை என்று கூறினால் இவர் மனம் எவ்வளவு கலங்கும்! இல்லை என்று கூறலாமா? குமணன் தன்னைப் பாடிய புலவர்க்கு இல்லை என்று கூறினான் என்ற அவச்சொல் நமக்கு வந்துவிடுமல்லவா? இவ்வுலகம் உள்ள வரையில் அந்தப் பழிச்சொல் நீங்குமா? இப்புலவரின் வறுமைத் துன்பம் நாம் நாடிழந்த துன்பத்தைக் காட்டிலும் கொடியது. நமது தலையைக் கொடுத்தேனும் இவரது வறுமைத் துயரைக் களைதல் வேண்டும்.' என்று கருதியது. தனது தலையைக் கொணர்வோர்க்கு இளங்குமணன் பெரும் பொருள் அளிப்பான் என்ற செய்தி அதுபொழுது குமணனின் நினைவுக்கு வந்தது. உடனே அவன் முகம் மலர்ந்தது; எடுத்தான் வாளை; அளித்தான் புலவரிடம்; தனது தலையை ஈர்ந்து, தம்பிகைக் கொடுத்து, அதன் விலையைப் பெற்று, வறுமையைப் போக்கிக் கொள்ளுமாறு புலவரிடம் கூறினான்.

புலவர் யாது செய்வார்? சிறிது நேரம் தயங்கினார்; வாளைக் கையில் வாங்கினார். வள்ளலின் தலையை வெட்டுவதற்கோ? அன்று. அத்தகைய புல்லிய செயலைப் புலவர் செய்வாரோ? அவர் குமணனை நோக்கி, "வள்ளால், இனி நீ என் உடைமை. யான் வரும் வரையில் நீ பாதுகாவலான இடத்தில் இருக்க வேண்டும். யான் சில நாட்களில் திரும்பி வருகின்றேன்" என்று கூறி வாளுடன் விரைந்து சென்றார். புலவரின் கருத்து இன்னதென்று புரவலனுக்குத் தெரியவில்லை, அவன் வியப்போடு புலவர் செல்வதைப் பார்த்துக்கொண்டே நின்றான்.

வாளுடன் கிளம்பிய புலவர் விரைந்து சென்று இளங் குமணனின் இருக்கையை அடைந்தார். இளங்குமணன் அது பொழுது அரச சபையின்கண் இருந்தான். வாளுடன் சென்ற புலவரை யாரும் தடை செய்யவில்லை. அவர் இளங்குமணனை நெருங்கினார். வாள் கைக் கொண்ட புலவரை நோக்கி இளங் குமணன், .' ஐய, நீர் யார்? இந்த வாள் நுமக்கு ஏது?' என்றான்.

அவ்வளவில் புலவர் உணர்ச்சி வசப்பட்டார்; பேசத் தொடங்கினார். அவர், 'இளங்குமண, யான் சொல்லப்போகின்ற வற்றைப் பொறுமையுடன் கேள். உனக்குக் குமணனின் தலை தானே வேண்டும். இதோ அவனது வாள் உள்ளது. ஒரு நொடியில் அவனது தலையைக் கொய்து உன்னிடம் தருகின் றேன். ஆனால் யான் சொல்கின்றவற்றை நீ கேட்டருள். இவ் வுலகில் எவ்வளவோ அரசர்கள் வாழ்ந்தார்கள்; பேரரசர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் இப்பொழுது எங்கே சென்றனர்? இறந்தனரன்றோ! முடிசார்ந்த மன்னராயினும் முடிவில் ஒரு பிடி சாம்பராகத்தானே ஆவர்! இல்லையேல் மண்ணொடு மண் ணுவர். உலகில் நிலைபெற்றிருக்க விரும்புகின்றவர்கள் தம் புகழையே நிலை நாட்டிச் சென்றனர். இவ்வுலகில் புகழேயன்றி வேறு எது நிலைத்து நிற்கும்? நீ இப்பொழுது உனது தமை யனைக் கொல்வதற்குக் காரணமாக இருந்தால் அப்பழி இவ் வுலகம் உள்ள வரையில் நீங்குமோ? 'அண்ணனைக் கொன்ற அற்பன்,' 'வள்ளலைக் கொன்ற வன்கண்ணன் இவன்' என்று உலகம் உன்னை ஏசாதோ? நாம் பிறக்கும் பொழுது ஒன் றையும் நம்மோடு கொண்டுவரவில்லை. இறக்கும் பொழுதும் எதனையும் கொண்டு செல்ல முடியாது. நம்முடன் வருவன நாம் செய்யும் புண்ணியங்களும், பாவங்களுமே. நீ இவ்வுல கில் பழியை நிலை நாட்டிப் பாவத்தை மூட்டை கட்டிக் கொண்டு செல்லப் போகின்றாயா? சிந்தித்துப் பார்.

'உனது முன்னோன் எத்தகையவன்! அவன் தனது தலை யைப் பொருட்படுத்தினானோ? அவன் காட்டில் இருக்கும் பொழுது யான் சென்றேன். எனது வறுமை நிலையை அவன் உள்ளவாறு உணர்ந்தான். என் செய்தான் தெரியுமா? வாளை என் கையில் கொடுத்தான்; தலையைக் கொய்து தம்பியினிடம்

கொடுத்து விலைதனைப் பெறுக என்றான். என்னே அவனது உள்ளம்! என்னே அவனது பண்பு! என்னே அவனது கொடை! தலையைக் கொடுத்தேனும் புலவர் வறுமையைப் போக்க நினைத்தான் அவன். தலையினும் சிறந்த உறுப்பு மக்களுக்கு உளதோ? அதனால்தான் குமணன் தன் தலையையே கொடுக்க முன் வந்தான். இத்தகைய **தலைக்கொடை வள்ளலின்** தம்பியோ நீ? அவனது புகழ் ஓங்க வேண்டுமென்று நீ விரும்பினால், உன்னைப் பழி சூழ வேண்டுமென்று நீ விரும்பினால், உன்னை உலகோர் தூற்ற வேண்டுமென்று நீ விரும்பினால், உலகம் உள்ள வரையில் உன்னைப் பற்றிய வசைச் சொல் நிலை நிற்க வேண்டுமென்று நீ விரும்பினால் நீ விரும்பியவாறு செய். குமணன் எனது பரிசில். அவனது தலை எனக்கே உரியது. வேண்டுமேல் நீயே அவனது தலையைக் கொய்து கொள். அவனது வாளை வாங்கிக் கொள். பிடி, வாளைப் பிடி...'

புலவரின் பொருளுரை கேட்ட பிறகும் இளங்குமணன் மாறாமல் இருப்பானோ? அவன் மனிதன் தானே! புலவர் உரை கேட்டால் எம்மனிதனின் மனமும் திரும்பி விடாதோ! தன் பிழையை உணர்ந்தான் இளங் குமணன்; புலவரின் கால்களில் விழுந்தான்; அண்ணனிடம் தன்னை அழைத்துச் செல்லுமாறு இறைஞ்சினான்.

புலவர் வெற்றி பெற்றார்; இளங்குமணனின் இதயத்தை மாற்றி விட்டார்; மாறுபட்ட மனமுடைய உடன் பிறந்தார் இருவரையும் ஒன்று கூட்டினார். காட்டில் வாழ்ந்த குமணன் நாட்டிற்கு வந்து விட்டான். உடன் பிறந்தார் இருவரும் ஒற்றுமையுடன் வாழலாயினர். தலையைக் கொடையாக அளிக்க முன் வந்த வள்ளலின் புகழ் பெரியதோ, இளங்குமணனின் கல் மனத்தை மாற்றிய புலவரின் புகழ் பெரியதோ, புலவர் பொருளுரை கேட்டுத் திருந்திய இளங்குமணனின் புகழ் பெரியதோ? நீங்களே சிந்தித்து முடிவு கூறுங்கள்.

## பொருள் காண்க

**பாக்கள், ஆக்கம், புரவலர், வள்ளல், முன்னோன், பின்னோன், துணுக்குறுதல், ஈர்ந்து, அரசவை, கொய்து, வசை.**

## சிறுவிடை வினாக்கள்

1. கடையெழு வள்ளல்கள் யாவர் ?

2. பாரி, பேகன், அதிகமான் : இவர்களுடைய கொடைத் தன்மைகளைப் பற்றி ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

3. பெருஞ் சித்திரனாருக்குக் கிடைத்த பரிசில் யாது ?

4. இளங்குமணன் குமணனைக் காட்டுக்கு ஏன் ஓட்டினான் ?

5. பெருந் தலைச் சாத்தனாரின் வறுமை நிலையைப் பற்றி மூன்று வாக்கியங்கள் வரைக.

6. வாளைக் கையில் வாங்கிய புலவரின் கருத்து யாது ?

7. ஒருவன் இறக்கும் பொழுது கூடச் செல்வன யாவை ?

8. குமணன் புலவர்க்குத் தன் தலையைக் கொடுக்க ஏன் முன் வந்தான் ?

## கட்டுரையாக்கம்

1. 'கடையெழு வள்ளல்கள்' என்னும் பொருள்பற்றி உங்கள் வகுப்பு மாணவர் சங்கத்தில் உரையொன்று நிகழ்த்தக் குறிப்புகள் தயார் செய்க.

2. குமணனது வரலாற்றை ஒரு பக்கத்திற்குள் வரைக.

3. 'தலைக்கொடை வள்ளல்' என்ற பெயர் குமணனுக்குப் பொருந்துமா? ஆராய்க.

## மொழிப் பயிற்சி

1. பின் வருவனவற்றை நும் வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—புன்முறுவல், வசப்பட்டார், நிலைபெற்றிருக்க, நிலை நாட்டி, பொருட்படுத்தவில்லை.

2. "நம்முடன் வருவன நாம் செய்யும் புண்ணியங்களும், பாவங்களுமே": இவ்வாக்கியத்தை, 'நம்முடன் வரும்' என்று முடியுமாறு மாற்றி எழுதுக.

3. "புலவர் இளங்குமணனின் இதயத்தை மாற்றிவிட்டார்": இவ் வாக்கியத்தை, 'புலவரால்' என்று தொடங்கி மாற்றி எழுதிக் காட்டுக.

## 6. வீண் செலவு செய்த மகன்

ஒரு சிற்றூரில் செல்வர் ஒருவர் இருந்தார். அவருக்கு மைந்தர் இருவர் இருந்தனர். அவர் தெய்வபக்தி உள்ளவர். பாவம் செய்தவர்கள் நரகத்திற்குப் போவார்கள் என்பதிலும், புண்ணியஞ் செய்தவர்கள் சுவர்க்கம் புகுவார்கள் என்பதிலும் அவருக்கு நம்பிக்கை உண்டு. அவர் ஒரு மாளிகையில் வசித்து வந்தார். வேலைக்காரர்கள் பலர் அவரது மாளிகையில் வேலை செய்து வந்தனர். எனவே அவர் கவலையின்றி வாழ்ந்து வந்தார்.

அவருடைய மைந்தர்களுள் மூத்தவன் பயந்த குணம் வாய்ந்தவன். தந்தை சொல்லை அவன் தட்டி நடப்பதில்லை. தந்தைக்கு உற்ற துணையாக அத்தனயன் இருந்தான். அன்றியும் அவன் சிக்கனமாகவே பணத்தைச் செலவு செய்வது வழக்கம். மூத்தவன் குணத்திற்கு மாறான தன்மைகள் இளையவனிடம் அமைந்திருந்தன. அவன் அடிக்கடி தன் தந்தையினிடம் பணங் கேட்பான் ; வீண் செலவு செய்வான் ; தந்தை சொல்லைக் கேட்பதே இல்லை. கேட்டபோதெல்லாம் பணங் கொடுப்பதற்குத் தந்தை தயங்கினாலும், என்ன செலவு செய்தாய் என்று கேட்டாலும் அவனுக்குக் கோபம் பொங்கி எழும். தனக்கு வேண்டியவற்றைக் கொடுப்பது தந்தையின் கடன் என்று அவன் எண்ணினான்.

இளையவன் பணம் கேட்கும் பொழுதெல்லாம் தந்தை தவறாது கொடுத்து வந்தார். எனினும் இளையவனுக்கு மகிழ்ச்சியே உண்டாகவில்லை. அவன் 'சீ, இஃது என்ன வாழ்வு! இவ்வீட்டில் நான் அடிமைபோல் வாழவேண்டி இருக்கிறது. பணம் வேண்டுமானால் தந்தையினிடம் போய் நிற்க வேண்டியிருக்கிறது. தந்தையின் செல்வத்தில் எனக்குப் பங்கு உண்டல்லவா? இப்பொழுதே தந்தையினிடம் செல்கின்றேன். எனது பங்கைப் பிரித்துக் கொடுக்கும்படி கேட்டு வாங்கி விடுகிறேன். பிறகு நான் என் இஷ்டப்படி செலவு செய்வேன்' என்று எண்ணியவனாய்த் தந்தையை அடைந்தான். தந்தை அன்புடன், 'குழந்தாய், உனக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டார். உடனே இளையவன், 'இனி என்னால் இவ்வீட்டில் இருக்க முடியாது. இந்த அடிமை வாழ்வு எனக்கு வேண்டாம். நான் இவ்வீட்டை விட்டு வெளியேறப் போகிறேன். உங்கள் சொத்தில் எனக்

குரிய பங்கை இப்பொழுதே பிரித்துக் கொடுத்து விடுங்கள்' என்ருன்.

இளைய மைந்தனின் சொற்கேட்ட தந்தைக்கு முதலில் சினம் உண்டாயிற்று. ஆனுல் அதை உடனே அடக்கிக்கொண்டு விட்டார்; பிறகு சிந்திக்கலானூர். 'ஓடுகிறேன் என்னும் பிள்ளையை வீட்டிலேயே நிறுத்தி வைப்பது எப்படி? நிறுத்தினுலும் பயன் இல்லை. அவனுக்குரிய பங்கைக் கொடுத்து விடுவோம். அவன் அச்செல்வத்தை யெல்லாம் சில நாட்களிலேயே செலவு செய்துவிடுவது திண்ணம். பிறகு கையில் காசு இல்லாமல் கஷ்டப்படுவான். அப்பொழுது அவனுக்குக் கட்டாயமாக நல்ல புத்தி வந்துவிடும். பின்னர் அவன் திருந்தி விடுவான். நான் எவ்வளவு நல்லுரை கூறினுலும் அவன் கேட்கப் போவதில்லை' என்று சிந்தித்த அத் தந்தை, மறுமொழி கூருமல், உடனே தமது சொத்தில் இளைய மைந்தனுக்குரிய பங்கைப்பிரித்துக் கொடுத்துவிட்டார். மூத்தவன் தந்தையினிடமே இருந்து வந்தான்.

இளையவன் கூட்டிலிருந்து விடுபட்ட பறவை எவ்வளவு மகிழ்ச்சி அடையுமோ அவ்வளவு மகிழ்ச்சி அடைந்தான். 'இனி நான் வைத்தது சட்டம். என்னை இவ்வுலகில் ஏனென்று கேட்பதற்கு யாருமில்லை. என் இஷ்டப்படி இனிச் செலவு செய்வேன்; உண்பேன்; உடுப்பேன்; ஆடுவேன்; பாடுவேன்' என்று அவன் எண்ணினுன். சில நாட்களில் அவன் அவ்வூரை விடுத்தே கிளம்பி விட்டான்; நெடுந்தூரத்தில் உள்ள ஒரு நகரை அடைந்தான்; தீய வழிகளில் பணத்தைச் செலவு செய்யத் தொடங்கினுன். சில நாட்களில் அவனது செல்வம் முழுவதும் கரைந்துவிடவே அவன் ஓட்டாண்டியாகி விட்டான். அச்சமயத்தில் அவன் தங்கியிருந்த நாட்டில் பெரும் பஞ்சம் வந்து விட்டது. பணம் கொடுத்தாலும் உணவுப் பொருள்கள் அகப்படுவது அருமையாக இருந்தது. அப்படி இருக்கும் பொழுது பணமே இல்லாத அவ்விளைஞன் என்ன செய்வான்? என்ருலும் தான் செய்த காரியம் பிழையானது என்பதை அவன் உணரவில்லை.

மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை என்பன பசி வந்திடப் பறந்து

போகும் அல்லவா? அவ்விளைஞனையும் பசிப்பிணி வாட்டியது. அவன் அதனால் அந்நகரில் இருந்த ஒரு செல்வனிடம் சென்று தனக்கு வேலை கொடுக்குமாறு கேட்டான். செல்வன் அவனைத் தன் பன்றிகளுக்கு உணவு கொடுக்கும் வேலையில் அமர்த்தினான். செல்வச் சிறுவனுக்கு உண்டான வருத்தத்திற்கு எல்லையில்லை. என்றாலும் என் செய்வது? அவன் தன் தலைவிதியை எண்ணியவாறு, பன்றிகளுக்கு உணவளிக்கும் வேலையை ஒப்புக் கொண்டான். பன்றிகளுக்கு உணவாகக் கொடுக்கப்பட்டு வந்த உமியும் தோலுமே அவனுக்கும் உணவாகக் கிடைத்தன. ஒரு சிறு ரொட்டித்துண்டைக் கூட அவனால் பார்க்க முடியவில்லை. அவனுக்கு இரங்கி யாரும் உணவு கொடுக்கவில்லை.

இந்நிலையிலேயே அவ்விளையவன் தான் செய்த தவறுகளை உணர்ந்தான். அவன் தன் மனத்தில், 'என்னே என் அறிவீனம்! என் தந்தையோ செல்வர். வேண்டாமென்று வெறுத்து ஒதுக்கும்படியாக, உயர்ந்த உணவுகள் எனது வீட்டில் எனக்குக் கிடைக்கும். என் தந்தையினிடம் எவ்வளவு வேலைக்காரர்கள் இருக்கிறார்கள்! அவர்களையெல்லாம் வெருட்டி ஏவல் கொண்டேனே. அப்படிப்பட்ட நிலையில் இருந்த எனக்கு இன்று பன்றிகளின் உணவை உண்ணும்படியான காலம் வந்து விட்டதே. இதற்கு நானேதான் காரணம். தந்தையைச் சினந்தேன்; சொத்தில் பங்கு பெற்றேன்; வீண் செலவு செய்தேன்; ஏழை ஆயினேன்; இன்று பன்றி மேய்க்கிறேன். நான் ஒரு மூடன். நானே என் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டேன். இனி நான் என்ன செய்வது?' என்று சிந்தித்தான். இறுதியில் அவனது மனம் ஒரு முடிவுக்கு வந்தது. அவன் துணிவு கொண்டான். அவன் 'நான் என் தந்தையிடம் திரும்பிச் செல்வேன். என் பிழைகளைப் பொறுத்தருளுமாறு வேண்டுவேன். அவருடைய வேலையாட்களில் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும்படி கெஞ்சுவேன்' என்று கூறிக்கொண்டான். அவ்வாறே அவன் சில நாட்களில் தனது ஊருக்குத் திரும்பி வந்துவிட்டான்.

திருந்திய மனத்துடன் திரும்பிவந்த தனயனைத் தந்தை தழுவி மகிழ்ச்சியுடன் வரவேற்றார். தந்தையின் அடிகளில் அவன் வீழ்ந்து, 'தந்தையே! யான் பெருந்தவறு செய்துவிட்

டேன். எனக்கு நரகம் கிடைக்கப்போவது நிச்சயம். தாங்கள் என் பிழையைப் பொறுத்தருளுங்கள். தங்கள் மகன் என்று சொல்லிக் கொள்வதற்குக் கூட எனக்குத் தகுதி இல்லை. என்னைத் தங்கள் வேலையாட்களில் ஒருவனாக அமர்த்திக்கொள்ளுங்கள்' என்றான். தனது குற்றத்தை உணர்ந்து வருந்தும் மகனைத் தந்தை தேற்றினார்; வேலையாட்களை அழைத்தார்; மகனுக்கு நல்லுடையும், நல்லணியும் அணிவித்தார். அவருடைய வீட்டில் கொழுத்த ஆடு ஒன்று இருந்தது. ஒரு நாள் நல்ல விருந்துணவுக்கு ஏற்றதாக இருக்க வேண்டுமென்றே அது கொழுக்க வைக்கப்பட்டது. தந்தை அந்த ஆட்டையும் அன்று கொன்று, சுவையுள்ள உணவைத் தயாரிக்குமாறு கட்டளை யிட்டார். இளைய மைந்தன் திரும்பி வந்த அந்நாளை அவர் ஒரு பண்டிகை போலக் கொண்டாடினார். விருந்துணவு நடந்தது. பின்பு ஆடலும் பாடலும் தொடங்கின. எல்லோரும் மகிழ்ச்சியுடன் இருந்தனர். இளையவன் நாணங்கொண்டான்; 'தவறு செய்த தனக்கு இவ்வளவு பெரிய வரவேற்பா!' என்று எண்ணினான்; அவனது மனமே அவனைச் சுட்டது.

அவ்வீட்டில் எல்லோரும் மகிழ்ச்சியுடன் இருக்கும் பொழுது மூத்த மகன் அங்கு இல்லை. அவன் வயல்வெளிகளில் வேலை செய்வதற்காகச் சென்றிருந்தான். அவன் நெடு நேரம் பாடுபட்டு உழைத்த பிறகு வீட்டை நெருங்கினான். தன் வீட்டில் ஆடலும் பாடலும் நிகழ்வதன் காரணம் அவனுக்குத் தெரியவில்லை. அவன் உடனே ஒரு வேலைக்காரனை அழைத்து, 'வீட்டில் என்ன விசேஷம்' என்று கேட்டான். அதற்கு அவ்வேலைக்காரன், 'ஐயா! வீட்டைவிட்டு ஓடிப்போன உமது தம்பி திரும்பவும் வீட்டிற்கு வந்துவிட்டார். அவர் சுகமாக வீடு திரும்பியதனால் உமது தந்தை பெருமகிழ்ச்சி அடைந்தார்; அவருக்கென்று இன்று தனி விருந்து வைத்தார். வீட்டில் வளர்க்கப்பட்டு வந்த கொழுத்த ஆட்டைக் கூட இன்று கொன்று விருந்து தயாரிக்கப்பட்டது. விருந்து முடிந்துவிட்டது' என்றான். அது கேட்ட மூத்த மகனுக்குக் கோபமும், வருத்தமும் உண்டாயின. அவன், 'இளையவன் தந்தை சொல்லைக் கேட்கவில்லை: தந்தையுடன் சண்டையிட்டான்;

பங்கு பிரித்துக்கொண்டு ஓடினன். அவனுக்கு இப்பொழுது இவ்வளவு பெரிய விருந்து நடக்கிறது! நாமோ வீட்டிலேயே தந்தைக்கு உதவியாக இருக்கிறோம். அவர் ஏவிய வேலைகளை யெல்லாம் செய்கிறோம். நமக்கு உபசாரமோ விருந்தோ இல்லை. இஃது என்ன அநியாயம்' என்று எண்ணினன். எனவே, அவன் வீட்டிற்குள் நுழையாமல் கோபத்துடன் வெளியிலேயே நின்றுவிட்டான்.

தமது மூத்த மகன் வெளியில் கோபத்துடன் நிற்பது கண்ட தந்தை உடனே வீட்டிற்கு வெளியே வந்தார். அவர் மூத்தவனைப் பார்த்து, 'மகனே, ஏன் கோபத்துடன் இருக் கிறாய்?' என்றார். மூத்தவனுக்குக் கோபம் பொங்கியது. அவன் தனது தந்தையை நோக்கிச் சீறி, அவரைப் பார்த்துக் கடுங்குரலில், 'இஃது என்ன அநியாயம்! ஒழுங்கு தவறிய வனுக்கு விருந்து! உங்களுடன் சண்டையிட்டு ஓடியவனுக்கா விருந்து? அதுவும் வீட்டில் அருமையாகக் கொழுக்க வைக்கப் பட்ட ஆட்டின் மாமிசம் அவனுக்கா? நெறி தவறியவனுக்குப் பரிசு! நன்னெறியில் நடக்கின்ற எனக்கு ஒன்றுமே இல்லையா? எனக்கு ஒருநாள் கூடத் தாங்கள் விருந்துணவு கொடுத்த தில்லையே? நான் மகிழ்ச்சியுடன் எந்த நாளிலும் இருந்ததில்லை' என்றான்.

மூத்த மகனது சீற்றத்தைத் தந்தை ஒருவாறு தணித்தார். பிறகு அவர் அன்பு நிறைந்த குரலில் அவனைப் பார்த்து, 'அப்பா, குழந்தாய்! கோபத்தை விடு. நீ என்னுடனேயே இருக்கிறாய். நான் உண்ணும் உணவையே நீயும் உண்டாய். நான் அடைந்த இன்பங்களை நீயும் அடைந்தாய். என்னுடைய செல்வம் முழுவதும் உன்னுடையதே. இன்று உனது தம்பி வீட்டிற்குத் திரும்பிவிட்டான். அவன் உனது பழைய தம்பி அல்லன். அவன் இப்பொழுது புதிய பிறப்பை எடுத்துவிட் டான். ஒழுக்கம் தவறிய தம்பி இறந்துவிட்டான் என்று எண் ணிக்கொள். இப்பொழுது அவன் நல்லொழுக்கத்துடன் உயிர் பெற்று வந்திருக்கிறான். தனது பிழையை அவன் உணர்ந்து திருந்திவிட்டான். இவ்வுலகில் எல்லோரும் குற்றம் செய்வது இயற்கைதான். செய்த குற்றத்தை ஒப்புக்கொள்வதுதான் அருமையானது. உனது இளவல் அத்தகைய அரிய காரியத்

தைச் செய்துவிட்டான். இனி அவன் நல்லொழுக்கத்திலிருந்து தவறமாட்டான். அவனை நாம் ஏற்றுக்கொள்வதே முறையும் நீதியும் ஆகும்' என்றார். மூத்தவனும் சினந்தணிந்தான். அன்று முதல் இளையவன் வாய்மை, ஒழுக்கம், அன்பு, அருள் முதலிய நற்குணங்களுடன் விளங்கினான்.

## பொருள் காண்க

**இன்றி, உற்ற, சினம், திண்ணம், பிழை, வண்மை, தாளாண்மை, பிணி, இரங்கி, இறுதி, தனயன், அணி, நாணம், நெறி, சீற்றம், இளவல், வாய்மை.**

## சிறுவிடை வினாக்கள்

1. செல்வரின் மூத்த மகன் எப்படிப்பட்டவன்? இளையவன் எப்படிப்பட்டவன்?

2. இளைய மகன் கோபத்துடன் தந்தையினிடம் கூறியவை யாவை?

3. செல்வர் தமது இளைய மகனுக்குரிய பாகத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டது எக் கருத்தினால்?

4. வீட்டைவிட்டு மகிழ்ச்சியோடு வெளிவந்த இளைய மைந்தனின் மன நிலைக்குக் காட்டப்பட்ட உவமை யாது?

5. இளையவன் வறுமை நிலையை அடைந்தது எதனால்?

6. புது நகரத்தில் இளையவனுக்கு எவ்வேலை கிடைத்தது?

7. பிழையுணர்ந்து வருந்திய மகன் எம்முடிவுக்கு வந்தான்?

8. வீடு திரும்பிய மகனைத் தந்தை எப்படி உபசரித்தார்?

9. மூத்த மகனுக்குக் கோபம் வந்தது ஏன்?

10. மூத்த மகனது கோபத்தைத் தந்தை எவ்வாறு தணித்தார்?

## கட்டுரையாக்கம்

1. இளைய மகன் புது நகரத்தில் கஷ்டப்பட்டது ஏன்? அவன் பட்ட கஷ்டங்களை ஐந்து வாக்கியங்களில் எழுதுக.

2. இளைய மகன் திருந்திய விதத்தைப் பதினைந்து வரிகளில் வரைக.

3. 'சிக்கனம்' என்னும் பொருள்பற்றி ஐந்து நிமிஷப் பேச்சு நிகழ்த்துவதற்குரிய குறிப்புகள் தயார் செய்க.

## மொழிப் பயிற்சி

1. இளையவன் அடிக்கடி தன் தந்தையினிடம் பணம் கேட்பான்; வீண் செலவு செய்வான்; தந்தை சொல்லைக் கேட்பதில்லை: இஃது என்ன வாக்கியம்? ஏன்? இத்தகைய வாக்கியங்களுள் இரண்டினைச் சொந்தமாக எழுதுக.

2. இஃது என்ன அநியாயம்!

மகனே, ஏன் கோபத்துடன் இருக்கிறாய்?

மேலே காட்டப்பட்டுள்ள இரண்டு வாக்கியங்களுக்கும் உள்ள வேறுபாடு யாது? விளக்குக.

# செய்யுட் பகுதி

## I கடவுள் வாழ்த்து

### சகல கலாவல்லி மாலை

1. வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசகம் ஏழுமளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

2. மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே.

—குமரகுருபர சுவாமிகள்.

பாண்டிய நாட்டில் உள்ள ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரில் குமரகுருபரர் தோன்றினர். அவருடைய தந்தையார் சண்முக சிகாமணிக் கவிராயர் என்பவர்; தாயார் சிவகாமசுந்தரி அம்மையார் ஆவார். குமரகுருபரர் ஐந்தாண்டு வரையில் ஊமையாக இருந்து, பிறகு முருகனின் அருளால் பேச்சுத்திறமையும், பாடல் பாடும் வன்மையும் பெற்றார் என்ப. இவர் 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

1. வெண்தாமரைப் பூ கலைமகளின் இருப்பிடம். பதம் - அடி. மனமாகிய தாமரைப் பூ. தண் - குளிர்ந்த, சகம் - உலகம், அளித்து - காப்பாற்றி, உண்டான்- திருமால், ஒழித்தான்: சிவன், உண்டாக்கும் வண்ணம் கண்டான் : பிரமன், கரும்பே - கரும்பு போன்றவளே.

2. பண் - பாடல், படைப்போன் - பிரமன், விண்கண்ட - தேவர் உலகத்தில் உள்ள, விளம்பில் : சொல்லத் தொடங்கினால், உளதோ - இல்லை என்றபடி.

# II நீதிப் பகுதி

## 1. நீதி வெண்பா

மென்மதுர வாக்கால் விரும்பும் சகங்கடின
வன்மொழியி னாலிகழும் மண்ணுலகம்—நன்மொழியை
ஓதுகுயி லேதங்(கு) உதவியது கர்த்தபந்தான்
ஏதபரா தஞ்செய்த(து) இன்று. 1

வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழும்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான். 2

செய்யும் ஒருகருமம் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபம் சேருமே—செய்யவொரு
நற்குடியைக் காத்த நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர்துயரம் போல். 3

தேக்கு விடம்தலையில் எய்து மிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்(கு)
அங்கமுழு தும்விடமே யாம். 4

அவ்விய நெஞ்சத்(து) அறிவில்லாத் துர்ச்சனரைச்
செவ்வியர் ஆக்கும் செயலுண்டோ—திவ்வியநல்
கந்தம் பலவும் கலந்தாலும் உள்ளியது
கந்தம் கெடுமோ கரை. 5

சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர் ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே—வெற்றிபெறும்
வெண்கலத்தின் ஓசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தில் உண்டோ ஒலி. 6

நீதி வெண்பாவினை இயற்றியவர் ஒளவையார் என்று சிலர் கூறுவர். இது பிற்காலத்தில் பாடப்பட்ட நூல். 'நீதி வெண்பா என்னும் பெயரே, இஃது ஒரு நீதிநூல் என்பதை வெளிப் படுத்தும்.

1. மதுரம் - இனிமை, சகம் - உலகம், கர்த்தபம் - கழுதை, அபராதம் - குற்றம்.

2. வருத்த - வளைக்க, வேய் - மூங்கில், வேழம்பர் - கழைக் கூத்தாடுவோர், மேதினி - உலகம்.

3. கருமம் - காரியம், தேர்ந்து - ஆராய்ந்து, புரிதல் - செய்தல், மனத்தாபம் - வருத்தம், நகுலன் - கீரிப்பிள்ளை, பொற்கொடி - பொற்கொடி போன்ற பெண். பார்ப்பனி ஆராயாமல் கீரிப்பிள்ளையைக் கொன்ற கதை ஈண்டுக் குறிப்பிடப்படுகிறது.

4. எய்தும் - தங்கியிருக்கும், இருந்தேள் - கரியதேள், பைங்கண் - பசுமையான கண்களையுடைய, துர்ச்சனர் - வஞ்சகர், அங்கம் - உடம்பு.

5. அவ்விய - பொறாமை கொண்ட, செவ்வியர் - நேரானவர், கந்தம் - வாசனைப் பொருள்கள், உள்ளி - உள்ளிப் பூண்டு, கரை - சொல்.

6. சிலு சிலுப்பர் - 'வளவள' என்று பல பேசுவர், ஆன்று - எல்லாக் கல்விகளும் நிறைந்து, அமைந்த - அடக்கம் கொண்ட.

## 2. நான்மணிக் கடிகை

கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும் மான்வயிற்றில்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார்யார்
நல்லாள் பிறக்கும் குடி. 1

கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர
மந்திரத்தி னாற்பிணிப்பர் மாநாகம்—கொந்தி
இரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் றோரை
நயத்திற் பிணித்து விடல். 2

இன்றுைம் வேண்டின் இரவெழுக இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல். 3

மொய்சிதைக்கும் ஒற்றுமை இன்மை ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியைப்—பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்கும்
கூடார்கட் கூடி விடின். 4

திருவின் திறலுடைய(து) இல்லை ஒருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை—எற்றுள்ளும்
இன்மையின் இன்னாத(து) இல்லை இலமென்னும்
வன்மையின் வன்பாட்ட(து) இல். 5

மழையின்றி மாநிலத்தார்க்(கு) இல்லை மழையும்
தவமிலார் இல்வழி இல்லை தவமும்
அரசிலார் இல்வழி இல்லை அரசனும்
இல்வாழ்வார் இல்வழி இல். 6

—விளம்பி நாகனார்.

நான்மணிக்கடிகை கடைச்சங்க காலத்து நூல். இது, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலைப் பாடிய ஆசிரியரின் இயற்பெயர் நாகனார் என்று கூறப்படுகிறது. அவரது ஊர் 'விளம்பி' என்று சொல்லப்படுகிறது. அவருடைய இயற்பெயருக்குமுன் ஊர்ப் பெயரை அமைத்து மக்கள் அவரை அழைத்தனர்.

1. ஒளி - ஒளி பொருந்திய, அரிதாரம் - ஒருவகை வாசனைப் பொருள், முத்தம் - முத்து, நல்லாள் - நல்ல அறிவினை உடையவர்,

2. கந்து - யானைகட்டும் தறி. பிணிப்பர் - கட்டுவர். களிறு- ஆண் யானை. கதம் - சினம். கொந்தி - இடித்துக் கூறி. இரும்பு- விலங்கு. கயம் - கீழ் மக்கள்.

3. இன்னுமை - பொல்லாப்பு. இரவு - யாசித்தல். மன்னுதல் - நிலை பெறுதல். இசை - புகழ். வேண்டின் - விரும்பினுல். வெகுளி - சினம். விடல் - தவிர்க.

4. மொய் - வலிமை. சிதைக்கும் - அழிக்கும். கலம் - பாத்திரம். கூடார் - தீயோர்.

5. திரு - செல்வம். திறல் - வலிமை. வாய்த்த - பயன்படுகின்ற. எற்றுள்ளும் - எதனுள்ளும். இன்மை - வறுமை. இன்னுதது - கொடியது. இலம் என்னும் - யாசகர் கேட்டபொழுது தன்னிடத்தில் ஒன்றும் இல்லை என்கின்ற. வன்பாட்டது கொடியது.

6. இன்றி - இல்லாமல். இல்வழி-இல்லாதபொழுது. மாநிலத்தார் - பெரிய உலகத்தில் உள்ளவர்கள். இல்வாழ்வார்-குடிகள்

## III. வரலாற்றுப் பகுதி

### பஞ்சதந்திரம்

### முயல் சிங்கத்தைக் கொன்ற கதை

குறுமுயல் சிங்கந் தன்னைக் கொன்றதொன் றுண்டே தென்னில்
செறியுமோர் காட்டி லேயோர் சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை யாடியூன் மிகவுந் தின்று
வெறிகொடு திரியும் நாளில் விலங்கெலாம் ஒருங்கு கூடி. 1

ஆணிஎஞ் சிங்க மேயுன் அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டாம் விதத்திலில் தினமொன் றாக
ஊனுனக் களிப்போம் என்ன உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையும் இட்டொவ் வொன்றாய் அருந்தியங் கிருக்கும் நாளில்.

தனிமுயல் ஒன்றுக் கோர்நாள் தன்முறை வருத லோடும்
இனியது விடாது நம்மை யெனினுமோர் எடுப்பெடுத்து
வினையையிப் போது செய்து வென்றுநாம் உய்ந்தோ மாகில்
நனிவிலங் கனைத்தும் உய்யு நமக்குறற் புகழுண் டென்றே. 3

கருதியச் சிங்கத் தின்தன் கடும்பசி வேளை தப்பி
வருதலும் முயலை நோக்கி மன்னவம் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும் பிந்துவ தில்லை பிந்தி
வருவதென் னுரைநீ யென்று மனந்தனிற் சினந்து கூற. 4

ஐயநின் பசித்த வேளைக்(கு) அடியனேன் வந்தே னுங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு வெருவியங் கொளித்தி ருந்தேன்
பையவே சிங்க மாங்கோர் பருமுழை புகுந்த பின்னர்
துய்யநின் பக்கல் வந்தேன் சுவாமியென் றிறைஞ்சி நிற்க. 5

சிங்கநாம் அல்லால் வேறோர் சிங்கநீ கண்டா யாகில்
அங்கதைக் காட்டு வாவென் றழைத்தலு மழைத்துப் போயோர்
பங்கமும் புனலுஞ் சேர்ந்த பாழ்ங்குர வதனைக் காட்ட
அங்கதை எட்டிப் பார்த்த ததனிழல் உருவந் தோன்ற. 6

தன்னுரு நிழலைத் தானே சத்துரு வென்று பாய்ந்து
துன்னுபங் கத்த முந்தித் துளங்கியே உயிரி ழந்த
தென்னலால் உபாயத் தாலே யாவையும் வெல்ல லாமென்(று)
இன்னமோர் நண்டு கொக்கை ஈர்ந்ததோர் கதையும் சொல்லும்.

—வீரமார்த்தாண்ட தேவர்

பஞ்ச தந்திரக் கதைகளைப் பாடிய வீரமார்த்தாண்ட தேவர் சமீப காலத்தில் வாழ்ந்தவர். இந்நூலில் நீதிக் கதைகள் பல உள்ளன. விலங்குகள் பேசிக் கொள்வன போலக் கதைகளை அமைத்து, அவற்றின் வாயிலாக மக்களுக்கு நீதிகளைக் கூறுவதே இந்நூலின் நோக்கமாகும்.

1. செறியும் - நெருங்கிய, உறு - தங்கிய, ஊன் - மாமிசம்.

2. அடவி - காடு, ஊண் - உணவு, ஆணை-கட்டளை, அருந்தி தின்று.

3. எடுப்பெடுத்து - முயற்சி செய்து, உய்ந்தோமாகில் - பிழைத்தோமானால்; நனி - நன்றாக, உய்யும் - பிழைக்கும்.

4. வேழமேனும் - யானையானாலும், பிந்துவதில்லை - காலந் தாழ்த்தி வருவதில்லை.

5. வெய்ய - கொடிய, வெருவி - நடுங்கி, பைய - மெதுவாக, பரு - பெரிய, முழை - குகை, துய்ய-உயர்ந்த, இறைஞ்சி-வணங்கி.

6. பங்கம் - சேறு, புனல் - நீர், பாழ்ந்துரவு-பாழுங்கிணறு.

7. சத்துரு - பகைவன், துன்னு - தங்கிய, துளங்கி - நடுங்கி, ஈர்ந்தது - பிளந்தது.

# IV. வருணனைப் பகுதி

## மழையின்மை

மழையுங் கிடையாது மன்னனது சீமையிலே
தூறல் கிடையாது சோழனது சீமையிலே
பயிரும் கிடையாது பறவைகள் நாடாது
குடிக்கஜலம் கிட்டாது குருவிகள் நாடாது
தீய்ந்தன பயிர்களெல்லாம் தேசங்கள் அத்தனையும்
காய்ந்தன மரங்களெல்லாங் கனியுங் கிடையாது
ஏரி குளங்களிலே இறைக்கஜலங் கிட்டாது
பூமி தனிற்புல்லு பூண்டுங் கிடையாது
எல்லாரும் பரதேசி ஏழைகளாய்ப் போனார்கள்.

## மழை பெய்து நீர் நிரம்பல்

சோழனது சீமையிலே சொலிக்கிறதே மின்னல்கள்
கடலிரைச்சல் போலே கமறிற்றே மேகங்கள்
குமுறிற்று மேகமெல்லாங் குடங்கொண்டு வார்த்தாற்போல்
இரைகிறதே மேகங்கள் ஏகவெள்ளம் பெருகிடவே
சோனை மழைபோலே சொரிகிறதே மேகமெல்லாம்
நல்லமழை பெய்வதனால் நாடுஞ் செழித்தனவே
பூமி குளிர்ந்ததுவே பொய்கை நிரம்பினவே
ஏரிகள் நிரம்பி எதிர்க்கிறதே மேகவெள்ளம்
மடுவுகள் நிரம்பி வழிகிறதே வெள்ளமெங்கும்
ஆறுகள் நிரம்புவதால் அடைபடும் வெகுசனங்கள்
கழனிகள் நிரம்பிக் கால்வாய்கள் தாம்நிரம்பி
ஊற்றுகள் தாம்சுரந்து ஓடிற்றே சலம்விசையாய்
தடாகங்கள் தாம்நிரம்பித் தாமரைகள் பூத்தனவே
வயல்கள் நிரம்பி வாய்க்காலுந் தானோடி
உலர்ந்த மரங்களெல்லாம் உயிருண்டாய்த் தளிர்த்தனவே
அடியற்ற மரங்களெல்லாம் அன்பாய்த் தளிர்த்தனவே
இலையுந் தளிர்களெல்லாம் ஏகமாய்த் தளிர்த்தனவே
செந்நெல் விளைந்தனவே தேசம் செழித்தனவே
பயிர்கள் விளைந்தனவே பலனைக் கொடுத்தனவே.

—அல்லியரசி மாலை

நாடாது - தேடாது, தீய்ந்தன - கருகின, கனி - பழம், பரதேசி - வேறு தேசத்தவர், சொலிக்கிறது - ஒளி வீசுகிறது, கமறிற்றே - முழங்கியது, சோனை மழை - விடா மழை, சொரிகிறது - பெய்கிறது, பொய்கை - குளம், மடுவுகள் - ஆழமான நீர்நிலைகள், கழனி - வயல், தடாகம் - குளம், அடி - வேர்.

## V. தனிப் பாடல்கள்

நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின் ஈசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழகுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டில் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய். 1

வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்
துண்ட பெருக்கம் உரைக்கக்கேள்—அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியி னாலே
சுருக்குண்டேன் சோறுண்டி லேன். 2

—ஔவையார்

பெற்றாள் ஒருபிள்ளை என்மனை யாட்டியப் பிள்ளைக்குப்பால்
பற்றாது கஞ்சி குடிக்குந் தரமல்ல பாலிரக்கச்
சிற்றாளு மில்லையிவ் வெல்லா வருத்தமுந் தீரவொரு
கற்றா தரவல்லை யோவல்ல மாநகர்க் காளத்தியே. 3

—படிக்காசுத் தம்பிரான்

கல்லாத ஒருவனைநான் கற்றா யென்றேன்
காடெறியு மவனைநா டாள்வா யென்றேன்
பொல்லாத ஒருவனைநா னல்லா யென்றேன்
போர்முகத்தை அறியானைப் புலியே றென்றேன்
மல்லாரும் புயனென்றேன் சூம்பற் றோளை
வழங்காத கையனைநான் வள்ளல் என்றேன்
இல்லாது சொன்னேனுக் கில்லை யென்றான்
யானுமென் றன் குற்றத்தால் ஏகின் றேனே. 4

—இராமச்சந்திரக் கவிராயர்

1. அறிமின் - தெரிந்து கொள்ளுங்கள், ஈசன் - கடவுள், கழல் - திருவடி, வெவ்வினை - தீவினை, 'நால்' என்பது நாலடியாரையும், 'இரண்டு' என்பது திருக்குறளையும் குறிக்கும்.

2. தேர்ந்த - ஆராய்ந்த, வழுதி - பாண்டியன், அண்டி - நெருங்கி, சுருக்குண்டேன் - வருந்தினேன்.

3. மனையாட்டி - மனைவி, பற்றாது - போதாது, சிற்றாள் - வேலையாள், கன்று + ஆ = கற்றா = கன்றினையுடைய பசு.

4. எறிதல் - அரித்தல், வெட்டுதல், புலியேறு - ஆண் புலி, மல் = மற்போர் புரியும் தன்மை, ஆரும் - தங்கிய, சூம்பல் தோள் - இளைத்த தோள், வழங்காத - கொடைத் தன்மை இல்லாத.

# அகராதி

அண்டி - நெருங்கி ; சேர்ந்து
அணி - ஆபரணம் ; அழகு
அம்பலம் - ஊர்ப் பொது இடம்
அமர்தல் - இருத்தல்
அமர்ந்து - இருந்து
அமரர் - தேவர்
அரசவை - ராஜ சபை
அளாவிய - நட்போடு பேசிய
ஆக்கம் - செல்வம்
ஆதி - முதல்
ஆர்த்தனர் - பேரொலி செய்தனர்
ஆர்வம் - ஆசை
இத்துணையது - இவ்வளவு
இயலாத - முடியாத
இரங்கி - மனங்குழைந்து
இளவல் - தம்பி
இறுத்தார் - சொன்னார்
இறுதி - முடிவு
இன்றி - இல்லாமல்
ஈண்டு - இங்கு
ஈர்ந்து - வெட்டி
உவந்து - சந்தோஷித்து
உற்ற - தகுந்த
உறாது - அடையாமல்
ஓவியம் - சித்திரம்
கடிகை - பாத்திரம்
கொய்து - பறித்து
கோமகன் - அரச குமாரன்
சான்று - சாட்சி
சினம் - கோபம்
சீற்றம் - கோபம்
செருக்கு - கர்வம்
தனயன் - மகன்
தாளாண்மை - முயற்சி
திண்ணம் - நிச்சயம்
தீட்டிய - எழுதிய
துணுக்குறுதல் - நடுக்க முறுதல்
தூய்மை - பரிசுத்தம்
தொடர்பு - சம்பந்தம்
நாணம் - வெட்கம்
நிலவும் - தங்கும்
நெறி - வழி
பண்பு - குணம்
பாக்கள் - பாட்டுக்கள்
பிணி - வியாதி
பிழை - தவறு
பின்னோன் - இளையவன்
புத்துயிர் - புதிய உயிர்
புரவலர் - அரசர்
புரிதல் - செய்தல்
புறம் - பக்கம்
போற்றுதல் - புகழ்தல்
மருத்துவர் - வைத்தியர்
மன்றம் - ஊர்ப் பொதுச்சபை
முன்னோன் - அண்ணன்
வசை - வைதல்
வண்மை - கொடை
வள்ளல் - கொடையாளி
வறுமை - தரித்திரம்
வாய்ப்பு - சந்தர்ப்பம்
வாய்மை - உண்மை
வான் - ஆகாயம்
விடை - பதில்
விண் - ஆகாயம்

# முத்தமிழ் மாலை I

## முதல் புத்தகம்

நான்காம் படிவம் (சிறப்புப்பகுதி)

தொகுத்தோர் :

**வித்துவான், கோ. அரங்கசாமி ஐயங்கார்,**
தமிழ் ஆசிரியர், செயின்டு எப்பா பெண் உயர்நிலைப் பள்ளி,
மயிலாப்பூர், சென்னை.

**வித்துவான், S. கிருஷ்ணசாமி, B. A., B. O. L.**
தமிழ் ஆசிரியர், கெலெட் உயர்நிலைப் பள்ளி,
திருவல்லிக்கேணி, சென்னை.

**பத்மா பப்ளிஷிங் அவுஸ்**
10, தெற்கு உஸ்மான் ரோடு,
தியாகராய நகர், சென்னை-17.

பதிப்புரிமை]

[விலை 0-9-0

| | |
|---|---|
| முதல் பதிப்பு | நவம்பர்—1950 |
| இரண்டாம் பதிப்பு | ஜூன்—1951 |
| மூன்றாம் பதிப்பு | ஜூலை—1951 |
| நான்காம் பதிப்பு | ஜூன்—1952 |
| ஐந்தாம் பதிப்பு | மார்ச்சு—1953 |
| ஆறாம் பதிப்பு | மே—1954 |

Approved by the Text-Book Committee for class use
Fort St. George Gazette Part I-B Page 108,
Dated 22—5—1951.

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை – 14.

# முன்னுரை

உலகில் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் அவரவர் தாய்மொழிப் பயிற்சி மிகவும் இன்றியமையாததாகும். தமிழைத் தாய்மொழியாகப் பயிலும் உயர்நிலைப் பள்ளிகளின் நான்காவது படிவத்து மாணவர்களுக்குச் சிறப்புப் பகுதிச் செய்யுட் பாடங்களும், உரை நடைப் பாடங்களும், இந்நூலுள் தொகுக்கப்பட்டுள்ளன.

1949-ம் ஆண்டு அரசாங்கத்தாரால் திருத்தி முடிவாக வெளியிடப்பட்ட புதிய பாடத் திட்டத்தின்படி, இந்நூல் அமைந்துள்ளது.

இத்தொகை நூலில் சங்கச் செய்யுட்கள், நீதிச் செய்யுட்கள், தொடர்நிலைச் செய்யுட்கள், பிரபந்தங்களின் செய்யுட்கள், தற்காலப் புலவர் செய்யுட்கள் ஆகிய செய்யுட்களும், உரைநடைப் பகுதியில் தற்கால உலகியலுக்கு ஏற்றவாறு மாணவர் தகுதிக்குத் தக்கபடித் தக்க சான்றோர்களிடமிருந்து வாங்கிய உரைநடைகளும் தொகுக்கப்பட்டுள்ளன.

செய்யுட் பகுதியில் வேண்டிய இடங்களுக்குக் குறிப்புரைகளும், வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. உரைநடைப் பகுதியில் அவை தேவையில்லை என்று விடப்பட்டுள்ளன.

இந்நூலுள் சேர்த்துக் கொள்ளும்படித் தம் அரிய செய்யுட்களையும், கட்டுரைகளையும் வழங்கிய பேரறிஞர்கள் பலர்க்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

இதனை வெளியிட்டு உதவிய பத்மா பப்ளிஷிங் கம்பெனியார்க்கு எங்கள் நன்றியறிதலைச் செலுத்துகின்றோம்.

இந்த நூலை அன்போடு பார்த்தருளும் அரசியலாரும், உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும், தமிழாசிரியர்களும் தக்க ஆதரவு அளிப்பார்கள் என்று முற்றும் நம்புகின்றோம்.

இங்ஙனம்,

தொகுப்பாசிரியர்கள்.

# பொருளடக்கம்

## (சிறப்புப்பகுதி)

## செய்யுள்

—::—

| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| I. | வாழ்த்துப் பகுதி | | |
| | 1. தாயுமானவர் பாடல் | ... | 1 |
| | 2. தேம்பாவணி | ... | 2 |
| | 3. சீறாப்புராணம் | ... | 3 |
| II. | அறவுரைப் பகுதி | | |
| | 1. பழமொழி | ... | 4 |
| | 2. அறநெறிச்சாரம் | ... | 5 |
| III. | தொடர்நிலைச் செய்யுட் பகுதி | | |
| | 1. வில்லிபாரதம் | ... | 8 |
| | 2. மனோன்மணீயம் | ... | 17 |
| | 3. இரட்சணிய யாத்திரிகம் | ... | 20 |
| | 4. பாஞ்சாலி சபதம் | ... | 24 |
| IV. | பல்சுவைப் பகுதி | | |
| | 1. நால்வர் நான்மணிமாலை | ... | 27 |
| | 2. பாரத நாடு | ... | 29 |
| | 3. சிலேடை | ... | 30 |
| | 4. சீட்டுக்கவி | .... | 30 |

## உரை நடை


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சிலப்பதிகாரம்—உரைபெறு கட்டுரை<br>—இளங்கோவடிகள் | .... | 32 |
| 2. | வேள்—பேகன்<br>—ராவ்சாகிப். மு. இராகவையங்கார் | ... | 33 |
| 3. | பொறியூர்தி<br>—வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார் | ... | 36 |
| 4. | ஆயிரத்தில் ஒருவன்<br>—எஸ். வி. வரதராச ஐயங்கார், M. O. L. | ... | 41 |
| 5. | பித்தம் தெளிய<br>—ரா. ஸ்ரீ. தேசிகன், M. A. | ... | 47 |
| 6. | கூட்டுறவுச் சங்கம்<br>—பா. பருவதவர்த்தினி, M. A. B. T. | ... | 51 |

இத் தொகுப்பிற்குச் செய்யுளும் உரைநடையும் உதவியவர்கள் :—

## செய்யுள்

*மனோன்மணீயம்—சைவ சித்தாந்தக் கழகத்தார்.*

*இரட்சணிய யாத்திரிகம்—கிறிஸ்டியன் லிட்ரரி சொஸைட்டியார்.*

*பாஞ்சாலி சபதம்—அரசாங்கத்தார்.*

*பாரத நாடு—திரு. வி. கலியாணசுந்தரனார்.*

## உரைநடை

*வேள்—பேகன்—ராவ்சாகிப். மு. இராகவையங்கார்.*

*பொறியூர்தி—வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார்.*

*ஆயிரத்தில் ஒருவன்*—S. V. *வரதராச ஐயங்கார்*, M. O. L.

*பித்தம் தெளிய*—R. S. *தேசிகன்*, M. A.

*கூட்டுறவுச் சங்கம்—பா. பருவதவர்த்தினி*, M. A. B. T.

இத் தொகுப்பில் இப்பகுதிகளைச் சேர்த்துக் கொள்ளுமாறு அநுமதி அளித்த மேற்கண்ட உரிமையாளர்களுக்கு எங்கள் நன்றி என்றும் உரித்தாகுக.

**தொகுப்பாசிரியர்.**

# முத்தமிழ் மாலை I

## (சிறப்புப்பகுதி)

## செய்யுள்

## I. வாழ்த்துப் பகுதி

### 1. தாயுமானவர் பாடல்

*[தாயுமானவர், சோழ நாட்டில் திருமறைக் காட்டில் கேடிலி யப்பப் பிள்ளை என்பவருக்கு மகனாகப் பிறந்தார்; விஜய ரகுநாத சொக்கலிங்க நாயகர் அரசாட்சியில் கணக்கு வேலை பார்த்துவந்தார்; பின் துறவியானார்; காலம் 17-ஆம் நூற்றாண்டு. இவர் பாடல், மிகவும் பக்திச் சுவை மிக்கது.]*

அரும்பொனே மணியேஎன் அன்பேஎன் அன்பான
அறிவேஎன் அறிவிலூறும்
ஆனந்த வெள்ளமே என்றென்று பாடினேன்
ஆடினேன் நாடி நாடி
விரும்பியே கூவினேன் உளறினேன் அலறினேன்
மெய்சிலிர்த்(து) இருகை கூப்பி
விண்மாரி எனவெனிரு கண்மாரி பெய்யவே
வேசற்(று) அயர்ந்தேனியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனா னாலுமுனை
இடைவிட்டு நின்றதுண்டோ
என்றுநீ அன்றுநான் உன்னடிமை அல்லவோ
யாதேனும் அறியா வெறும்
துரும்பனேன் என்னினும் கைவிடுதல் நீதியோ
தொண்டரொடு கூட்டு கண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே பரம்
சோதியே சுகவாரியே.

—தாயுமானவர்.

### குறிப்புரை

உளறினேன் - பேச்சுத் தடுமாறினேன். வேசற்று - மனம் சோர்ந்து. அயர்ந்தேன் - சோர்ந்தேன். துரும்பனேன் - துரும்பு போன்றவனான யான். நிர்க்குணம் - ஒரு குணமும் இல்லாமை. பரதெய்வம் - மேலான கடவுள். சுகவாரி - இன்பக் கடல்.

### வினாக்கள்

1. பாடப் பகுதி, தாயுமானவர் பாடலில் எந்தப் பகுதியைச் சேர்ந்தது ?
2. ஆசிரியர், கடவுளை எப்படியெல்லாம் அழைக்கிறார் ?
3. கடவுளைக் கூப்பிடும்பொழுது தாயுமானவர்க்கு உண்டான மெய்ப்பாடுகள் எவை ?
4. தாயுமானவர் கடவுளை என்ன வேண்டுகிறார் ?

---

## 2. தேம்பாவணி

[தேன் + பா + அணி. இந்நூலை இயற்றியவர், வீரமாமுனிவர் என்னும் கிறிஸ்துவப் பாதிரியார். இவர், இட்டாலிய நாட்டினர். இவர் இயற்பெயர், பெஸ்கி ; மதம் கிறிஸ்துவம் ; காலம் 18-ஆம் நூற்றாண்டு.]

அறந்தாய் தந்தை சுற்றமு மற்(று)
அனைத்து நீயே கதிநீயே
பிறந்தாய் உலகிற்கு உயிரன்னோய்
பிறந்தெம் துயரும் எம்பகையும்
துறந்தாய் எங்கள் சிறைதீர்த்தாய்
துகள் பூட்டிய வீட்(டு) உயர்வாயில்
திறந்தாய் இவையா வருமறியத் திறன்செய்(து)
அருள்செய் திரங்காயோ !

—வீரமாமுனிவர்.

### குறிப்புரை

துறந்தாய்-போக்கினாய். துகள்-ஈண்டு பாவம். திறன் செய்து-வலிமை கொண்டு.

### வினாக்கள்

1. தேம்பாவணியின் ஆசிரியர் யார்?
2. அந்நூல் கூறும் பொருள் என்ன?
3. கடவுள் தமக்கு எப்படியெல்லாம் இருப்பதாக ஆசிரியர் கூறினர்?
4. ஆசிரியர், கடவுளிடம் என்ன வேண்டுகிருர்?

---

## 3. சீருப்புராணம்

[முகம்மது நபியின் வரலாற்றைக்கூறும் நூல், **சீருப்புராணம்.** இதனை இயற்றியவர், **உமறுப் புலவர்**; இஸ்லாம் மதத்தினர்; எட்டையபுரத்திலிருந்த கடிகை முத்துப்புலவரின் மாணவர்; காலம் 17-ம் நூற்ருண்டு.]

திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக்(கு) அணுவாய்
மதித்திடாப் பேரொளி அனைத்தும்
பொருவினும் பொருவாய் வடிவினும் வடிவாய்ப்
பூதலத்(து) உறைந்தபல் உயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.

—உமறுப்புலவர்.

### குறிப்புரை

திரு - செல்வம். மரு - மணம். பொரு - உவமை. பூதலம் - உலகம். பெருந்தலம் - உலகம் (வீடுமாம்). கருத்தன் - கடவுள்.

### வினாக்கள்

1. சீருப் புராணம் யாருடைய கதையைச் சொல்லும்?
2. கடவுள் எப்படியெல்லாம் உள்ளார்?
3. உமறுப் புலவரைக் குறித்துச் சுருக்கி எழுதுக.
4. பின்வரும் நூல்கள் எந்த மதத்தைச் சாரும்?
   (1) தேம்பாவணி. (2) சீருப்புராணம்.

# II. அறவுரைப் பகுதி

## 1. பழமொழி

[இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. பண்டைக் காலத்தில் வழங்கிய பழமொழிகளை ஒவ்வொரு செய்யுளிலும் அமைத்து முன்றுறையரையனார் என்பவர் ஒரு நூலை இயற்றினார். அந்நூலுக்குப் 'பழமொழி' என்று பெயர். முன்றுறை என்னும் ஊரை ஆண்ட அரசர் இவர் என்று இவர் பெயரால் ஊகிக்கப்படும். இவர் சைனர்; கடைச் சங்க காலம்.]

அறிவுடையவர்களை அறிவுடையவரே அறிவர்

புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம்—நலமிக்க
பூம்புனல் ஊர பொதுமக்கட்(கு) ஆகாதே
**பாம்பறியும் பாம்பின கால்.** (1)

குலவித்தை தானே வரும்

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
**கல்லாமல் பாகம் படும்.** (2)

தளர்ந்த காலத்து உதவும் பொருள்

வைத்ததனை வைப்பென்(று) உணரற்க தாமதனைத்
துய்த்து வழங்கி இருபாலும் அத்தகத்
தக்குழி நோக்கி அறம்செய்க அஃதன்றோ
**எய்ப்பினில் வைப்பென் பது.** (3)

தமக்கு மருத்துவர் தாம்

எமக்குத் துணையாவார் வேண்டுமென்(று) எண்ணித்
தமக்குத் துணையாவார்த் தாந்தேர்தல் வேண்டா
பிறர்க்குப் பிறர்செய்வ(து) உண்டோமற்(று) இல்லைத்
**தமக்கு மருத்துவர் தாம்.** (4)

### கற்றலில் கேட்டலே நன்று

*உணற்கினிய இந்நீர் பிறிதுழியில் என்னும்*
*கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார்—கணக்கினை*
*முற்றப் பகலும் முனியா(து) இனிதோதிக்*
**கற்றலில் கேட்டலே நன்று.** (5)

—முன்றுறையரையனார்.

#### குறிப்புரை

1. புலமிக்கவர் - அறிவுடையவர். புலனும் - தெரியும். புனல் - தண்ணீர். ஊர - ஆடூஉ முன்னிலை. கால் - வளை.

2. உரை முடிவு - சொல்லிலிருந்து முடிவு. முதுமக்கள் - கிழவர். விச்சை - வித்தை. பாகம் - அரை பாகம். கரிகாலன் வழக்குத் தீர்த்த கதை.

3. வைப்பு - சேர்த்து வைத்துள்ள பொருள். துய்த்து - அநுபவித்து. எய்ப்பினில் - தளருங் காலத்தில்.

4. மருத்துவர் - வைத்தியர்.

5. இ + நீர் = இந்நீர். பிறிதுழி - வேறிடத்தில். தேரை - தவளையின் இனம். முனியாது - வெறுக்காமல்.

#### வினாக்கள்

1. பழமொழியின் ஆசிரியர் யார்?
2. 'பாம்பறியும் பாம்பின கால்' விளக்குக.
3. சொல்லால் முறை செய்தவன் யார்? இதன் கதை என்ன?
4. எய்ப்பினில் வைப்பு எது?
5. கிணற்றுத் தவளையின் எண்ணம் என்ன?

---

## 2. அறநெறிச்சாரம்

[அறம்+நெறி+சாரம். தரும வழிகளில் முக்கியமானவற்றைக் கூறும் நூல். இதனை இயற்றியவர், **முனைப்பாடியார்.** இவர் மதம், சமணம்; காலம் 13-ஆம் நூற்றாண்டு.]

## பொறுமையின் சிறப்பு

*எள்ளிப் பிறருரைக்கும் இன்னாச்சொல் தன்னெஞ்சில்
கொள்ளிவைத் தால்போல் கொடிதெனினும்—மெள்ள
அறிவென்னும் நீரால் அவித்தொழுகல் ஆற்றின்
பிறிதென்னும் வேண்டா தவம். (1)*

## கல்வியால் செருக்குக் கொள்ளலாகாது

*பலகற்றோம் யாம்என்று தற்புகழ வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்கு
அச்சாணி அன்னதோர் சொல். (2)*

## ஆராயும் விதம்

*காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்றகுணம் தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும். (3)*

## அறப்பயிர்

*இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ்ச் சிறுகாலைச் செய். (4)*

## உண்மை உறவினர்

*நல்லறம் எந்தை நிறைஎம்மை நன்குணரும்
கல்விஎன் தோழன் துணிவெம்பி—அல்லாத
பொய்ச்சுற்றத் தாரும் பொருளோ பொருளாய
இச்சுற்றத் தாரில் எனக்கு. (5)*

—முனைப்பாடியார்.

### குறிப்புரை

1. எள்ளி - பரிகசித்து. இன்னாச்சொல் - துன்பம் தரும் சொல்.

2. ஞாயிறு - சூரியன். அச்சாணி - கடையாணி.

3. காய்தல் - கோபங்கொள்ளுதல். உவத்தல் - மகிழ்தல். அறிவுடையார் கண்ணது - அறிவுடையாரிடமுள்ளது.

4. பைங்கூழ் - பசுமையான பயிர். அறக்கதிர் - தருமப் பயிர். சிறுகாலை - இளமைப் பருவம்.

5. எந்தை - எம்தந்தை. எம்மை - எம்தாய். நம்பி - எம்தம்பி.

**வினாக்கள்**

1. 'அறநெறிச்சாரம்'—இதனைப் பதம் பிரித்துப் பொருள் கூறுக; இதன் ஆசிரியர் யார்?
2. கல்வியால் கர்வங் கொள்ளலாகாது; ஏன்?
3. ஒரு பொருளை எவ்வாறு ஆராய்தல் வேண்டும்?
4. அறப்பயிரை எப்பொழுது எப்படி வளர்க்கவேண்டும்?
5. நமக்கு உண்மையான சுற்றத்தார் யாவர்?

# III. தொடர்நிலைச் செய்யுட் பகுதி

## 1. வில்லிபாரதம்

### கிருஷ்ணன் தூது சருக்கம்

[வில்லிபுத்தூரார், நடுநாட்டில் சனியூரில் வீரராகவரின் குமாரராக அவதரித்தார்; வடமொழி, தென்மொழி யிரண்டும் வல்ல புலவர்; வடமொழித் தொடரையும், சொல்லையும் மிகுதியாக எடுத்தாண்டவர். சந்தப்பா பாடுவதில் இவர் சிறந்தவர். இவரை ஆதரித்தவன், வரபதி யாட்கொண்டான் என்னும் கொங்கர் குலச் சிற்றரசன். இவர் காலம், 15-ஆம் நூற்றாண்டு. பாடப்பகுதி உத்தியோக பருவத்திலுள்ளது.]

### துரியோதனன் கொலுமண்டபம்

சோதி வானநதி மைந்தனும் பழைய
சுருதியாலுயர் துரோணனும்
ஆதியாக வுயிரினும் வியப்புற வடுத்த
மன்னவ ரநேகரும்
நீதி யாறுவகை யைந்துபத் தொடறுபத்
தொராயிரவர் நிருபரும்
தீதிலாத திறலக்கு ரோணிபதி னொன்று
பெற்ற மிகுசேனையும். (1)

தொக்கவெண் கவரி யாலவட்ட நிரைசொட்டை,
வாள்பரிசை துகிலுடன்
கைக்களாசி யிவைகொண் டுலாவி வருகன்னி
மங்கையர்க ளனைவரும்
மிக்க வேதியர்கள் வல்லபல்கலை விதத்தி
லுள்ளவர்கள் யாவரும்
தக்க தம்பியரும் வந்துசூழ வுயர்தரணி
மேனிருபர் தம்பிரான். (2)

நிரைகதிர்க் கனக நீள்சுவர்ப் பவள
வுத்திரத்திடை நிரைத்தவொண்
பருமணிக் கிரணப் பற்பராக வயிரத்
துலாமிசை பரப்பிவெண்
தரளவர்க்க வயிடூரியப் புதிய கோமளப்
பலகை தைத்துமா
மரகதத்தி னொருகோடி தூணிரை யமைத்த
மண்டப மருங்கரோ. (3)

முட்ட நித்தில நிரைத்த பந்தரின்
நகைத்தசீரரி முகத்தகால்
வட்ட மெத்தை கொடமைத்த பீடமிசை
வாசவன்கொ லெனவைகினான்
பட்ட வர்த்தனரு மகுடவர்த் தனரும்
வந்துசேவடி பணிந்தபின்
இட்ட பொற்றவிசின் முறைமையால் இனிதிருக்க
வென்றவரை ஏவியே. (4)

கண்ணனை யாரும் எதிர்கொள்ளக்கூடாது என்று
துரியோதனன் கட்டளையிடுதல்

காவல் மன்னவர் முகங்கடோறு மிருகண்
பரப்பியமர் கருதுவோர்
ஏவலின்கண் வருதூதனு மிடைய னின்று
நம்மவையில் எய்தினால்
ஓவலின்றி யெதிர்சென்று கண்டு தொழுதுறவு
கூறில்இனி யுங்களூர்
தீவலஞ்செய வடர்ப்ப னென்று நனிசீறினான்
முறைமை மாறினான். (5)

கண்ணன் துரியோதனன் சபைக்கு எழுந்தருளுதல்

இந்த வண்ணமுறை செய்து மன்னவையில்
இராசராசனும் இருக்கவே
தந்த வண்ண னுடன் வந்த வண்ணலொளி
தங்குகண் துயி லுணர்ந்தபின்

கந்த வண்ண மலர் கொண்டு கைதொழுது
காலையில்பல கடன் கழித்(து)
இந்த வண்ண முனிருந்த பேரவையில்
ஏயினுனிசை கொள்வேயினுன். (6)

**வீடுமன் துரோணன் முதலியோர் கண்ணனை வணங்குதல்**

துன்னுகங்கை மகனும் துரோணனெடு சுதனும்
நீதிபுனை விதுரனும்
மன்னர் மன்னனை ஒழிந்த மன்னவரும்
வந்துசேவடி வணங்கினுர்
கன்னனுந் தலைகவிழ்ந் திருந்தனன் அழன்றுளம்
சகுனி கருகினுன்
முன்ன நின்றவர்க ளிட்ட பீடமிசை
மொய்துழாய் முகிலுமெய்தினுன். (7)

**துரியோதனன், கண்ணன் தன் அரண்மனையை அடையாமைக்குக் காரணம் வினவல்**

முன்னகங்குடை கவித்த காளமுகில்
முன்னிருந்தபின் முகங்கொடா(து)
என்னகந்தனை ஒழித்து நென்னலிடை
இந்தமாநகரி லெய்தியும்
பொன்னகங்கொள் புயவிதுர னில்லிடை
புகுந்ததென்கொ லிதுபுகலெனுப்
பன்னகந்தனை யுயர்த்தகோவு முரைபகர
மாலுமெதிர் பகருவான். (8)

**கண்ணபிரான் காரணம் கூறுதல்**

என்னி னின்னில்ஒரு பேதமில்லை
யிதுவென்னில் நின்னிலது என்னினும்
மின்னின் முன்னிலகு விறனெடுப் படை
விதுரன் வந்தெதிர் விளம்பினுன்
உன்னி லின்னமுள தொன்று பஞ்சவ
ருரைக்க வந்தவொரு தூதன்யான்
நின்னி லின்னடிசி லுண்டுநின்னுடன்
வெறுக்க எண்ணுவது நீதியோ. (9)

### நரகை அடைவோர்

அரவ மல்கிய பதாகையாய் மதியமைச்சராய்
அரச ழிப்பினும்
குரவர் நல்லுரை மறுக்கினும் பிறர்புரிந்த
நன்றியது கொல்லினும்
ஒருவர் வாழ்மனையி லுண்டுபின்னு மவருடன்
அழன்றுபொர உன்னினும்
இரவியுள் ளளவும் மதிய முள்ளளவும்
இவர்களே நரகிலெய்துவார். (10)

### வந்த காரியம் யாது ? என்று துரியோதனன் கண்ணனை வினவுதல்

சீதநாண்மலர் மடந்தை கேள்வனிவை
செப்பவுந் தெரிய வொப்பிலா
நாதநாயகன் முகத்தில் வைத்தஇரு
நயனனாகி மிகநகை செயாத்
தூதனாகி வருதன்மை சொல்லுகென
மன்னர் மன்னனிது சொன்னபின்
வேதநாறுமலர் உந்தி வண்துளப
விரைசெய் தாரவனும் உரைசெய்வான். (11)

### பாண்டவர்க்கு நாடு கொடுக்கும்படி கண்ணன் கூறுதல்

சூதினு லரசிழந்து நின்துணைவர் சொன்ன
சொல்லும் வழுவாதுபோய்
ஏதிலார் களென நொந்துதண் ணிழலிலாத
கானினிடை எய்தியும்
தீதிலாவகை குறித்த நாள்பல கழித்து
வந்தனர் சகத்தினில்
கோதிலாத குருகுல மகீப வவருரிமை
நண்பொடு கொடுத்தியே. (12)

சொல்லவா வுரகதுவச நின்னுரிய துணைவர்
தங்களை அழைத்துநீ
வல்லவாறு சிலநாடளித் தவர்கள் தம்முடன்
கெழுமி வாழ்தியேல்

நல்லவாய்மை நிலையுடையை என்றரசர் நாடொறும்
புகழ்வர் நண்புகொண்(டு)
அல்லவாமென மறுத்தியே லறமு மாண்மையும்
புகழு மல்லவே. (13)

### துரியோதனன் பாகம் கோடேன் எனல்

என்று கேசவ னியம்ப அங்கெதிரி ராச
ராசனும் இயம்புவான்
அன்றுசூது பொருதுரிமை யாவையும்
இழந்து போயினர்கள் ஐவரும்
இன்றுநீ விரகின் மீளவுங் கவர
எண்ணின் நானவரில் எளியனோ
சென்றுகானில் அவரின்னமும் திரிவது
உறுதிஎன்று நனிசீறியே. (14)

நீவெறுக்கிலென் இருந்த மன்னவர்
திகைக்கிலென் பலநினைக்கிலென்
போய்நகைக்கில னுரைத்த உண்மைமொழி
பொய்த்ததென்று அமரர்புகலிலென்
வேய்மலர்த் தொடைய லைவரென்னுடன் மிகைத்து
வெஞ்சமர் விளைக்கிலென்
ஈயிருக்கு மிடமெனினும் இப்புவியில் யானவர்க்(கு)
அரசினிக் கொடேன். (15)

### கண்ணன் மீண்டும் துரியோதனனை வேண்டுதல்

கார்வழங் குருமெனச் சினத்திநெடு
கண்ணிலான் மதலை கழறவும்
பார்வழங்க நினைவில்லையேல் அவனி
பாதியாயினும் வழங்குவாய்
தார்வழங்கு தடமார்ப என்னஅது தானும்
மன்னவன் மறுக்க ஐங்(து)
ஊர்வழங்கு கெனவுற் றிரந்தனன் இவ்வுலகெலாம்
உதவு முந்தியான். (16)

துரியோதனன் அதனையும் மறுத்தல்

மாடளிக்குலம் நெருங்கு பைந்துளவ
மாலையாய் மகர வேலைசூழ்
நாடளித் திடவும் ஐந்து பேருடைய
நகரளித் திடவும் வேண்டுமோ
காடளிக்க அதனிடைத் திரிந்துறை
கரந்துபோயினர்கள் காணஓர்
வீடளிக்கினும் வெறுப்பரோ இதனைவிடுக
என்றெதிர் விளம்பினன். (17)

கண்ணன் துரியோதனனுக்கு அறவுரை கூறல்

தந்தை காதலுறு தன்மை கண்டிளைய
தாய்பயந்த இருதம்பியர்க்கு
இந்தவாழ்வும் அரசுங் கொடுத்தவனும்
நின்குலத்(து) ஒருவனிங்குளான்
முந்தமா நிலமனைத் தினுக்குமுயர்
முறைமையால் உரிய அரசருக்(கு)
ஐந்துமா நகருநீ கொடாதொழியி
னென்ன(து) ஆகுமுன தரசியல். (18)

துரியோதனன் சினந்து கூறுதல்

பேரராவணை துறந்த மாயனிவை பேச
வன்பினொடு பின்னையும்
சீரராவினை உயர்த்த கோவும் விழிதீ
யெனும்படி செயிர்த்துளே
போரரா நிருபன் மணிநெடுஞ் சுடிகை
ஆயிரம்கொடு பொறுத்தபார்
வீரரான வர(து)அல்லவோ உரிமை
வேண்டுமோ எனவிளம்பினன். (19)

துரியோதனனைப் போருக்கு வரக் கண்ணன் கேட்டல்

பொய்வளர்ந்த மொழிமன்னன் மற்றிவை
புகன்ற பின்பு புயவலியினால்
ஐவர் தங்கள் அரசுங்கொடாம லடலாண்மை
கொண்டெதிர் அடர்த்தியேல்

மெய்விளங்க வருகுருகுலத் தினிடை வந்து
வெஞ்சமர் விளைக்கவே
கைவழங்கு கெனநின்ற தூணிடை அறைந்(து)
உரைக்குமிவை காவலன். (20)

துரியோதனன் பழித்தல்

புன்பிறப்புடைய பொதுவர் தங்களொடு
புறவில் ஆனிரை புரந்திடும்
உன்பிறப்பும் உரலோடு கோவியர்
உனைப்பிணித்ததும் மறந்துநீ
மன்பிறப்பிலுயர் குருகுலத் தவர்தம் வாய்மை
தானுமொரு மாசிலா
என்பிறப்பும் உணராமலோ சபையில் இந்த
வாசகம் இயம்பினுய் ? (21)

துரியோதனன் தன் ஆண்மை கூறுதல்

ஏவிலங்கு சிலைஐவர் வந்தணுகின்
யானயர்ந்(து) எளிதிருப்பனே
கோவிலங்குபொர அஞ்சுமோ கரட
குஞ்சரங்கள் பகைகொண்டகால்
மேவிலங்குமுன் மலைத்தல்கை யறையவேண்டு
மென்றதுநின் மேன்மையோ
நாவிலங்குமென எண்ணியோ மிகவும்
நன்றுநன்(று) அரசர்ஞாயமே. (22)

கண்ணன் புறப்பட்டு விதுரன் மாளிகையை அடைதல்

ஞாலமுற்று முடையவன் மொழிந்திட
நகைத்து வண்டுவரை நாதனும்
சாலமுற்று மினியவர் கருத்தென
நினைந்து பேரவை தணந்துபோய்க்
கோலமுற்ற சிலைவிதுரன் வாழ்வுபெறு
கோயில் சென்று நனிகுறுகினுன்
சீலமற்றவர் சினந்தபோது மொருதீது
இலாதவர் செயிர்ப்பரோ. (23)

—வில்லிபுத்தூராழ்வார்.

### குறிப்புரை

1. வான்நதி - ஆகாயகங்கை. சுருதி - வேதம். திறல் - வலிமை.

2. கவரி - சாமரம். ஆலவட்டம் - வட்டவடிவமான ஒரு வகை விசிறி. சொட்டை - வளைதடி. பரிசை - கேடகம். துகில் - கொடி. களாசி - பாத்திரம். நிருபர் - அரசர்.

3. கனகம் - பொன். பற்பராகம் - பதுமராகம். துலாம் - வயிரக்கல். மிசை - மேல். தரளம் - முத்து. கோமளம் - அழகு.

4. நித்திலம் - முத்து. அரி - சிங்கம். வாசவன் - இந்திரன். பட்டவர்த்தனர் - பட்டம் தரித்த அரசர். மகுட வர்த்தனர் - மகுடந் தரித்த அரசர். தவிசு - இருக்கை.

5. ஓவலின்றி - ஒழிவில்லாமல். அடர்ப்பன் - அழிப்பேன். முறைமை - நீதி.

6. இசைகொள்வேய் - புல்லாங்குழல். தந்தம் வண்ணன் - வெண்ணிறமான பலராமன். கந்தம் - வாசனை. ஏயினன் - வந்தான்.

7. துன்னு - பொருந்திய. கங்கை மகன் - வீடுமன். சுதன் - மகன் (அசுவத்தாமா). அழன்று - கோபித்து. முகில் - கண்ணன்.

8. நகம் - மலை. (கோவர்த்தன மலை) காளமுகில் - கரிய மேகம் போன்ற கண்ணன். பன்னகம் - பாம்பு. நென்னல் - நேற்று. அகம் - வீடு.

9. இல் - வீடு. மின்னின் - மின்னலைக் காட்டிலும். இலகு - பிரகாசிக்கின்ற. உன்னில் - யோசிக்கும்பொழுது. அடிசில் - உணவு.

10. அரவம் - பாம்பு. பதாகை - கொடி. குரவர் - பெரியோர். இரவி - சூரியன். மதியம் - சந்திரன்.

11. சீதம் - குளிர்ச்சி. மலர்மடந்தை - திருமகள். நயனன் - கண்களையுடையவன். உந்தி - தொப்புள். துளபத்தார் - துளசி மாலை.

12. கோது - குற்றம். மகீப - அரசனே. கான் - காடு. நண்பு - சினேகம்.

13. சொல் - புகழ். அவாவு - விரும்பும். உரகம் - பாம்பு. கெழுமி - பொருந்தி.

14. கேசவன் - கண்ணன். ஐவர் - பாண்டவர். விரகு - தந்திரம்.

15. அமரர் - தேவர். வேய் - அணிந்த. தொடையல் - மாலை. புவி - பூமி.

16. கார் - மேகம். உரும் - இடி. அவனி - பூமி.

17. மாடு - பக்கம். அளிக்குலம் - வண்டுக்கூட்டம். மகரம் - சுறுமீன். வேலை - கடல்.

18. தந்தை - (சந்தனு). ஒருவன் - வீடுமன்.

19. பேர் அரா - அனந்தன். மாயன் - கண்ணன். வன்பு - கொடுமை. செயிர்த்து - கோபித்து. போர் அரா - ஆதிசேஷன். சூடிகை - உச்சி.

20. புகன்ற - சொன்ன. அடல் - பலம். வெம்சமர் - கொடிய போர்.

21. பொதுவர் - இடையர். புறவு - காடு. ஆன் நிரை - பசுக் கூட்டம். கோவியர் - இடைப் பெண்கள்.

22. ஏ - அம்பு. சிலை - வில். அயர்ந்து - சோர்ந்து. கரட குஞ்சரம் - மதயானை. கோவிலங்கு - சிங்கம். மலைத்தல் - போர் செய்தல். ஞாயம் - நீதி.

23. ஞாலம் - உலகம். துவரை - துவாரகாபுரி. சால முற்றும் - நன்றாக முடியும். தணந்து - நீங்கி. கோலம் - அழகு. செயிர்த்தல் - கோபித்தல்.

**வினாக்கள்**

1. வில்லிபாரதத்தின் ஆசிரியரைப்பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.
2. சபையினருக்குத் துரியோதனன் என்ன கட்டளையிட்டான்?
3. துரியோதனன் சபைக்குக் கண்ணன் வந்ததும், யார் யார் எப்படி எப்படி நடந்து கொண்டனர்?
4. முதலில் துரியோதனன் கிருஷ்ணனைக் கேட்டது என்ன?

5. விதுரன் வீட்டில் தங்கியதற்குக் கண்ணன் கூறிய காரணங்கள் எவை?

6. இரவியுள் அளவும், மதியம் உள் அளவும் நரகில் அடைபவர் யார்?

7. துரியோதனன், நாடு கொடுக்கமாட்டேன் என்றபொழுது உரைத்தவை என்ன?

8. துரியோதனன் பாண்டவர்க்குரிய நாட்டை மறுத்ததும் கண்ணன் மீண்டும் என்ன வேண்டினார்?

9. கண்ணன் துரியோதனனுக்குக் கூறிய அறவுரைகள் எவை?

10. நாடு யாருக்கு உரிமையானது என்று துரியோதனன் கூறினான்?

11. சந்தர்ப்பமும் பொருளும் கூறு:—

(1) "இரவியுள்ளளவும், மதியமுள்ளளவும் இவர்களே நரகிலெய்துவார்."

(2) "ஈயிருக்குமிடம் எனினும் இப்புவியில் யானவர்க்கு அரசு இனிக் கொடேன்."

12. பின்வரும் தொடர்கள் யாரைக் குறிக்கும்:—
வானநதிமைந்தன், இசைகொள்வேயினன், நகங்குடை கவித்த காளமுகில், பன்னகம் உயர்த்தகோ.

13. வீடுமன், துரியோதனன், கண்ணன், பலராமன் இவர்களைக் குறிக்கும் தொடர்களை எழுதுக.

---

## 2. மனோன்மணீயம்

*[பாண்டியன் மகளான மனோன்மணி என்பவளின் வரலாற்றை நாடக வடிவில் P. சுந்தரம் பிள்ளை, M. A. செய்துள்ளார்; திருவாங்கூர் மகாராசா கல்லூரியில் தத்துவப் பேராசிரியராக விளங்கியவர்; மதம் சைவம்: காலம் 19–ஆம் நூற்றாண்டு.]*

நடராசன் (தனிமொழி)

## வாய்க்காலைப் பார்த்துக் கூறல்

தமக்கூண் நல்கும் வயற்குப யோகம்
எனப்பலர் கருதும் இச்சிறு வாய்க்கால்
செய்தொழில் எத்தனை விசித்திரம் ஐயோ !
அலைகடல் மலையா மலையலை கடலாப்
புரட்டிட அன்றோ நடப்பதிச் சிறுகால்
பாரிதோ ! பரற்களை நெறுநெறென்(று) உரைத்துச்
சீரிய தூளியாத் தெள்ளிப் பொடித்துத்
தன்வலிக்(கு) அடங்கிய மண்கல் புல்புழு
இன்னதென்(று) இல்லை யாவையும் ஈர்த்துத்
தன்னுள் படுத்தி முந்நீர் மடுவுள்

காலத் தச்சன் கட்டிடும் மலைக்குச்
சாலத் தகுமிவை எனவோர்ந்(து) உருட்டிக்
கொண்டு சென்(று) இட்டுமற்று ஐயா !
அண்டயோனியின் ஆணையின் மழையாய்ச்
சென்றபின் பெருமலைச் சிகர முதலாக்
குன்றுவீழ் அருவியாய்த் தூங்கியும் குகைமுகம்
இழிந்தும் பூமியின் குடர்பல நுழைந்தும்
கதித்தெழு சுனையாய்க் குதித்தெழுந்(து) ஓடியும்
பற்பல பாடுயான் பட்டங் ஈட்டியது
அற்பமே ஆயினும் ஆதர வாய்க்கொள் ;

இன்னமும் ஈதோ ஏகுவன் எனவிடை
பின்னரும் பெற்றுப் பெயர்த்தும் எழிலியாய்
வந்திவண் அடைந்துமற்(று) இராப்பகல் மறந்து
நிரந்தரம் உழைக்குமிந் நிலைமையர் யாவர் ?
நிரந்தரம் ! ஐயோ ! நொந்தனை ! நில் ! நில் !
இரைந்ததென் ? அழுவையோ ? ஆயின் ஏகுதி !
நீரே ! நீரே ! என்னையுன் நிலைமை ?
யாரே உனைப்போல் அநுதினம் உழைப்போர் ?

நீக்கமில் அன்பும் ஊக்கமும் உறுதியும்
உனைப்போல் உளவேல் பினைப்பேறு என்னை ?

## நாங்கூழ்ப் புழு

ஓகோ ! நாங்கூழ்ப் புழுவே ! உன்பாடு
ஓவாப் பாடே உணர்வேன் ! உணர்வேன் !
உழைப்போர் உழைப்பில் உழுவோர் தொழில்மிகும்
உழுவோர்க்(கு) எல்லாம் விழுமிய வேந்துநீ
எம்மண் ஆயினும் நன்மண் ஆக்குவை
விடுத்தனை இதற்கா எடுத்தஉன் யாக்கை .
உழுதுழுது உண்டுமண் மெழுகினும் நேரிய
விழுமிய சேறாய் வேதித்(து) உருட்டி
வெளிக்கொணர்ந் தும்புகழ் வேண்டார் போல
ஒளிக்குவை உன்குழி வாயுமோர் உருண்டையால்

இப்புல் பயிர்நீ இங்ஙனம் உழாயேல்
எப்படி உண்டாம் ? எண்ணு(து) உனக்கும்
குறும்புசெய் எறும்பும் பிழைக்குமா(று) என்னே ?
ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள ?
விழுப்புகழ் வேண்டலை அறிவோம் ஏனிது ?
துதிக்கலம் உன்தொழில் நடத்துதி.

—P. சுந்தரம் பிள்ளை.

### குறிப்புரை

ஊண் - உணவு. விசித்திரம் - ஆச்சரியம். நெறுநெறு - ஒலிக் குறிப்பு. உரைத்து - தேய்த்து. பொடி - தூள். ஈர்த்து - இழுத்து. முந்நீர் - கடல். காலத் தச்சன் - காலமாகிய தச்சன். சால - மிக வும். இராப் பகல் - உம்மைத் தொகை. சென்றிட்டும் - அடைந்தும் அண்டம் யோனி - உலகத்திற்குக் காரணமான கடவுள். தூங்கியும் - அசைந்தும். குடர் - குடல். கதித்து - மிகுந்து. ஊறிடும் - சுரக் கும். சாடி - மோதி. ஆதரவு - அன்பு. பெயர்ந்தும் - மீண்டும். எழிலி - மேகம். நிரந்தரம் - இடைவிடாமல். இரைந்தது - ஒலிக்கிறது. அநுதினம் - நாடோறும். பினை - பின்பு, என்னை - என்ன ?

நாங்கூழ்ப் புழு - மண்புழு. ஓவா - ஒழியாத. விழுமிய - சிறந்த. வேந்து - அரசன். வேதித்து - வேறுபடுத்தி. ஒளிக்குவை - மறைத்துவிடுவாய். பொறை - பொறுமை. விழுப்புகழ் - மேலான புகழ். துதிக்கலம் - துதிக்க வல்லமையில்லோம். நடத்துதி - நடத்துவாயாக.

### வினாக்கள்

1 மனோன்மணீயத்தின் ஆசிரியர் யார்? இந்நூலில் கூறப்படும் பொருள் என்ன?

2. வாய்க்காலைப்பார்த்து நடராசன் கூறியதைத் தொகுத்து எழுது.

3. நாங்கூழ்ப் புழு செய்யும் தொண்டுகள் யாவை?

4. காலத் தச்சனுக்கு வாய்க்கால் செய்யும் உதவி என்ன?

5. வாய்க்காலின் பிறப்பு வளர்ப்புக்களை நடராசன் கூறியபடி வரைக.

6. இடங்குறித்துப் பொருளும் கூறுக :—
   1. " யாரே உனைப்போல் அநுதினம் உழைப்போர் "
   2. " உழுவோர்க்கெல்லாம் விழுமிய வேந்து நீ"

---

## 3. இரட்சணிய யாத்திரிகம்

[கிறிஸ்துவன் வீட்டுலகத்திற்குச் செல்லும் பிரயாணத்தை விளக்கும் நூல், இரட்சணிய யாத்திரிகம். ஆங்கிலத்தில் ஜான் பனியன் என்பவர், இயற்றிய 'The Pilgrim's Progress' என்னும் நூலைப் பின்பற்றி H. A. கிருஷ்ணப் பிள்ளை இந்நூலை இயற்றினர் ; இவர் மதம் கிறிஸ்துவம் ; காலம் 1827—1900.]

நிதான பருவம் – அழிம்பன் தோல்விப்படலம்

### கிறிஸ்தவன் சேல்லும் வழியில் பேரொலி கேட்டல்

ஆயிடைத் தமியனாய் அருள்வழிச்செலும்
தூயவன் நெஞ்சகம் துணுக்குற்(று) ஏங்கிடக்

காயஉறும் இடித்தெனக் கழித்(து) ஓர்பேரொலி
ஏனும் மாத்திரத்(து) எழுந்த(து) எஞ்சவே. (1)

அவன் அஞ்சி ஆலோசித்தல்

பேரொலி முழக்கினுல் பேதுற்(று) உள்ளுடைந்(து)
ஆரியன் அடிபிச காதுநின் (று) இவண்
மாரி இன்ருக அச்சுறுத்த வந்தஇக்
காரியம் யா(து) எனக் கருதும் காலையில். (2)

அவன் அழிம்பனைக் காணுதல்

நஞ்சமும் அவித்தையும் இருளும் நாசமும்
வஞ்சமும் கொடுமையும் மறமும் தீமையும்
செஞ்செவே திரண்(டு) உருத்தெரிய நின்றிடும்
அஞ்சனக் கருநிறத்(து) அவுண யாக்கையன். (3)

பேயும் அஞ்சுறு பெரும்பேய் முகத்தினன்
காய்எரி பங்கியன் கடுத்து றும்கொடு
வாயினன் வக்கிர தந்தன் வன்கணன்
தீஎழு புகைஎன உயிர்க்கும் தீயவன். (4)

பாபத்தை மணந்தவன் பழியைப் பெற்றவன்
சாபத்தைப் படைத்தவன் தரும நாயகன்
கோபத்தை அடைந்தவன் குவல யத்தினுக்(கு)
ஆபத்தை விளைப்பவன் அறத்தைத் தின்பவன். (5)

கிறிஸ்தவன் அஞ்சுதல்

இப்படு பாதகன் அழிம்பன் என்பவன்
மெய்ப்படு கிறிஸ்தவன் விழிக்கு நேர்எதிர்
கைப்படக் காண்டலும் கலங்கி உள்அழிந்(து)
எப்படி எனக்(கு) இனிஉய்(வு)? என்(று)எண்ணுவான். (6)

பின்பு தேறுதல்

அஞ்சியான் பின்னிடல் அழகன்(று) ஆருயிர்
துஞ்சினும் அரசர்க்குத் துரோகி ஆகலன்
நெஞ்சுற எதிர்த்துமுன் நிற்ப தேநலன்
எஞ்சுறேன் எனஉரத்(து) எதிரிட் டான்அரோ. (7)

### இருவரும் போர்புரிய இறுதியில் கிறிஸ்தவன் கூறல்

அணித்(து) அழிம்பனைக் கண்டுநன்
 ஞம்என அகத்தில்
குணித்து வல்விரைந்(து) ஒருகையில்
 கேடகம் கொளுவிப்
பணித்த மந்திரப் பட்டயம்
 ஒருகையில் பற்றித்
துணித்து வஞ்சநெஞ்(சு) உழக்குவல்
 காஎனச் சொல்லி. (8)

### அழிம்பன் நெஞ்சில் கிறிஸ்தவன் காயமுறுத்தல்

மந்தி ரத்தனி வாட்படை
 ஓங்கிய வன்கண்ணன்
தந்தி ரத்தட மார்புறப்
 புகுத்தலும் தலைசாய்ந்(து)
அந்த ரம்பட அலறினன்
 அழிபெரும் குருதி
சிந்தி அங்(கு) அவன்
 வெஞ்சினத் தீத்தழல் சிதைத்த. (9)

### அவனது சிறகை வெட்டப்போதலும் அவன் அதோகதி அடைதலும்

நெஞ்(சு) உரம்கிழிந்(து) அழிம்பன்நீள்
 நிலத்(து) உறீஇ நெடிது
சஞ்ச லம்படத் தடம்சிறை
 இரண்டையும் தடிவான்
செஞ்சொல் ஆரணன் மந்திர
 வாள்கரம் திகழ்த்த
அஞ்சி வாய்வெரீஇ மீக்கிளர்ந்(து)
 அதோகதி அடைந்தான். (10)

—H. A. கிருஷ்ணப் பிள்ளை.

#### குறிப்புரை

1. ஆயிடை - அந்த இடத்தில். எங்கிட - அலற. உரும் இடி. கதித்து - விரைந்து. எஞ்சவே - அழியும்படி.

2. பேதுற்று - மதிமயங்கி. மாரி - மழை

3. அவித்தை - அஞ்ஞானம். மறம் - பாவம். அஞ்சனம் மை. அவுண யாக்கை - அசுர உடல்.

4. காய் எரி - சுடும் தீ. பங்கி - தலைமயிர். வக்கிர தந்தன் - வளைந்த பற்களை யுடையவன். வன்கணன் - கொடியவன். உயிர்த்தல் - மூச்சு விடுதல்.

5. தரும நாயகன் - கடவுள். குவலயம் - உலகம்.

6. உய்வு - பிழைப்பு. எண்ணுவான் - நினைப்பான்.

7. பின்னிடல் - பின் வாங்குதல். துஞ்சினும் - இறந்தாலும். ஆகலன் - ஆகமாட்டேன். எஞ்சுறேன் - பின்னடையேன். உரம் - வலிமை.

8. அணித்து - சமீபத்திலுள்ளது. குணித்து - எண்ணி. கேடகம் - தடுக்கும் கருவி. கொளுவி - கொண்டு. பட்டயம் - வாள்.

9. அந்தரம் - ஆகாயம். குருதி - இரத்தம்.

10. உறீஇ - பொருந்தி (உயிரளபெடை) தடிவான் - வெட்டும் பொருட்டு. ஆரணன் - வேதங்கற்றவன். செம் சொல் - உண்மையான மொழி. கிளர்ந்து - பறந்து. அதோகதி - பாதாளம்.

**வினாக்கள்**

1. இரட்சணிய யாத்திரிகம் எந்த நூலைப் பின்பற்றி எழுதப் பட்டுள்ளது ?
2. கிறிஸ்தவன் கேட்ட ஒலி எப்படி யிருந்தது ?
3. ஒலியைக் கேட்ட கிறிஸ்தவன் என்ன எண்ணினன் ?
4. அழிம்பன் தோற்றத்தைப் பத்து வரிகளில் வரைக.
5. கிறிஸ்தவன் எப்படித் தேறினன் ?
6. அழிம்பனைக் கிறிஸ்தவன் எப்படிக் கொன்றான் ?

## 4. பாஞ்சாலி சபதம்

[இது திரௌபதி செய்த சபதத்தைக் கூறும் நூல். இந்நூலின் ஆசிரியர், சுப்பிரமணிய பாரதியார் ; இவர், திருநெல்வேலி ஜில்லாவில் எட்டையபுரத்தில் பிறந்தவர் ; சிறந்த தேசியக் கவி ; மதம், சைவம் ; இவர் முப்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்தவர்.]

### வீமன் செய்த சபதம்

வீம னெழுந்துரை செய்வான்—இங்கு
விண்ணவ ராணை பராசக்தி யாணை
தாமரைப் பூவினில் வந்தான்—மறை
சாற்றிய தேவன் திருக்கழலாணை
மாமகளைக் கொண்ட தேவன்—எங்கள்
மரபுக்குத் தேவன் கண்ணன் பதத்தாணை
காமனைக் கண்ணழ லாலே—சுட்டுக்
காலனை வென்றவன் பொன்னடிமீதில் (1)

ஆணையிட்டிஃதுரை செய்வேன்—இந்த
ஆண்மையிலாத் துரியோதனன் றன்னை
பேணும் பெருங் கனலொத்தாள்—எங்கள்
பெண்டு திரௌபதியைத் தொடைமீதில்
நாணின்றி "வந்திரு" என்றான்—இந்த
நாய்மகனாந் துரியோதனன் றன்னை
மானமற்ற மன்னர் கண்முன்னே—என்றன்
வன்மையினால் யுத்தரங்கத்தின் கண்ணே (2)

தொடையைப் பிளந்துயிர் மாய்ப்பேன்—தம்பி
சூரத் துச்சாதனன் தன்னையுமாங்கே
கடைப்பட்ட தோள்களைப் பிய்ப்பேன்—அங்குக்
கள்ளென ஊறுமிரத்தங் குடிப்பேன்
நடைபெறுங் காண்பிருலகீர்—இது
நான் சொல்லும் வார்த்தையென் றெண்ணிடல் வேண்டா
தடையற்ற தெய்வத்தின் வார்த்தை—இது
சாதனைசெய்க பராசக்தி ! என்றான். (3)

### அர்ச்சுனன் சபதம்

பார்த்த னெழுந்துரை செய்வான் — இந்தப்
பாதகக் கர்ணனைப் போரில் மடிப்பேன்
தீர்த்தன்பெரும்புகழ் விஷ்ணு—எங்கள்
சீரியநண்பன் கண்ணன் கழலாணை
கார்த் தடங்கண்ணி எந்தேவி—அவள்
கண்ணிலும் காண்டிவ வில்லினு மாணை
போர்த்தொழில் வித்தைகள் காண்பாய்—ஏள
பூதலமே ! அந்தப் போதினில் என்றான். (4)

### பாஞ்சாலி சபதம்

தேவி திரௌபதி சொல்வாள்—ஓம்
தேவி பராசக்தி ஆணையுரைத்தேன்
பாவி துச்சாதனன் செந்நீர்—அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்
மேவி இரண்டுங் கலந்து—குழல்
மீதினில் பூசிநறு நெய்குளித்தே
சீவிக் குழல்முடிப்பேன் யான்—இது
செய்யும் முன்னே முடியேனென் றுரைத்தாள். (5)

ஓமென் றுரைத்தனர் தேவர்—ஓம்
ஓமென் றுசொல்லி உறுமிற்று வானம்
பூமி யதிர்ச்சி உண்டாச்சு—விண்ணைப்
பூழிப்படுத்திய தாஞ்சுழற் காற்று
சாமி தருமன் புவிக்கே—என்று
சாக்ஷி யுரைத்தன பூதங்க ளைந்தும்
நாமும் கதையை முடித்தோம்—இந்த
நானில முற்றும்நல் லின்பத்தில் வாழ்க. (6)

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

### குறிப்புரை

1. விண்ணவர் - தேவர். பராசக்தி = பெண் தெய்வம். கழல் - திருவடி. மாமகள் - இலக்குமி. அழல் - நெருப்பு. காலன் - இயமன்.

2. கனல் - நெருப்பு. மாண் - மாட்சிமை. யுத்தரங்கம் - போர்க்களம்.

3. கடைப்பட்ட - தாழ்மையான. எண்ணிடல் - நினைக்காதீர். சாதனைசெய்க - துணைசெய்வாயாக.

4. பார்த்தன் - அருச்சுனன். தீர்த்தன் - தூயவன். பூதலம் - பூமி.

5. செந்நீர் - இரத்தம். ஆக்கை - உடல். குழல் - தலைமயிர். நறுநெய் - மணமுள்ள எண்ணெய்.

6. பூமி - புழுதி. பூதங்கள் ஐந்து - மண், தண்ணீர், காற்று, நெருப்பு, ஆகாயம். நானிலம் - உலகம்.

**வினாக்கள்**

1. பாஞ்சாலி சபதமென்னும் நூலை இயற்றியவர் யார் ?
2. வீமனிட்ட சபதம் என்ன ? அவன் யார்மீது எல்லாம் ஆணையிட்டான் ?
3. அருச்சுனன் செய்த சபதம் என்ன ?
4. பாஞ்சாலி யிட்ட சபதம் என்ன ?
5. இவர்கள் சபதத்தைக் கேட்ட பூதங்களைந்தும் என்ன செய்தன ?

# IV. பல்சுவைப் பகுதி

## 1. நால்வர் நான்மணிமாலை

[வெண்பா, கட்டளைக்கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா என்ற நான்கும் அந்தாதித் தொடையாக அமைய, 40 செய்யுள் பாடுவது, நான்மணி மாலையாம். சைவ சமயக் குரவர்களான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் இவர்கள் நால்வர் என்று குறிக்கப்படுவர். இந்த நால்வரைப் புகழ்ந்து பாடிய நான்மணிமாலை **நால்வர் நான்மணி மாலை**. இதனை இயற்றியவர் சிவப்பிரகாச சுவாமிகள். வீர சைவர். 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்.]

### சம்பந்தர் (வெண்பா)

வல்லார் பிறப்பறுப்பர் வன்மை நலங்கல்வி
நல்லா தரவின்ப ஞானங்கள்—எல்லாம்
**திருஞான சம்பந்தன்** சேவடியே என்னும்
ஒருஞான சம்பந்தம் உற்று. (1)

### திருநாவுக்கரசர் (கட்டளைக் கலித்துறை)

உற்றான் அலன்தவம் தீயினின் றானலன் ஊண்புனலவா
அற்றான் அலனுகர் வுற்**திரு நாவுக்கரசேனு** மோர்
சொற்றா னெழுதியும் கூறியுமே யென்றும் துன்பில்பதம்
பெற்றா னொருநம்பி அப்பூதியென்னும் பெருந்தகையே. (2)

### சுந்தரர் (விருத்தம்)

பெருமிழலைக் குறும்பரெனும் பரமயோகி
பெரிதுவந்துன் திருவடித் தாமரையைப் போற்றி
விரைமலர்தூய் வந்தனை செய்கின்றான் என்றால்
விளங்கிழையார் இருவரொடு முயங்கலாமோ
உரைமதிநின் தனைவெறுப்ப(து) என்கொல் நின்னை
உடையானுக்கு அடுத்த செயல் உனக்குமாயின்
சுரர் முனிவர் பரவலுறும் பெருஞ்சீர்த் தொண்டத்
**தொகைசெய்தோய்** அறமுதனல்வகை செய்தோயே. (3)

**மாணிக்கவாசகர்** (ஆசிரியப்பா)

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் **வாதவூர் அன்ப**
பாவெனப் படுவதுன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே. (4)

—சிவப்பிரகாச சுவாமிகள்.

**குறிப்புரை**

1. வண்மை - செல்வம். நலம் - புண்ணியம். ஆதரவு - அன்பு. ஞானம் சம்பந்தம் - ஞானத்தின் சம்பந்தத்தை அடைதல்.

2. நம்பி - ஆடவரில் சிறந்தவன். பெருந்தகை - மேன்மையுடையவர். ஊண் - உணவு. துன்புஇல்பதம் - வீடு. பதம் - பதவி. திருநாவுக்கரசர் பெயரைக் கூறி அப்பூதியடிகள்,வீட்டை அடைந்தார்.

3. குறும்பர் - குறும்ப நாயனர். விரை - மணம். தூய் - தூவி. விளங்கிழையார்-பரவையார், சங்கிலியார். முயங்கல்-தழுவல். உடையான் - சிவபெருமான். என்கொல் - என்னே? சுரர் - தேவர். பரவல் - துதித்தல். திருத்தொண்டத் தொகை - இதனைச் செய்தோர், சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

4. வார்-நீண்ட, வாதவூர்அன்பர் - மாணிக்கவாசகர். பொறி-இலக்குமி.

**வினாக்கள்**

1. நான்மணி மாலையின் இலக்கணம் என்ன?
2. நால்வர் என்பவர் யாவர்?
3. நால்வர் நான்மணிமாலையை இயற்றியவர் யார்?
4. பிறப்பறுக்கும் வலிமை உடையவர் யார்?
5. அப்பூதியடிகள் துன்பில்பதம் பெற்றவிதம் எப்படி?
6. திருத்தொண்டத் தொகை யாரால் இயற்றப்பட்டது?
7. யாருடைய பாட்டு பாவென்று சிறப்பித்துச் சொல்லப் படும்?

## 2. பாரத நாடு

[இப் பகுதியைப் பாடியவர், திரு. வி. கலியாணசுந்தரனுர் ஆவர். இவர், உரைநடை எழுதுவதில் ஒப்பற்றவர் ; செய்யுள் பாடுவதில் நாவன்மை நன்கு படைத்தவர் ; பொதுநலத் தொண்டாற்றுவதையே தம் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வருகின்ருர்.]

மலைகளிலே உயர்மலையை மகிழ்ந்தணியும் நாடு
மாநதியுள் வானதியே மல்குதிரு நாடு
உலகில்விளை பொருளெல்லாம் உதிக்கின்ற நாடு
ஒண்டொழிலும் வாணிபமும் ஓங்கியசீர் நாடு
கலைகளொடு மறைமுடியைக் கண்டதவ நாடு
கடவுளருள் கோயில்களே காட்சியளி நாடு
பலசமய உண்மையெலாம் பரந்தொளிரும் நாடு
பழமைமிகு புகழ்பெருகு பாரதநன் நாடே. (1)

உண்மையரிச் சந்திரனை உவந்தளித்த நாடு
உயர்சனகன் ராமபிரான் உலவியபொன் நாடு
கண்ணன்விளை யாடலெல்லாம் கண்டுகளி நாடு
கன்னனொடு பஞ்சவர்கள் காத்ததனி நாடு
தண்மைநிறை புத்தரவர் தருமம்வளர் நாடு
தகைமையுறு வள்ளுவர்தம் தமிழ்பிறந்த நாடு
பண்ணமரும் கரிகாலன் பரித்தபுகழ் நாடு
பகைவர்களும் தொழுதேத்தும் பாரதநன் நாடே. (2)

—திரு. வி. கலியாணசுந்தரனுர்.

### குறிப்புரை

1. வானதி - கங்கை. உதிக்கின்ற - தோன்றுகின்ற.

2. உலவிய - வாசம் செய்த. பஞ்சவர்-பாண்டவர். தண்மை-அருள். தகைமை - மேலான குணம்.

### வினுக்கள்

1. பாரதநாட்டின் சிறப்புக்கள் எவை ?

2. பாரத நாட்டில் தோன்றிய அரசர்கள் யார் ?
3. பாரதநாடு யாருடைய விளையாட்டுக்களைக் கண்டு களித்தது?

---

## 3. சிலேடை

[இச் செய்யுளைப் பாடியவர் காளமேகப் புலவர். இவர் காலம் கி. பி. 15-ஆம் நூற்றாண்டு.]

### பாம்பும் வாழைப்பழமும்

நஞ்சிருக்கும் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்தில் பற்பட்டால் மீளாது—விஞ்சுமலர்த்
தேம்பாயும் சோலைத் திருமலைராயன் வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்.

—காளமேகப் புலவர்.

#### குறிப்புரை

1. நஞ்சு - விஷம், நைந்து. நாதர்-சிவபெருமான். வெம்சினம்-மிக்க கோபம். விஞ்சுதல் - மிகுதல். ஒரு சொல்லுக்கு அல்லது தொடருக்கு இருபொருள் தோன்றப் பாடுவது சிலேடை.

#### வினாக்கள்

1. சிலேடை என்றால் என்ன ?
2. 'பாம்பாகும் வாழைப்பழம்' எப்படி ?

---

## 4. சீட்டுக்கவி

[புலவர் ஒருவர் வள்ளலிடம் ஏதேனும் ஒன்றை வேண்டிச் செய்யுள் வடிவாக அனுப்பும் கடிதத்திற்குச் சீட்டுக்கவி என்று பெயர். கீழ்வரும் செய்யுளைப் பாடியவர், அந்தகக் கவி வீரராகவ முதலியார் ; மதம் சைவம் ; காலம் 17-ஆம் நூற்றாண்டு.]

ஏடாயிரங்கோடி எழுதாது தன்மனத்து
எழுதிப் படித்த விரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக்
கவிவீர ராகவன் விடுக்கும் ஓலை
சேடாதி பன்சிரம் அசைத்திடும்
புகழ்பெற்ற திரிபதகை குலசேகரன்
தென்பாலைசேலம் புரந்துதா கந்தீர்த்த
செழியனெதிர் கொண்டு காண்க
பாடாத கந்தருவம் எறியாத கந்துகம்
பற்றிக் கோலாத கோணம்
பறவாத கொக்கு அனல் பண்ணுதகோடை
வெம்படையில் தொடாத குந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடு தொடுத்து
முடியாத சடிலம்
சொன்னசொல் சொல்லாத கிள்ளையொன்(று) எங்குந்
துதிக்கவர விடல்வேண்டுமே.

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்.

### குறிப்புரை

1. விரகன் - வல்லவன். இமம் - இமயமலை. பரியந்தம்-வரை. சிரம் - தலை. திரிபதகை - கங்கை. செழியன் - பாண்டியன்.

### வினாக்கள்

1. சீட்டுக்கவி என்றால் என்ன?
2. மேற்கொடுக்கப்பட்டிருக்கும் சீட்டுக்கவி யாரால் யாருக்கு எழுதப்பட்டது?
3. இப்பாடலில் குதிரையைக் குறிக்கும் சொற்கள் எவை?

# உரை நடை

## 1. உரைபெறு கட்டுரை

இளங்கோவடிகள்

[பண்டைக் காலத்தில் தமிழின் உரைநடை எப்படி இருந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாக இப்பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. இதனை எழுதியவர், சிலப்பதிகாரத்தின் ஆசிரியரான **இளங்கோவடிகள்** ஆவர்.]

அன்று தொட்டுப் பாண்டியனாடு மழைவறங் கூர்ந்து வறுமையெய்தி வெப்பு நோயுங் குருவுந் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லராயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடுசாந்தி செய்ய நாடுமலிய மழைபெய்து நோயுந்துன்பமும் நீங்கியது.

அது கேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கணாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்திசெய்ய மழைத்தொழிலென்றும் மாறாதாயிற்று.

அது கேட்டுக் கடல் சூழிலங்கைக் கயவாகு வென்பான் நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்ட முந்துறுத்தாங்கு அரந்தை கெடுத்து வரந்தருமிவளென ஆடித்திங்கள் அகவையினாங்கோர் பாடி விழாக்கோள் பன்முறையெடுப்ப மழை வீற்றிருந்து வளம் பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று.

அது கேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழி யகத்து எத்திறத்தானும் வரந்தரு மிவளோர் பத்தினிக் கடவுளாகுமென நங்கைக்குப் பத்தினிக் கோட்டமும் சமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே.

—இளங்கோவடிகள்.

## 2. வேள்—பேகன்

ராவ்சாகிப் - மு. இராகவையங்கார் அவர்கள்

பேகன் ஆவிநன் குடியில் உதித்த பெருந்தகையாவான். இவனை வையாவிக்கோப் பெரும்பேகன் எனவும் வழங்குவர். கடைச்சங்க நாளில் விளங்கிய கடையெழு வள்ளல்களில் இவனும் ஒருவன் என்பது, 'முரசு கடிப் பிகுப்பவும்' என்னும் புறப்பாட்டாலும் (158) சிறுபாணாற்றுப் படையில் 84 முதல் 122 வரையிலுள்ள அடிகளாலும் விளங்கும். இவனது வரையா வள்ளன்மையைப் பரணர் என்னும் பழைய புலவர் புகழுமிடத்து,— "குளத்திலும் வயலிலும் களர் நிலத்தும் ஒப்பப் பெய்யும் வரையறையில்லாத மாரிபோலப் பேகனும் கொடையிடத்துத் தான் அறியாமையைப் படுவதல்லது, பிறர் படை வந்து பொரும்போது அப் படையிடத்துத் தான் அறியாமைப் படான்" என்று அவனது கொடை மடத்தைச் சிறப்பிப்பர்.

இவனது கொடைமடத்தைப்பற்றிய மற்றொரு செய்தியும் உண்டு; இவ்வள்ளல் ஒருகால் மலைவழியே செல்லும்போது மயிலொன்று தன் சிறகை விரித்து ஆடுவது கண்டு, "அது குளிருக் காற்றாது வருந்தி நடுங்குகின்றது போலும்" என்று கருதித்தான் மேற் போர்த்திருந்த உயர்ந்த படாத்தை அதன் மேற் சார்த்திச் சென்றான். இச் செய்தியை—

> "உடாஅ போரா ஆகுத லறிந்தும்
> படாஅ மஞ்ஞைக் கீத்த எங்கோ
> கடாஅ யானைக் கலிமான் பேக!"

எனப் பரணர் கூறுகிறார்.

மேலும் இதே செய்தியை வன்பரணரும், நத்தத்தனாரும் தத்தம் பாடலில் கூறியுள்ளனர்.

"முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்—எல்லை நீர் ஞாலத் திசைவிளங்கத் - தொல்லை - இரவாமலீந்த இறைவர் போல் நீயும் - கரவாம லீகை கடன்" என்புழி ஐயனாரிதனாரும், இச் செய்தியைக் குறித்தார். இவ்வழகிய வரலாற்றால், வேறு பயன் கருதாது உயிர்களிடத்துப் பேகனுக்கு இயல்

பாகவே யிருந்த பெருங்கருணைத்திறம் விளங்கும். "எத் துணையாயினும் ஈத்தல் நன்றெனா – மறுமை நோக்கின்றோ அன்றே பிறர், வறுமை நோக்கின்றவன் கைவண்மையே" என இவ்வள்ளலை நோக்கிப் பரணர் என்ற புலவர் பெருமான், புகழ்ந்திருத்தலும் இவனது கொடைத் தூய்மைக்குத் தக்க சான்றாகும்.

இங்ஙனம் பேகனென்னும் பெருந்தகை வள்ளலுக்கு உரிய மனைவியாயிருந்தவள், கண்ணகி யென்ற கற்புடையரசியாவள். இம் மனையாளுடன் இல்லறம் புரிந்து வந்த பேகனது நல் வாழ்க்கையில் திடீரென்று மாறுதல் ஒன்று நிகழ்வதாயிற்று. அந்தோ! கண்ணகி யென்னும் பெயர் வாய்ந்த மகளிர்க்கெல் லாம் தங்கணவர் பரத்தையர் நலம் நுகர்ந்து மகிழ்ந்திருக்கத் தாம் தனித்திருந்து அவர் பிரிவாற்றாது வருந்துதலே இயல் பாயிற்றுப் போலும்! கோவலனுடைய கற்புடைய மனைவி யாகிய கண்ணகியென்பாள், இளமையில் தங்கணவன் பரத்தை வயத்தனாய் நின்றதனால் மிகவும் வருந்தியது போலவே, இக் கண்ணகிக்கும், தன் கணவனாகிய பேகன் பொதுமகள் ஒருத்தி மோகத்தில் வீழ்ந்தமையால் ஆற்றாமை பெரிதாயிற்று. அருங் குணமும், பெருங் கொடையும் உடைய இப் பெருந்தகை இங் ஙனம் பொதுமகள் வலைப்பட்டு, தன்னரிய மனைவியைப் பற்றிய சிந்தையே யில்லாது உறைந்தது விதியின் வலி போலும். பேகனுக்கும் கண்ணகிக்கும் நேர்ந்த இப்பிரிவு பற்றிய செய்தியானது, அவர்களது இல்வாழ்க்கைக் காலத்தே பெரிதும் உபசரிக்கப் பெற்றுப் பெரும்பயன் அடைந்த புலவர் பெருமக்க ளாகிய கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்க்கிழார் என்ற சான்றோர்க்கு எட்டியதும், அப் புலவர்கள், முன் போலக் கண்ணகியும் பேகனும் சேர்ந்து வாழப் பெரிதும் முயல் வாராயினர்.

இவர்கள் பேகனை யடைந்து, அவன் மனைவி கண்ணகியின் வாழ்க்கையில் இரக்கம் தோன்றக் கூறும் மாட்சி, வியக்கற் பாலது. இப்புலவரிற் கபிலர் என்ற புலவர் பெருமான் பேக னிடம் சென்று அவனை நோக்கி, "சிறந்த மலை நாடனே! போர் வன்மையும், கொடைத்திறமுமுடைய பேக! நேற்று வழி நடந்து வருந்திய என் சுற்றம் பசித்ததால், உயர்ந்த மலையிடத்

துள்ள சிறிய ஊரில் உன் வாயிற் கண்ணே வந்து நின்னையும், நின் மலையையும் வாழ்த்தி யான்பாடி நின்றேனாக, அப்போது துக்கத்துடன் சொரிந்த கண்ணீரை யுடையவளாய்ப் பொருமி, வேய்ங்குழல் இரங்கி யொலிப்பதுபோல, ஒருத்தி அழுதாள் ; இரங்கத்தக்க அன்னாள், யார் கொல்லோ, சொல்லுக " என்று, அவ்வள்ளலுங் கேட்டிரங்கும்படிக் கூறினர்.

இவ்வாறே பரணரும், அவ் வள்ளலைக் கண்டு, " நேற்று மாலையில் மழை மிகுந்த நின்நாட்டை நாங்கள் பாடிக்கொண்டு வந்தோமாக நீல மலர்போன்ற கண்களினின்றும் கலங்கி வீழ்ந்த நீர்த்துளிகள், பூணையுடைய தன் மார்பகத்தை நனைக்கும்படி வருந்தி நின்ற ஒருத்தி, எம்முன் வந்து தோன்ற, அவளை நோக்கி, நாங்கள், "இளையோய் ! எங்களுடைய நட்பை விரும்பும் தலைவனாகிய பேகனுக்கு நீ உறவினையோ " என்று வணங்கிக் கேட்ட போது அவள் காந்தள் மொட்டுப்போன்ற தன் விரலாலே கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "நாங்கள் அவனுடைய உறவினர் அல்லேம், கேண்மின், விளங்கிய புகழையுடைய பேகன் எம்மை யொக்கும் ஒருத்தியுடைய அழகைக் காதலித்துத் தன் தேரில் இந் நல்லூரின்கண் அடிக்கடி வருவன் என்று சொல்லுவர் " என்று கூறினாள். " இஃது என்னே ! தலைவ ! நீ அவட்கு இரங்கி அருள் பண்ணாதிருத்தல் மிகக் கொடியது ; மயிலுக்கிரங்கிப் போர்வையளித்த பெருங் கருணையுடைய பேக ! யாம் இப்போது பசித்து நின்பால் வரவில்லை ; எம்மால் தாங்கப்பட வேண்டிய சுற்றமும் இப்போது இல்லை ; பேரருளாள ! நீ அற நெறியில் ஒழுகவேண்டும் என்பதே யாம் இரக்கும் பரிசில் ; ஆதலால் நீ உன் தேரில் ஏறிச் சென்று, பார்ப்பதற்கரிய துக்கத்தைக் கொண்ட உன் கற்புடைய மனைவியின் மனக்கலக்கத்தைத் தீர்ப்பாயாக " என்றனர்.

இவ்வாறே, தாம் பரிசில் வேண்டி வரவில்லை யென்றும், நீ அவளைச் சென்று சேர்தலே யாம் வேண்டுவதென்றும்—அரிசில் கிழாரும், பெருங்குன்றூர்க்கிழாரும் பேகனைக் கண்டு பாடினர். இங்ஙனம், அக்காலத்தே தமிழ் நாட்டுப் பெருமக்களாக விளங்கிய புலவர் வேண்டுகோளுக்குப் பேகன் இன்னது செய்தான் என்பது தெரிந்திலதேனும், வேண்டியோர்க்கு வேண்டியாங் களிக்கும் பெருவள்ளலாகிய அவன், இத்தகைய பெருமக்கள் நெடுந்தூரத்தி

விருந்து வந்து தன்பால் வேண்டிய விருப்பத்தை நிறைவேற்றி யிருப்பன் என்றே நம்பலாம்.

இனி இவ் வேள்-பேகனைப் பாடிய அரிசில்கிழார், வேளாவிக் கோமான் பதுமனுக்கு மகள் வயிற்றுப் பேரனாகிய தகடூர் எறிந்த பெருஞ்சேர லிரும்பொறையைப் பதிற்றுப் பத்து எட்டாம் பத்தாற் புகழ்ந்துள்ளார். எனவே, வேளாவிக்கோவின் வழியினனாகிய பேகனும் அவ்வாவிக்கோவின் மகள் மகனாகிய பெருஞ்சேர லிரும்பொறையும் ஒரு காலத்தவராதல் பெறப்படும். ஒருகால், பேகன், வேளாவிக்கோமான் பதுமனுக்கு மகனாக வேனும், அன்றி மகன் மகனாக வேனும் இருத்தலும் கூடும். வையாவிக் கோப்பெரும் பேகன் என்று இவ் வள்ளல் வழங்கப் படுவதால், இவனூர் வையாவிபுரியாகிய ஆவிநன்குடி என்பது தெரிகிறது.

இவ் வாவிநன்குடிக்குச் 'சித்தன் வாழ்வு' என்பதும் ஒரு பழம் பெயராம். இதனை,

> " நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ்(வு)
> இல்லந்தொறு மூன்றெரி யுடைத்து—நல்லரவப்
> பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின்
> நாட்டுடைத்து நல்ல தமிழ்."

என்னும் ஒளவை வாக்காலும் அறிக. இப் பாட்டாற் சித்தன் வாழ்வாகிய ஆவிநன்குடியில், சங்க நாளில் அந்தணர் மிகுந்திருந் தமை வெளியாம். சித்தன் வாழ்வு என்பது முருகக் கடவுள், கோயில் கொண்டமைபற்றி வந்த பெயர் ; " சித்தன் - பிள்ளை யாருக்குத் திருநாமம் " என்பர் நச்சினார்க்கினியர்.

---

## 3. பொறியூர்தி

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார்

உலகில் இயல்பாகக் காணப்படுவதையே மனம் நம்பு கின்றது ; அங்ஙனமல்லாதவற்றை நம்பத் துணிவதில்லை பாருங்கள் ; பரகாய பிரவேசமென்று ஒரு வித்தையுண்டு என்று

ஒருசார் பண்டைய நூல்களிற் படிக்கிறோம். இவ்வாறுன வற்றைப் படிக்கும்போதெல்லாம், இவை நிகழக்கூடியனவா என்ற ஐயம் மனத்தகத்துத் தோன்றுகின்றது. இவ்வாறு மனந் தடுமாறு மிடத்து எல்லாம்வல்ல இறைவனது அருளை முன் னிட்டு முயன்று நிற்பார்க்கு, எதுதான் செய்ய இயலாது என்று ஒருசாரார் மனம் சமாதானப்படும். இங்ஙனம் தோன்றப் பெறுதவரோ கண்டதே பொருளென்றும், மற்றவை கற்பித மென்றும் நினைப்பாராதலால் அவர் மனம் தெளிவுறுது.

இவ்வண்ணம் சிலர், சில பொருள்களில் நம்பிக்கை கொள் ளாமை குறித்து அவர்மீது குறை கூறுவதிற் பயனில்லை. ஆனால், தாம் கண்கூடாகக் காணுதவை யெல்லாம் உண்மை யல்லவென்று கூறத் துணிவது நல்லறிவுக்கு அழகன்று என் பதை மட்டும் வற்புறுத்திக் கூறலாம். நாம் காணுத எத் தனையோ வெளிநாடுகளிலுள்ள பொருள்களைப்பற்றிப் பத்தி ரிகை வாயிலாக அறிகிறோம்! அங்ஙன முணரும்போது அவை மெய்யென்று நம்பவில்லையா! அவ்வண்ணமே முற்காலத்து நூல்களில் காணப்படுஞ் சில 'இங்ஙன் மிருக்குமா' என்று நம் மிளமையில் ஐயுற்றவை, அங்ஙனம் இருந்திருக்கலாமென்று ஓரெண்ணம் நம் நெஞ்சில் தோன்றுமாறு பிற்காலத்துச் செய்வன இல்லையா? அவற்றுள் ஒன்றைப்பற்றி இங்குக் கூறுவேன்.

இராமபிரான் இராவணனைச் சங்கரித்துச் சீதையை மீட்டதும், நாட்களைக் கணக்கிட்டுப் பார்த்தான்; 14 வருஷம் கழித்துத் தான் மீண்டுவருவதாகப் பரதனிடம் குறித்த நாள் அன்றே என்று தெரியவந்தது. அப்போது ஸ்ரீராமன் விபீஷணனை நோக்கி,

> **ஆண்டுபத் தொருநாலு மின்றோ டறுமாயின்**
> **மாண்டதா மினியென்குலம் பரதனே மாயின்**
> **ஈண்டுபோக வோரூர்தி யுண்டோ..........**

"பதினன்கு ஆண்டுகள் வனத்தில் கழித்துவிட்டு நான் மீண்டு வருவதாகப் பரதனுக்கு வாக்களித்தேன். அதன்படி நான் இன்று வருவேன் என்று பரதன் எதிர்பார்த்து நிற்பான்; என்னைக் காணுவிடில் உயிர் நீப்பன். பரதன் மாள என்

குலமே அழியும். ஆகையினால் கடுவேகமாகச் சென்று இன்று சூர்யாஸ்தமனத்திற்குள் என்னை அயோத்தி சேர்ப்பிக்கக்கூடிய ஊர்தி ஏதேனுமுண்டோ" என்று வினவினான். விபீஷணன் 'தூண்டு விமான முண்டென்று தொழுது,'

"ஈங்குளாரெலா மிவருவது இவரின் நீ யினிது
பூங்குலா நகர்புகுதி யிஞ்ஞான்று.............."

"எம்மிடம் ஒரு விமானமுள்ளது; அதில் இவர்ந்து சென்றால் இன்றே அயோத்தி சேர்ந்துவிடும்" என்று புகன்றார்.

பின்னர்த் தன்னாணையால் விபீஷணன் கொணர்ந்த புஷ்பக விமானத்தின் மீது சேனையோடு சேர்ந்து இராமபிரான் அன்றே பரத்துவாசாச்சிரமஞ் சார்ந்து, அநுமானைத் தான் மீண்டுவந்த செய்தியைப் பரதனிடம் கூறுமாறு அனுப்பினான். அநுமான், அக்கினிப்பிரவேசஞ் செய்யச் சித்தமாயிருந்த பரதனுக்கு இராம பிரான் மீண்டுவந்த செய்தியை யுணர்த்தி, அவனை அங்கியிற் புகவொட்டாது தடுத்துக் காத்தானென்று இராமாயணத்திற் படித்திருக்கிறோம்.

தாம் காணாதவை யெல்லாம் மெய்யன்றென்று எண்ணும் மனப்பான்மையார் இன்றைக்கு, வெகு சிலவே யாண்டுகட்கு முன்பு இது கட்டுக்கதை யென்று எண்ணியிருப்பார். இப்போது படைகளுடன் வானத்துப் பறந்து செல்லும் வானக் கப்பலைப் பற்றி யறிந்திருத்தலால், இராமாயணத்துக் கூறிய புஷ்பக விமானச் செய்தியும் ஒருகால் உண்மையாயிருக்கலாமென்று எண்ணுதற்கு இடந் தருகின்றதன்றோ?

இராமாயணத்துக் கூறிய புஷ்பகவிமானம் போன்று சீவகசிந்தாமணியென்ற பெருங்காப்பியத்தில் ஒரு வகையான ஊர்தியைப் பற்றிய நிகழ்ச்சி சொல்லப்பட்டுள்ளது. இராசமா புரத்திலே குருகுலத்துதித்த சச்சந்த னென்னும் அரசன், விசயை யென்பாளை மணந்து அவளது பேரழகை எப் போதும் நுகர்ந்திருக்கக் கருதி நாட்டைக் கட்டியங்கார னென் பானிடம் ஒப்புவித்துத் தான், அந்தப்புரத்திலேயே இன்புற் றிருந்தான். இங்ஙனமிருக்கையில், விசயை கருவுற்றவள், ஒரு நாள் மூன்று கனாக்கண்டு அவற்றை அரசனிடங் கூறினாள் அரசனும் அவற்றின் பயனைக் கனாநூலின்படி ஆய்ந்து

உரைத்தனன். பின்னர், விசயையுற்ற கருவு நாடோறும் வளரலாயிற்று. அப்போது மன்னனுக்கு எந்திரவூர்தி ஒன்று இயற்றுவிக்க வேண்டுமென்று ஓர் எண்ணந் தோன்றிற்று, அதனால், மன்னன் அந்தக் கலையில் வல்லானொருவனைக் கூவி ஓரெந்திரவூர்தி யியற்றக் கட்டளையிட்டனன். அந்தத் தச்சனும், மன்னவன் கட்டளைப்படி,

> "பல்கிழியும் பயினுந் துகில்நூலொடு
> நல்லரக்கும் மெழுகுந் நலஞ்சான்றன
> அல்லனவு மமைத்தாங் கெழுநாளிடைச்
> செல்வதோர் மாமயில் செய்தன னன்றே."

அவ்வாறு இயற்றிய அந்த மயிற்பொறி உயிருடனிருக்கும் மயில் போலவே தோன்றிற்று. அந்த மயிற்பொறியின்மீது ஏறி வானவழியாகச் செல்லவும் பூமியிலிறங்கவும் தன்னுடைய தேவியைச் சச்சந்த மன்னவன் பயிற்றுவித்தான். பின்னர் ஒரு சமயம், கட்டியங்காரனென்பான் அரசை வௌவக் கருதி அந்தப்புரத்தை முற்றுகை செய்தபோது, சச்சந்தன் மனைவியான விசயை, அந்த மயிற்பொறியின் மூலமாகவே அரசன் அநுமதியின் மேல் அந்தப்புரத்தினின்று வெளியேறினாளென்பதே இந்நிகழ்ச்சி. சிறிது காலத்திற்கு முன் இந்தப் பகுதியைப் படித்தவரிற் பலர், பறக்கும் மயிற்பொறி அரசன் இயற்றித்தர அதன் மூலமாக விசயை பறந்து அந்தப்புரத்தினின்று வெளியேறினாளென்ற செய்தியைப் பற்றி, "இது நிகழ்ந்திருக்குமா ?" என்று நினைத்திருப்பர். விஞ்ஞான சாஸ்திரம் வளர்ச்சியுற்று மயில்பொறிபோன்ற வான விமானம் பறந்து செல்வதைப் பல்காலும் கண்கூடாகக் கண்டறியும் இக்காலத்திலோ, இது நிகழ்ந்தது கூறியதாகவே கருத இடந் தருகின்றதல்லவா ?

இங்ஙனம் வானத்தியங்கும் பொறிகளேயன்றி நிலத்திலூர்ந்து செல்லும் பொறியும் இருந்ததாகக் காண்கிறது. அது கூறுவேன்.

அவந்தி நாட்டில் உஞ்சைப்பதியில் சண்டமகாசேனனென்னும் பெயர் பூண்ட பிரச்சோதனனென்று ஓர் அரசனிருந்தான். அவனுக்கு வாசவதத்தை என்று ஓர் அருமை

மகளிருந்தாள். அன்னாளுக்கு உதயணனை யாழ் பயில்விக்கு மாறு செய்யப் பிரச்சோதனன் விரும்பினான். பிறகு மந்திரி மாரோடு ஆலோசித்து, அவனையகப்படுத்தச் சூழ்ச்சி செய்தான். அதன்படியே சண்டமகாசேனனென்ற பிரச்சோதனன் வேழப்பொறி யொன்றை இயற்றுமாறு பணிக்கப் பணியாளரும்,

" அரக்கி னும்மெழுக் காகிய நூலினும்
மரத்தி னும்கிழி மாவின் மயிரினும்
விரித்த தோலினும் வேண்டிய வற்றினும்
தரித்து யானையைத் தாமிக் கியக்கினர்."

இவ்வாறு இயற்றிய வேழப்பொறி செய்தொழில் வன்மையால் போலியானையாகப் புலப்படாது, இயற்கை யானையாகவே புலப்பட்டதென்பது உதயணன் சரிதையைப் படிப்பார்க்கு இனிது விளங்கும்.

மற்றும் உதயணன் கதையை யுற்று நோக்குவார்க்கு நிலத்தியங்கும் மற்றோர் ஊர்தியும் இருந்ததென்பது விளங்கும். உதயணனுக்கு உயிர்த்தோழனும் மந்திரியுமான யூகியென்பான், உதயணனைத் தனது மதியின் வலியால் பிரச்சோதனனிடமிருந்து வாசவதத்தையோடு வெளியேற்றிச் சயந்திநகரம் புகுவித்த பிறகு, தான் உஞ்சையம்பதியில் முடிக்க வேண்டுவன முடித்துத் தனது நட்பினனான யவனப் பாடித்தலைவன்,

" கையிற் புனைந்த கழிநுண் சிறப்பொடு
வையகத் தியங்கும் வெய்யவ னாரும்
தேரி னன்ன செலவிற் றாகி
யாவரு மறியா வரும்பொறி யாணியின்
இருப்புப் பத்திர மிசையக் கவ்வி
மருப்புப் பலகை மருங்கணி பெற்றுப்
பூணி யின்றியும் பொறியி னியங்கும்
மாண்வினை வையம் மனத்தி னெய்ப்பக்
கடுப்பும் தவிர்ப்புங் கண்டன னாகி
............................................
வத்தவ னன்னா டத்திசை முன்னி

வித்தக வாணி வேண்டுவயின் முறுக்கி
..................................................
பூந்தார் மார்பிற் புரந்தர குமரனிற்
போந்தனன்."

(பெருங்கதை, யூகிபோதரவு—171....197) என வருவது காண்க.

இங்ஙனமிருந்த நம் கலையறிவுகள் இடையிற் பிறநாட்டாரின் போராட்டத்து நேர்ந்த குழப்பத்தினால் மங்கிவிட்டது. இனியாவது நம் நாட்டார் மனவமைதியுற்று விஞ்ஞான சாஸ்திரம் முதலிய கலைகளில் வல்லுநராய் மேம்பட்டுத் திகழ்வார்களாக.

---

## 4. ஆயிரத்தில் ஒருவன்

S. V. வரதராஜன், எம். ஒ. எல்.

தமிழ் இலக்கியங்களில் போற்றியுரைக்கப்படும் உயரிய குணங்களுள் சிறந்தவை வீரமும் ஈகையுமாகும். இவை இரண்டையும் வாழ்க்கையின் இரு கண்களாகத் தமிழர் கருதி வந்தவராவர். இவ்விரு குணங்களாலும் தம் புகழை நிறுவிய சான்றோர் வரலாறுகள் பல உண்டு. அவை கற்பார் மனத்தை உருக்கிப் பரவசமாக்கும் பெற்றி வாய்ந்தவை. இவ்விரு ஆன்றகுணங்களுள் முன்னது, இன்றியமையாத காலங்களிலே மாந்தரிடத்துத் தோன்றுவதாகும். பின்னதோ, பிறர் துன்பங் கண்டுழி என்றும் இளகிய மனமுடையார் எவர்மாட்டும் உண்டாகத்தக்க உள்ள நெகிழ்ச்சியின் செயலாகத் திகழ்வது. தமிழர் ஈகையினை எவ்வாறு போற்றி வந்தனர் என்பது,

"சாதலின் இன்னாத தில்லை ; இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை."

என்ற மறை மொழியால் நன்கு விளங்கும். ஈகையென்னும் பேரறத்தினால் ஈட்டுதற்குரியது புகழேயாம். இதுபற்றியே

வள்ளுவனாரும், 'ஈகை' என்ற அதிகாரத்தை யடுத்துப் 'புகழ்' என்ற அதிகாரத்தை யமைத்து,

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு."

என்றனர். உரையாசிரியராகிய பரிமேலழகரும், 'இது (புகழ்) பெரும்பான்மையும் ஈதல்பற்றி வருதலின், அதன்பின் வைக்கப் பட்டது' என்றார்.

தாம்பெற்ற செல்வத்தினைச் சிறைப்படுத்தாமல், தமக்கும் பிறர்க்கும் பயன்படுமாறு ஈதல் என்னும் அருங்குணம், பரந்த நோக்கமும், கனிந்த உள்ளமும் உடைய சிலரிடமே அமைவ தாகும். இத்தகைய ஈகைக் குணம், மாந்தர் பசிப்பிணியை நீக்கி வந்ததுடன் கலைகளையும் வளர்த்து வந்திருக்கிறது. ஈகை யின் பயனை எய்தினோரது உள்ளத்திலே சுரந்த நன்றியறி வானது பாடல்களின் உருக்கொண்டு நமது இலக்கியங்களில் ஆங்காங்கே மிளிர்கின்றன.

ஈகையென்னும் இனியகுணத்தால் புகழ் நிறுவிய கடை யெழுவள்ளல்களின் வரலாறுகளே யன்றிப் பிற்காலத்தே விளங் கிய கொடை வள்ளல்கள் சரிதங்கள் பல உள. அவற்றுள், இங்கு யாம் கூறப்புகுந்த சோழநாட்டுத் தருமதேவதை என்று போற்றப்பெற்ற **சடையப்ப வள்ளலின்** சரிதமும் ஒன்றாகும்.

சடையப்ப வள்ளலார் சோழ நாட்டிலுள்ள திருவெண் ணெய் நல்லூரிலே தோன்றி விளங்கியவர். இவரது தந்தை யின் பெயர் சங்கரவள்ளல் என்பது. இவர்கள் வமிசத்தினர் கடற்கரைப் பட்டினமாகிய புதுவை (புதுச்சேரியில்) கப்பல் வாணிகம் நடத்தி வந்தனர். மற்றும் பல்லாயிரம் ஏர்வைத்து உழுவித்துண்ணும் செல்வ வளமும் இவர்களுக்கு வாய்த்திருந் தது. நம் வள்ளல் பெருந்தகைக்குச் **சடையன், சரராமன், கண் ணன், திரிகர்த்தராயன்** என்னும் பெயர்களும் வழங்கி வந்தன. அவற்றுள் சடையன் என்பது, இவரது குலப்பெயராகும். சரராமன் என்பது, இவர்க்கு இடுமொழியான் அமைந்த பெயர் என்பர். இவ்வள்ளல் தம்மை நாடிவந்த பல்லோர்க்குக் கண்

போன்று உண்டியும், பரிசிலும் பரிவுடனளித்துக் காத்து வந்த தால், கண்ணன் என்று அழைக்கப் பெற்றார். ஒருகால் மூவேந் தரையும் அழைத்துச் சிறப்பாக விருந்தளித்த காலத்து இவர்க் குத் திரிகர்த்தராயன் என்ற பெயர் அன்னோரால் வழங்கப் பெற்றது.

இவ்வள்ளலே, 'ஆயிரத்தில் ஒருவர்' என்று கருதினார் கவிச் சக்கரவர்த்தியாகிய கம்ப நாடர். இவர் தமிழ் நாட்டிலே தோன்றியது அந்நாட்டின் தவப்பயனே என்று கூறத் தடை யில்லை. இவர் தோன்றியிராவிடில் கம்பர் என்ற கவி திலகரைத் தமிழகம் அவரது தகுதிக்குத்தக்க அளவிலே பயன்படுத்திக் கொண்டிராது எனலாம். கம்பராமாயணம் நமக்குக் கிடைப் பதற்கு ஏதுவாயிருந்தவர் இவரேயாவர். தம் போன்ற இன்கவிப் புலவர்களைச் சடையப்ப வள்ளல் எங்ஙனம் ஆதரித்தனர் என்பதைக் கம்பநாடர்,

'ஆன்பாலும் தேனு மரம்பைமுதல் முக்கனியும்
தேன்பாய உண்டு தெவிட்டுமனம்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணெய் வருசடையா கம்பன்
இறக்கும்போ தல்லால் இனி.'

எனத் தம் முள்ளத்தே ஊறியெழுந்த நன்றியறிவினால் பாராட்டியுள்ளார்.

அணைத்தூட்டும் தாயையும், ஆதரித்து வளர்க்கும் தந்தை யையும் இளம்பிராயத்திலேயே இழந்து, அநாதையாய்த் தமது வீட்டுவாயில் கம்பத்தைப்பற்றி நின்ற வண்ணம் வள்ளலின் வதனத்தைக்காண ஆவலுடனிருந்த கம்பரைச் சடையப்பர் கண்டார்; கண்டதும் இரங்கி, அவரது ஆதரவற்ற நிலையை உசாவியறிந்து தமது இல்லத்திலேயே தமது குமாரருக்குத் தூக்குத் தூக்கியாக அமர்த்திக் கொண்டார். ஆயினும், கம்ப ரிடம் பொருந்தியிருந்த அறிவு வளம் கண்டு, அவர் கல்வி பயில் வதற்கு ஏற்பாடு செய்தார். கல்வியில் கம்பர் பெரியவராகி வர வரத் தூக்குத்தூக்கி வேலை நீங்கிற்று. வள்ளல் கம்பரைத் தமக்கு ஒப்பான நிலையில் வைத்துப் போற்றிவந்தார். அவரா லேயே கம்பருக்குக் குலோத்துங்க சோழமன்னர் அவைப் புலவ ராக விளங்கும் பதவியும் கிடைத்தது; இராம கதையைத்

தமிழில் இயற்றுமாறு குலோத்துங்க சோழரைக் கொண்டு தூண்டியவரும் இவ்வள்ளலாரேயாவர்.

கம்பர், இராமாயணத்தைப் பாடி முடித்தபின், அதைத் திருவரங்கத்திலே அரங்கேற்றும்போது, அக்கதையில் நூறு பாட்டுக்கு ஒரு பாட்டு வீதம் வள்ளலாரின் பெயரையும், அவரது ஈகைக் குணத்தையும் பாராட்டியிருப்பது கண்ட வைணவ அறிஞர்கள், 'படிகொண்ட சீர்த்தி இராமாயணமென்னும் பக்தி வெள்ளம் குடிகொண்ட' இக் கதையில் அடிக்கடி நரஸ்துதி வருகின்றதே என்று தடை கூறலாயினர். கம்பர், சடையப்ப வள்ளலாரிடம் தமக்குள்ள கடப்பாட்டை எடுத்து விண்ணப்பிக்க, அந்த வைணவ அறிஞர்கள், 'ஆயின், ஆயிரம் பாடல்களுக்கு ஒரு பாடலில் சடையன் பெயர் வரலாம்' என்று பணித்தார்கள். கவிதிலகர், 'இதுவும் நன்றே; சரராமன் நூறில் ஒருவர் அல்லர். ஆயிரத்தில் ஒருவரேயாவர்!' எனக் கொண்டு மனந்தேறி அவ்வாறே அமைக்கலானார். ஆயினும், அநாதையான தம்மைக் கவியரசாக்கிய வள்ளல் பெருந்தகைக்கு எவ்வாறு நன்றி காட்டுவது என்பதில் கம்பருக்கு ஒரு முடிவும் ஏற்பட்டிலது. எனினும், இராமபிரானுக்கு முடி சூட்டிய நிகழ்ச்சியைக் கூறும் ஓர் அழகிய செய்யுளில் கம்பர்,

'அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாள் வாங்கப்,
பரதன் வெண்கவிகை யேந்த, இருவரும் கவரி பற்ற
விரைசெறி குழலியோங்க, வெண்ணெய்மன் சடையன் வண்மை
மரபுளோர் கொடுப்ப வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி'

என்னும் செய்யுளில் வள்ளலின் முன்னோருள் ஒருவரை இராமாயண காலத்தில் அயோத்தியில் அரண்மனைக் கருவூலக் காப்பாளராக்கி, அவர் தம் கையால் முடியை எடுத்துத்தர, வசிட்ட மாமுனிவர் அதை வாங்கி இராமபிரானுக்குப் புனைந்தார் என்று கூறித் தமது நன்றியைத் தலைக்கட்டுகிற அழகு யாவரும் உணர்ந்து இன்புறத்தக்கது.

சடையப்ப வள்ளலின் கொடைப் பயனைக் கம்பர் போன்ற கவிஞரேயன்றி, வேற்று நாட்டினரான வேந்தரும் பெற்ற செய்திகள் உண்டு. அதனால் இந்த வள்ளலின் கீர்த்தி, தமிழ் நாட்டில் மட்டுமேயன்றி வெளி நாடுகளிலும் விளங்குவதா

யிற்று. ‘ அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்றோர் கொடுத்தார் எனப்படுஞ் சொல் ’ என்பது முதுமொழி யன்றோ ?

சடையப்ப வள்ளலின் ஆதரவில் கவலையற்று உண்டு வாழ்ந்திருந்த கவிஞர் ஒருவர், நாடு காணும் பொருட்டு ஈழநாட்டை யடைந்தார். அவர், அந்நாட்டின் ஒரு பகுதியாகிய கண்டி நாட்டை எய்தி, அங்குச் செங்கோல் செலுத்தி வந்த **பரராச சிங்கன்** என்னும் மன்னனைக் கண்டார். அச்சமயம் அந் நாடெங்கும் வற்கடம் சூழ்ந்திருந்தது. தமிழறிஞனை அவ்வேந்தன் புலவரை வரவேற்று உபசரித்தான். பஞ்சத்தால் மாந்தர் பலர் பட்டினி கிடக்க நேர்ந்திருப்பதையும், பலர் மரித்து வருவதையும் அவ்வரசன் வாயிலாகப் புலவர் அறிந்தார். உடனே அவர், அவனைத் தேற்றிச் சோழ நாட்டின் உண்டி வளத்தையும், அங்கு அறத்தை வளர்த்து வந்த வள்ளலாரின் கொடைத்திறத்தையும் எடுத்துரைத்து, வள்ளலின் உதவியை நாடும்படி அவனைத் தூண்டினார். குடியோம்பிக் கோலோச்சுங் கடப்பாடுடையவனான அவ்வேந்தனும், அதற்கிசைந்து நம் வள்ளலுக்கு ஒரு செய்யுள் எழுதி விடுத்தனன். அச்செய்யுள் வருமாறு :

‘ இரவுநண்பக லாகிலென் பகலிருளா யிரவாகிலென்
இரவியெண்டிசை மாறிலென் கடலேழு மேறிலென் வற்றிலென்
மரபுதங்கிய முறைமை பேணிய மன்னர் போகிலென் ஆகிலென்
வளமை யின்புறு சோழ மண்டல வாழ்க்கை காரண மாகவே
கருது செம்பொனி னம்ப லத்திலோர் கடவுள் நின்று நடிக்குமே
காவிரித்திரு நதியிலேயொரு கருணை மாமுகில் துயிலுமே
தருவு யர்ந்திடு புதுவை யம்பதி தங்கு மன்னிய சேகரன்
சங்கரன் தரு சடைய னென்றொரு தரும தேவதை வாழவே.’

‘ வளப்பம் மிகுந்த சோழ நாட்டில் வாழும் பேறு ஒருவருக்கு வாய்க்குமாயின், இரவு நண்பகலாக மாறினுலென்ன ? பகலின்றி இரவாகவே இருப்பினும் என்ன ? சூரியன் எந்தத் திசையில் உதித்து எங்கே மறைந்தால்தான் என்ன ? ஏழுகடல்களும் பொங்கிவரினும் அன்றி வற்றி வறண்டே போயினும் என்ன ? குடிகளைக் காக்கும் நன்மரபிலுதித்த வேந்தர் வாழ்ந்தாலும்

என்ன ? தாழ்ந்தாலுமென்ன ?' என்பது இச்செய்யுள் முற்பகுதியின் பொருள்.

இவ்வித இறுமாப்புக்குக் காரணமாவது யாது என்பதை அச்செய்யுளின் பிற்பகுதி விளக்குகின்றது. அது 'அந்நாட்டில் யாவரும் கருதி வழிபடும் பொன்னம்பலத்தில் ஒரு கடவுள் நின்று நடிக்கின்றது. மேலும் காவிரியின் நடுவிலேயுள்ள திருவரங்கத்தில் கருணையே வடிவெடுத்த காளமேகம் துயில்கின்றது. மற்றும் மரங்கள் வானளாவி வளர்ந்துள்ள புதுவையில் மன்னிவாழும் தலைவனும் சங்கரவள்ளல் புதல்வனுமான சடையன் என்ற ஒரு தருமதேவதை வாழ்கின்றது' என்பதாகும்.

இப்பாடலில், சோழ நாட்டில் வாழும் பேறு ஒருவனுக்கு வாய்ப்பின், அவன் வயிறார உண்டு வாழவழியுண்டு என்பது முற்பகுதியின் கருத்து. பின், அந்நாட்டின் ஏற்றத்திற்குச் சைவ வைணவ சமயங்களுக்குத் தாயகமான இரண்டு ஸ்தலங்களும் சோழ நாட்டின்கண் அமைந்திருத்தலின் சிறப்பு உணர்த்தப்பட்டது. முடிவில் சோழநாட்டின் தனிச் சிறப்பிற்கு அடிப்படையாயுள்ளது 'தருமதேவதையின் வாழ்வு' ஒன்றே என்று சொல்லப்பட்டுள்ளது. அத் தருமதேவதையும் சடையப்ப வள்ளலே யாவார் என்று கூறி, சோழ நாட்டிற்குச் சிறப்பினை ஈட்டித் தந்தவர் 'செல்வத்தின் பயனே ஈதல்' என்ற வாக்கை மெய்ப்பித்த நம் வள்ளலே யாவார் என்பதை நிலை நாட்டுகின்றது இச் செய்யுள். மேலும் "கருது செம்பொனின் அம்பலத்தில் நடிப்பவனையும், காவிரித் திருநதியிலே துயில்கின்றவனையும் நம்பாதேயுங்கள் ; புதுவைச் சடையனுரே காப்பவர். அவரை அடைந்தவருக்குக் குறையில்லை" என்று தொனிப் பொருளும் அமையச் சமத்காரமாகக் கூறியுள்ளது அறிந்து இன்புறத் தக்கது.

இந்த அரிய பாடலைக் கண்டிராஜன் எழுதி வள்ளலுக்கு அனுப்பியதும், 'ஈதல் இயலாத விடத்து இறத்தல் இன்பந் தருவது,' என்பதைக் கடைப்பிடியாகக் கொண்ட அவ்வள்ளல் ஆயிரம் மரக்கலங்களில் நெல்மூட்டைகளை ஏற்றி விடுத்து, 'வான் பொய்ப்பினும் தான் பொய்யாத' காவிரிநாட்டின்

வளத்தையும், தம் கொடைத் திறத்தையும் நிலைநாட்டித் 'தரும தேவதை' என்ற பெயருக்கு உரியவ ரானார். கண்டி நாடும் பஞ்சம் நீங்கி உயர்ந்தது. "இறைத்த கிணறு ஊறும்" என்பதற்கு ஏற்ப வள்ளலுக்கும் செல்வம் வளர்ந்து கொண்டேயிருந்தது. இத்தகைய சடையப்ப வள்ளலை **ஆயிரத்தில் ஒருவன்** என்றார் கவியரசர். கோடியில் ஒருவர் என்று சொல்லியிருக்கலாம் என்று நமக்குத் தோன்றுகிறது, இக்கால நிலையை நோக்குமிடத்து!

---

## 5. பித்தம் தெளிய

ரா. ஸ்ரீ. தேசிகன் எம். ஏ.

மாதம் ஆனி மாதம். சாயங்காலம் ஐந்துமணி இருக்கும். ஐந்து மணி ஆகியும் வீட்டின் அறையில் புழுக்கமாயிருந்தது. வெளியிலே கடற்கரைப் பக்கம் உலாவச் சென்றேன். கடற்கரை மணல்மீது உட்கார முடியவில்லை. அங்கேயும் அனல் அடித்தது. காற்று எந்தக் கூட்டில் பதுங்கியிருந்ததோ?—தெரியவில்லை. ஆகாயத்தில் கொஞ்சங்கூடச் சலனமில்லை. வெய்யில் தணிகிறவரையில் பரீட்சை மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

நாழி ஆகவாக வெய்யிலும் குறைந்தது. குளிர்ந்த காற்றும் வீசிற்று. கடற்கரைமீது நிழலும் விழுந்தது. அங்கே துணியைப் பரப்பி விண்ணை நோக்கிய வண்ணம் படுத்திருந்தேன்.

கொஞ்சங் கொஞ்சமாய் வானும் தரையும் இருள, வானில் நட்சத்திரங்கள் வரத்தொடங்கின. பொழுது போகப் போக, ஆகாயத்தையே அவைகள் போர்த்துவிட்டன. அவைகள் ஏதோ பாடிக்கொண்டு வந்தன. கீழே பாட்டிற்கேற்பக் கடலும் தன் திரைக் கைகளைக் கொட்டித் தாளம் போட்டது. சூழ் இருட்டில் விரிந்து கிடந்த தரை, இந்தப் பாட்டை, வழிந்தோடுகிற அமைதியில் உற்றுக்கேட்டது.

என்ன பாட்டுப் பாடுகின்றன அந்த நட்சத்திரங்கள்! அந்தப் பாட்டை மனிதன் கேட்கிருனு? அவனுக்கு அவகாசம் இருக்கிறதா அண்ணுந்து பார்க்க?

நமக்கு அவகாசம் ஏது? இருள் கீறிக் கீழ்வான் நுதலில் சுடர் விட்டெரிகிற சூரியனை யார் பார்க்கிருர்கள்? சந்திரோதயக் காட்சியைக் கண்டு யார் களிப்புறுகிருர்கள்? காற்றின் இன்பத்தை யார் நுகர்கிருர்கள்? கடலின் கானத்தை யார் கேட்கிருர்கள்? இவைகள் தினசரிக் காட்சிகளானபடியால், இவைகளின் அருமையை நாம் உணரவில்லை—என நீண்ட நினைவுப் பாதையில் என் மனம் சென்று கொண்டிருந்தது.

“அகண்டமான ஆகாயத்தின் அமைதி என்னை அப்படியே திகைக்கும்படிச் செய்கிறது” என்கிருர் ஒருவர். “அளப்பிலா ஆகாயத்தைப் பார்த்து அழுவன், தொழுவன்” என்கிருர் மற்ருெருவர். இவர்களுடைய வார்த்தைகள் என் மனத்தில் எழுந்தன. ஆனுல் என் உள்ளம் தாரகைக் கணத்தின் கானத்தை நாடிற்று.

என்ன பாட்டை அவைகள் இசைக்கின்றன என்ற விஷயம் முதலில் எனக்கு விளங்கவில்லை. ஓர் இன்ப அருவி என் உள்ளத்தில் பாய்ந்தது: அந்த அருவியின் சலனத்தை உற்றுக் கேட்டேன். நட்சத்திரங்களுடைய பாட்டின் பொருள் நன்கு என் மனத்தில் பதிந்தது.

“எங்கள் உருவங்கள் மிகச் சிறியவைகள் என்று கருதி எங்களை இகழ்ந்து விடாதீர்கள். நீங்கள் காண்கிற சூரியனை விட, நாங்கள் எத்தனையோ மடங்கு பெரியவர்கள். நாங்கள் எண்ணரும் தொலைவில் இருக்கிருேம். எங்களிடமிருந்து வெளிச்சம் உங்களிடத்துக்கு வருகிறது. ஒரு விநாடிக்கு ஒரு லட்சத்து எண்பதாயிரம் மைல் வேகத்தில் வெளிச்சம் வான வெளியில் பின்னிப்பாய்கிறது. சூரியனிடமிருந்து உங்களுக்கு வெளிச்சம் வர எட்டு நிமிஷங்கள் ஆகின்றன. எங்களிடமிருந்து உங்களுக்கு ஒளி வர, பத்து வருஷங்கள் கூடச் சென்று விடுகின்றன. எங்களிடமிருந்து உங்களுக்கு வெளிச்சம் வராத மண்டலங்களும் உண்டு. இங்கிருந்து பார்த்தால், நீங்கள் இருக்கும் இடமே தெரியவில்லை. நாங்களே பொட்டுப் பொட்டாய்க்

காணப்படுகிறபொழுது, உங்களைப் பற்றிப் பேசுவானேன்? ஆனால், ஒன்றுமில்லாத கடுகத்தனை இடத்துக்கு எத்தனை கடும் போர் செய்கிறீர்கள்? எங்களைச் சற்று அண்ணாந்து பாருங்களேன்; உங்கள் பித்தம் தெளியும். எங்கள் வெளிச்சம் அழியாத வெளிச்சமென்று நினைத்து விடாதீர்கள்; அற்பாயுள் உடையவை; மெழுகு வர்த்திகள் போல அவனுடைய ஆகாய அரண்மனை வீதியில் ஏற்றிவைக்கப்பட்ட விளக்குகள் நாங்கள். அவனுடைய சங்கல்பத்தில் அத்தனை விளக்குகளும் அவிந்துவிடலாம். அவிந்து போனால், மாளாத பேரிருள் வந்து மூடிவிடும்—ஒன்றும் எங்களுக்குத் தெரியவில்லை. அவன் சங்கல்பத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்" என்று நட்சத்திரங்கள் பாடிக்கொண்டிருந்தன.

பாட்டைக் கேட்டது என் செவி; ஆகாயத்துக்கு விரைந்தது என் கண்; கடல் மணல் போல எத்தனைக் கணக்கிலா நட்சத்திரங்கள் விண்ணில் சிதறிக் கிடந்தன; இவைகள் எத்தனை மடங்கு நாம் இருக்கிற பூமியைவிடப் பெரியவை என்ற வியப்பில் ஒன்றும் எனக்குத் தோன்றவில்லை; எப்படிப் பம்பரங்கள் போல அவைகள் சுழல்கின்றன என்று எண்ணமிட்டேன்.

இங்கே நம்மிடத்தே நடந்த எத்தனை கோர யுத்தங்களை நீங்கள் கண்டிருப்பீர்கள். பிரமாண்டமான இராம இராவண யுத்தத்தை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். **ஹோமர்** பாடிய **ட்ராய்** (Troy) எரிந்தது உங்கள் ஞாபகத்தில் இருக்கிறது. அலெக்சாண்டரின் போர் முழக்கம் எங்கே? ஹனிபாலின் யுத்த வேகமெங்கே? சீசரின் பேராசை எங்கே? நெப்போலியன் கதிதான் என்ன? நெப்போலியனைப் பின்பற்றுகிற சூரர்களின் கதிதான் என்ன? கணக்கிலாக் கண்களோடு இக்காட்சிகளைக் காண்கிற உங்கள் கதிதான் என்ன? ஒன்றும் தெரியவில்லை.

ஏதோ ஒரு சக்தி இஷ்டப்படி ஆட்டிவைக்கிறது; அழிக்கிறது; அதனுடைய இயல்பு ஒரு மந்திரம்; ஓர் இரகசியம்; மனம் தடுமாறுகிறது; வாய் குழறுகிறது; சிந்தை சுழல்கிறது.

எத்தனை பெரிய மஹானோ மேதாவியோ, வீரனோ—எவனும் அவன் கையில் அகப்பட்ட துரும்பு. அதை வைத்துக்

கொண்டு தன்னுடைய காரியத்தைச் சாதிக்கிறான் ஆண்டவன். **நெப்போலியன்** ஒரு சமயத்தில் சொன்னது இப்பொழுது ஞாபகத்துக்கு வருகிறது. "ஏதோ ஒரு சக்தி என்னைத் தள்ளிக் கொண்டு போகிறது. காரியம் முடிந்தால், இதோ கிடக்கிற புல் தடுக்கிக் கீழே விழுந்து விடுவேன்" என்கிறான். நேற்று நெப்போலியன் சொன்ன வார்த்தை என்ன! கண்ணன் அர்ச்சுனனை வியாஜமாக வைத்துக்கொண்டு தன் காரியத்தை முடித்துவிட்டான். காரியம் ஆனதும் காண்டீவத்தின் மூலம் தான் தந்த சக்தியை இழுத்துவிட்டான் அம் மாயக்கள்வன். சாதாரண கோகுலத்து ஆயர்கள் அர்ச்சுனனை அடித்துத் துரத்திவிட்டார்கள். இதை உணராது பெருமிதங் கொண்டு ஏனோ வெட்டி மடிகிறோம்! "அறிவினால் விண்ணை அளக்கிறோம்; ஆனால் அன்பூற்றுக்கள் வறண்டு போய்விட்டன. அறிவுமட்டும் போதாது; அன்பும் வேண்டும். இத்தெய்வச் செயற்கையில் நாகரிகம் நிற்கும்" என்று **பெர்ட்ராண்ட் ரசல்** (Bertrand Russell) சொன்ன வேதமொழி என் செவியில் அப்பொழுது புகுந்தது. வானில் பறக்கிறோம்: கடல்மீது ஆணை செலுத்துகிறோம்; தண்ணீரின் கீழ் ஊர்கிறோம். ஆனால் மனிதனுக்கு மனிதன் பயப்படுகிற நிலையும் வந்துவிட்டது. ஐயோ! மகா சுலப ரகசியத்தை இழந்தோம்; எது கற்றென்ன! எது எழுதியென்ன; சேர்ந்து வாழும் இன்பத்தைத் தெரிந்திலோமே!

நம்முடைய அகவறுமை தீர மார்க்கம் உண்டு—பித்தம் தெளிய மருந்தொன்றுண்டு. வேத மோதவேண்டாம்; உபநிஷத்துக்கள் படிக்கவேண்டாம்; ஆகாயத்தைச் சற்று நோக்கினால், பித்தம் தெளியும். இப்படியெல்லாம் என் மனத்தகத்தே எண்ணங்கள் குவிந்தெழுந்தன; வாடுகிற என் அக உயிர்க்கு ஆராவமுதம் ஒன்று கண்டேன் என்ற எண்ணத்தால் என் சிந்தையும் கலைந்தது. முன்போல் வான வீதியில் நட்சத்திரங்கள் பாடின. கடல் திரைக்கை கொட்டி ஆர்த்தது. இருளில் மடிய தரை, விண்மீனின் கானத்தை உற்றுக்கேட்டு அமுத கீத வலையில் சுறுக்குண்டு படுத்திருந்தது. நானும் ஆகாயத்தை நோக்கியவண்ணமே இருந்தேன். இரவும் தேய்ந்து கொண்டிருந்தது.

---

## 6. கூட்டுறவுச் சங்கம்

பா. பருவதவர்த்தினி, எம். ஏ. பி. டி.

கூட்டுறவு முறை வாணிபத்தில் ஒரு தனிமுறை என்று சொல்லலாம். இலாபமட்டுமன்றிப் பொது நன்மையின் பொருட்டு நியாயமாகப் பலபேர் ஒன்றுகூடி வாணிபத்தில் ஈடுபடுவதே கூட்டுறவு முறையாகும். மேல்நாட்டில் இயந்திரத் தொழில் வளர்ச்சி பெற்றபின் வாணிபம், பெரிய வணிகர்களிடமிருந்து வந்தது. அவர்கள் இலாபம் ஒன்றே மேற்கொண்டு அதிக விலைக்குப் பொருள்களை விற்கிறார்கள். பொது மக்கள் அவர்களிலும் ஏழைகள் மிகவும் கஷ்டப்பட்டார்கள்; தங்களுக்கு மிகவும் தேவையான பொருள்களைக்கூட வாங்கமுடியாத நிலையில் இருந்தனர். முதல்முதலாக இங்கிலாந்தில் ராக்டேல் என்னுமிடத்திலுள்ள கம்பளி நெசவு செய்வோர், ஒன்றுகூடி வீட்டுக்கு வேண்டிய சாமான்கள் அனைத்தையும் குறைந்த விலையில் மொத்தமாக வாங்கிப் பங்கிட்டுக்கொள்ளும் முறை அல்லது வாங்கும் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தினார்கள்.

கூட்டுறவுச் சங்கத்திற்கும், மற்ற சாதாரண வாணிபத்திற்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. கூட்டுறவுச் சங்கமோ உறுப்பினருக்கு உதவிசெய்வதே முதல் நோக்கமாகக் கொண்டிருக்கிறது; கடன் கொடுத்தால் குறைந்த வட்டிக்குக் கொடுக்கிறது; பண்டங்கள் வாங்கினாலும் விற்றாலும் முதல் தரமான பொருள்களை மொத்த விலைக்கு வாங்கிப் பொருத்தமான விலைக்கு விற்கிறது.

கூட்டுறவு இயக்கத்தில் சிறந்த கொள்கைகள் என்னவென்றால், தாமே தமக்குதவுதல், சிக்கனம், ஒருவருக்கொருவர் உதவுதல் ஆகிய இம்மூன்றுமாகும். இவற்றின் மூலம் அங்கத்தினரின் பொருளாதார நிலையை உயர்த்தத் தொடங்குகின்றனர்.

மற்றெல்லா நாடுகளைவிடப் பயிர்த்தொழிலில் உயர்ந்த நிலையில் இருக்கும் டென்மார்க்கு, கூட்டுறவு இயக்கங்களில் தலை சிறந்து விளங்குகிறது. மிக முன்னேற்றமடைந்த அமெரிக்கரும் டென்மார்க்கு மக்களின் ஊக்கத்தையும், கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பையும் கண்டு வியக்கின்றனர் என்றால், அதன் சிறப்பு

என்னென்று கூறுவது ! ஒவ்வொரு குடியானவனும் குறைந்தது இருபது கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினனா யிருப்பான். அவனுக்குத் தேவையான எல்லாவிதப் பொருள்களையும் வாங்குவதும் விற்பதும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே நடைபெறுகின்றன. டென்மார்க்கில் இருக்கும் மிக ஏழைக் குடியானவனும் இன்பமாகக் கடன்படாமல் வாழ்க்கையை நடத்துகிறான். நம்முடைய இந்தியர் முன்னேறுவதற்குக் கூட்டுறவு இயக்கங்கள் மிகவும் உதவி செய்யக் கூடியனவாகும்.

முதன் முதலாக இந்தியாவில் எப்பொழுது இந்தக் கூட்டுறவு இயக்கம் தொடங்கிற்று என்று ஆராய்வோம். 1880-ம் ஆண்டிலேயே பூனாவில் விவசாய பாங்கியும், சென்னையிலிருக்கும் "நிதி"யும் ஆரம்பமாயின. ஆனால் 1892-ம் ஆண்டில் சென்னை அரசாங்கத்தார், பிரெட்ரிக் நிக்கல்சன் என்பவரை மேல்நாட்டுக் கூட்டுறவு முறையை எம்முறையில் இந்தியாவில் கையாளலாம் என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய நியமித்தார்கள். அவர், தமது அறிக்கையில் நியாயமான வட்டிக்குக் கடன் கொடுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமங்களில் ஏற்படுத்த வேண்டுமென்று வெளியிட்டார். இந்திய அரசாங்கத்தார், இதை மற்ற மாகாணங்களுக்கும் தெரிவித்தார். ஐக்கிய மாகாணத்திலிருந்த டியூப்பர்னே என்பவர் அந்த மாகாணத்தில் ஓர் ஆராய்ச்சி நடத்தி அதன் பலனையும் ஓர் புத்தக வாயிலாக வெளியிட்டார்.

சென்ற நூற்றாண்டில் பல பாகங்களில் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில் மக்கள் இவ்விருவர்களின் வெளியீட்டில் கவனம் செலுத்தினார்கள். இது கமிட்டியின் முன்னிலையில் பரிசீலனை செய்யப்பட்டு 1904-ல் கடன் கொடுக்கும் கூட்டுறவுச் சங்கச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டம், இந்திய உழவர்களுக்கு மிகவும் பயன்பட்டது. சங்கங்களைக் கண்காணிப்பதற்கு ரிஜிஸ்ட்ரார் நியமிக்கப்பட்டார்கள்.

1904-க்குப் பிறகு கூட்டுறவுச் சங்கங்கள், பெரிதும் வளர்ச்சியுற்றன. 1912-ல் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுப் புதிய சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன.

இந்திய அரசாங்கத்தார் கடன் கொடுப்பவர்களின் பிடியி லிருந்து ஏழைப் பொதுமக்களை விடுவிக்கக் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுப்பதற்கெனக் கூட்டுறவுச் சங்கங்கள் முதன்முத லாக 1904-ல் ஏற்படுத்தினார்கள்.

மற்றெல்லாக் கூட்டுறவுச் சங்கங்களிலும் முக்கியமானது கடன் கொடுக்கும் கூட்டுறவுச் சங்கமாகும். அவை இரண்டு வகைப்படும். ஒரு வருடம், அல்லது இரண்டு வருடம், அல்லது ஐந்து வருடத்திற்குள் திருப்பிக் கொடுக்கும் கடன் ; அதாவது ; குறுகியகாலக் கடனும், இடைக்காலக் கடனும் கொடுக்கும் சங்கமும் இருபது வருஷத்திற்குள் திருப்பிக் கொடுக்கும்படி யான நீண்டகாலக் கடன் கொடுக்கும் கூட்டுறவுச் சங்கமும் ஏற்பட்டிருக்கின்றன. குறுகியகாலக் கடனும், இடைக் காலக் கடனும் அங்கத்தினர்களின் முக்கிய தேவையின் பொருட்டு இருக்கின்றன. அதாவது நிலத்தை உழுவதன் செலவுக்காகவும், முன் கடனைத் தீர்க்கவும், வண்டி மாடு வாங்கவும், கிணறு முதலியன வெட்டவும் கடன் கொடுக்கப்படு கிறது. குறைந்த வட்டி வாங்கப்படுகிறது. நீண்டகாலக் கடனும் விவசாயிகளுக்குத் தேவையாக இருக்கும். அதிக சீக்கிரத்தில் திருப்பிக் கொடுப்பது ஏழைக் குடியானவர்களுக்கு எளிதன்று. முன்னே வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கவும், நிலத்தில் அவ்வப்பொழுது சீர்திருத்தம் செய்யவும் நீண்டகாலக் கடன் வேண்டியதாயிருக்கும். இந்தக் கடனை நில அடமானக் கூட்டுறவு பாங்கி கொடுக்கிறது.

கடன் கொடுக்கும் சங்கங்கள் கடன் கொடுப்பதே முக்கிய வேலையாகக் கொண்டாலும், சில மாகாணங்களில், அதுவும் சென்னையில் பிறவேலைகளும் செய்யச் சட்டப்படி அனுமதிக்கப் பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு வேண்டிய விதை, எரு, கருவிகள் முதலியன வாங்கவும் விற்கவும் சங்கங்கள் உதவி புரிகின்றன. சில சங்கங்கள் சிறந்த வேலையைச் செய்திருக் கின்றன. கரும்புபிழியும் இயந்திரம், எண்ணெய் எடுக்கும் இயந்திரம் முதலியவற்றைச் சங்கங்களே வாங்கிக் குறைந்த தொகைக்கு வாடகைக்கு விடுகின்றன ; உணவுப் பஞ்சமாகிய காலத்தில் மக்களுக்குப் பெரிதும் உதவி யளித்திருக்கின்றன ; தானியங்கள், சர்க்கரை, மண்ணெண்ணெய் முதலியவற்றை

வாங்கி அங்கத்தினர்களுக்கும், பிறர்க்கும் சில கட்டுப்பாடு களுடன் விற்கின்றன; கள்ள வாணிபத்தை அதிகமாகக் குறைத் திருக்கின்றன. ஆடுமாடுகள் வளர்க்க, கோழிப்பண்ணை வைக்க, கயிறு, பாய் முதலிய தொழில் வளர்ச்சியடைய அநு கூலம் உண்டு.

ஆகவே, இதுவரையில் கூட்டுறவுச் சங்கம் யாதென்றும், மேல்நாடுகளில் எப்படி அது தோன்றிற்று என்றும், முக்கிய மாக டென்மார்க்கில் எப்படி இதன் வேலை சிறப்பாக நடக்கிற தென்றும், இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் எப்போது வந்த தென்றும், அது எவ்வாறு இந்திய விவசாயிகளுக்கு மிகுந்த நன்மையளிக்கும் என்றும், கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக எம்முறையில் கடன் கொடுக்கிறார்கள் என்றும், மற்ற கூட் டுறவுச் சங்கங்கள் எவ்வாறு வேலை செய்கின்றன என்றும் படித் தோம்; இந்தியா பொருளாதாரத் துறையில் முன்னேற்ற மடையக் கூட்டுறவுச் சங்கங்களே மிகுந்த உதவி அளிக்கும் என்பதை நாம், அனைவரும் உணர்ந்து அவற்றில் உறுப்பினர் களாகச் சேர்ந்து அச்சங்கங்களை வளர்ப்போமாக.